# சிந்தனை அமுதத் துளிகள்

தொகுப்பாசிரியர்

**இராமசாமி கிருஷ்ணபிள்ளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை அமுதத் துளிகள்

தொகுப்பாசிரியர்

**இராமசாமி கிருஷ்ணபிள்ளை**

பதிப்பாசிரியர்

**திலகா சிவகுமார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயம் :
சிந்தனை அமுதத் துளிகள்

நூலாசிரியர் :
இராமசாமி கிருஷ்ணபிள்ளை

பதிப்பாசிரியர் :
திலகா சிவகுமார்

முதற் பதிப்பு :
ஏப்பிரல் 2010

பதிப்புரிமை :
திலகா சிவகுமார்

அட்டை அமைப்பு :
M.S.றமீஸ்

அச்சு வடிவமைப்பு :
கௌரி சதானந்தன்

வெளியீடு :
இராஜசுந்தரம் சிவகுமார்
மார்க்கம், ஒன்ராறியோ,
கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

யாழ்ப்பாணம் ஸ்ரான்லிக் கல்லூரியில் ஆசிரியராக இருந்து ஓய்வுபெற்றவரும், இப்பொழுது கனடாவில் வாழ்ந்து வருபவருமாகிய திரு.இராமசாமி கிருஷ்ணபிள்ளை என்பவர் தமது ஆத்ம சுத்திக்காக அடிக்கடி வாசித்து, சிந்திப்பதற்கெனத் தமிழ் நூல்களிலிருந்து தொகுத்து சிந்தனை அமுதத் துளிகள் என்ற தலையங்கத்தின் கீழ் எழுதி வைத்திருந்த தொகுப்பை அவருடன் மிக நெருங்கிப் பழகியவராகிய நான் அவரிடமிருந்து பெற்று அதனை வாசிக்கும் ஒரு அரிய சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டது.

பல்வேறு காலப் பகுதிகளில் அவரால் கையெழுத்துப் பிரதிசெய்யப்பட்ட இலக்கிய மணித்துளிகள் சிறுசிறு தொகுதிகளாகச் சேர்த்து வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு தொகுதியிலும் பெறற்கரிய தமிழிலக்கியச் சொத்துக்கள் விரவிக் காணப்பட்டன.

அவற்றினை ஒன்றாக்கி உள்ளடக்கத்திலும் உருவத்திலும் எந்த மாற்றமும் செய்யாது ஒரு கோவையாக வைத்துப் பாதுகாக்கவேண்டும் என்பதனை அடிப்படை நோக்கமாகக் கொண்டு தனித்தனியான பகுதிகளாக ஒழுங்குபடுத்தி இத்தொகுப்பை வெளியிட வேண்டுமென்ற எனது விருப்பத்தினை வெளியிட்டுவைப்பவரிடம் கூறியபொழுது மறுப்பில்லாமல் மனம் உவந்து சம்மதித்தார். இத்தொகுதி அச்சில் வெளிவருவது மகிழ்ச்சியளிப்பதுடன் எல்லோருக்கும் பயன்படுமென்ற நம்பிக்கையும் மேலோங்கியிருக்கிறது.

C.V.இராஜசுந்தரம்
14.04.2010
கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

யாழ்ப்பாணம் ஸ்ரான்லிக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திரு.இராமசாமி கிருஷ்ணபிள்ளை அவர்கள் தற்பொழுது கனடாவில் வாழ்ந்துவருகிறார். அறிவுத் தேடலுக்கான ஆழ்ந்த வாசிப்பினை அவர் இயல்பாகவே கொண்டிருந்தார். இதன் பெறுபேறாக அடிக்கடி சிந்தித்து நினைவுகூருவதற்காக பல அரிய சிந்தனைத் துளிகளை தமிழ் நூல்களிலிருந்து தொகுத்துவைத்திருந்தார்.

நீண்டகால முயற்சியின் விளைவாக, பதிவிற்கொண்டு வரப்பட்டிருந்த சிந்தனைக் குறிப்புகளை அனுபந்தங்கள் உட்பட 56 தொகுதிகளாகத் தொகுத்துவைத்திருந்தார். இக்குறிப்புகள் யாவும் ஒரே காலத்தில் தொகுக்கப்பட்டிராத காரணத்தால் 'கூறியது கூறல்' என்ற தவறு இருப்பது தவிர்க்க இயலாததாக இருந்தது. அறிவும், ஆன்மீகமும் கலந்த சிந்தனைத் தொகுப்பாக இது இருப்பதனால், குறிப்புகள் மீளவும் வருவதில் ஒரு காரணம் இருப்பதனை ஊகிக்க முடிந்தது. விடயங்களை அழுத்திக் கூறுவதும், உச்சாடனம் செய்வதுமான இரு நிகழ்வுகளும் 'கூறியது கூறல்' ஆகிய தவறுக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளாகும்.

இந்த அரிய தொகுப்பு தமிழர்களுக்குப் பல நன்மைகளைக் கொடுக்கவல்லது என்ற காரணத்தால், இத்தொகுப்பை புத்தக வடிவில் வெளியிடத் தீர்மானித்து அவரது சம்மதத்தை வேண்டிநின்றோம். அவரும் மனமுவந்து இத்தொகுப்பினை எமக்குக் கொடுத்திருந்தார்.

தமிழ் பேசும் மக்கள் இத்தொகுப்பினை வாசிப்பதன் மூலம் பல அரிய நன்மைகளைப் பெறலாம் என்பதில் எந்தவிதமான ஐயமுமில்லை. 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற முதுமொழிக்கிணங்க, ஆன்மீகமும் ஆத்மசுத்தியும் கலந்து வழிவந்த குறிப்புக்களை எல்லோரும் வாசிப்பதன்மூலம் அவர்களை நல்லாற்றுப் படுத்தச்செய்யும் நோக்கத்துக்காக இத்தொகுப்பைப் புத்தகமாகப் பதிப்பிப்பதில் மிகவும் பெருமைப்படுகிறேன்.

திலகா சிவகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

## நூலாசிரியர்

எப்போதும் நன்றாம் மௌனம் அதனுள்ளும்
வெறுப்பொடு வெகுளி கௌவும் வேளை.

உணர்ச்சிகள் உருத்தெழும் வேளை மௌனம்
உடன்நின்று உறுதுணையாய் உதவும்.

ஒன்றாகப் பற்றுக மௌனத்தை அஃதென்றும்
உறுதுணையாய் நிற்கும் உனக்கு.

குற்றம் களையும் கொடிய இடர்போக்கும் மௌனம்
கற்றறிந்தார் நாடும் கருவி.

எற்றென்று இடருற்று எழும்சோகம் தவிர்ப்பானேல்
மற்றொன்றாய்ப் பற்றுக மௌனம்.

என்றும் இடும்பை ஒடுக்கும் இகல் ஒழிக்கும்
நன்றாம் மௌனம் நமக்கு.

ஆன்ற பொருளாம் அடக்கத்தை மௌனத்தால்
தோன்றாத் துணையாக்கிக் கொள்.

சொல்லில் அடங்காச் "சும்மாவிரு"க்கும் நிலை மெல்ல
மௌனத்தால் வந்தெய்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | உண்மையான தவறு எது | 1 |
| 2. | மௌனம் சர்வரோக நிவாரணி | 5 |
| 3. | ஆள் வேறு விஷயம் வேறு அல்ல | 9 |
| 4. | ஒவ்வொரு பொருளுக்கும் இடமுண்டு | 13 |
| 5. | செய்யவேண்டிய கருமங்கள் புறக்கணிக்கப்படுகின்றன | 16 |
| 6. | உண்மைக்கு ஒரு சாட்சி பொய்சொல்லப் பலசாட்சி | 20 |
| 7. | நல்லாரை நாவிலுரை | 23 |
| 8. | நல்லொழுக்கம் | 25 |
| 9. | அஞ்ஞானம் | 28 |
| 10. | உன்னையே நீ அறிவாய் | 32 |
| 11. | திருக்குறளமுதம் | 35 |
| 12. | தீயவை அகற்று | 39 |
| 13. | அகந் தூய்மை | 42 |
| 14. | ஒரு பொல்லாப்பும் இல்லை | 44 |
| 15. | உண்மையான சுகம் | 47 |
| 16. | காலம் போம் - வார்த்தை மிஞ்சும் | 50 |
| 17. | ஆன்ம விசாரம் | 53 |
| 18. | நெஞ்சை ஒழித்தொரு வஞ்சகமில்லை | 56 |
| 19. | ஈத்துவக்கும் இன்பம் | 59 |
| 20. | விதியின் பங்கு | 62 |
| 21. | நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சன்னிதி | 65 |
| 22. | எல்லாம் சிவன் செயல் | 67 |
| 23. | நல்லறிவு | 70 |
| 24. | தன்னையறி | 73 |
| 25. | மெய்விளக்கு உன்னுள்ளிருக்கு | 75 |
| 26. | எல்லாம் வெளிமயக்கே | 78 |
| 27. | உள்ளக் கருத்து | 81 |
| 28. | புலனடக்கம் | 83 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 29. | பகவத் கீதையிலிருந்து (தொகுதி 1) | 86 |
| 30. | பகவத் கீதையிலிருந்து (தொகுதி 2) | 89 |
| 31. | கேட்டினும் உண்டோர் உறுதி | 91 |
| 32. | பற்றுக பற்றற்றான் பற்றினை | 94 |
| 33. | ஆன்ம விசாரம் - பகுதி 1 | 97 |
| 34. | ஆன்ம விசாரம் - பகுதி 2 | 100 |
| 35. | பொது நோக்குடைய சைவ சித்தாந்தம் | 103 |
| 36. | பூரண மாலை (பட்டினத்தார் பாடல்கள்) | 106 |
| 37. | மெய்ஞ்ஞான நாட்டம் | 109 |
| 38. | ஆத்ம சிந்தனை | 112 |
| 39. | தாயினும் நல்ல தயாளு | 115 |
| 40. | தெய்வ ஒளி | 118 |
| 41. | பார்த்தவிடம் எல்லாம் பரம் | 120 |
| 42. | ஆறுமுக நாவலர் | 123 |
| 43. | இலகிய இரக்கம் | 126 |
| 44. | அன்ன விசாரம் அதுவே விசாரம் | 129 |
| 45. | சினம் காத்துக்கொள்ளும் குணம் | 131 |
| 46. | அற்கா இயல்பிற்றுச் செல்வம் | 134 |
| 47. | ஔவையார், சிவப்பிரகாச சுவாமிகள் பாடல்கள் | 137 |
| 48. | நாயக்க மன்னர் காலத்துப் பாடல்கள் - விவேகசிந்தாமணி | 139 |
| 49. | தீங்கினரிடமிருந்து நீங்குவதே நல்ல நெறி | 143 |
| 50. | தீயவை தீயினும் அஞ்சப்படும் | 146 |
| 51. | மக்கட் பண்பு | 149 |
| 52. | எண்ணித் துணிக கருமம் | 151 |


**அனுபந்தம்**


| | | |
|---|---|---|
| 1. | திருமூலர் திருமந்திரத் தெள்ளமுதம் | 154 |
| 2. | மனிதா சிந்திப்பாய் | 155 |
| 3. | மனமே உனக்கு உபதேசம் இதோ! | 157 |
| 4. | சிந்தனை செய் மனமே | 159 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. உண்மையான தவறு எது

- உண்மையான தவறு எது எனின் தவறுகள் இவையென்று தெரிந்தும் அவற்றை நீக்க முயலாதிருப்பதுதான். - கொன்பியூசியஸ்
- ஞானிகளே உண்மையான செல்வர்கள் என்ற உண்மையை உணர்ந்தவனே பாக்கியசாலி.
  - பிளேட்டோ
- அநீதி தனக்குத் தானே எதிரியாகிறது.
  - பிளேட்டோ
- பொன்னைவிட அதியுயர்ந்த பொருளாகிய நீதியைத் தேடிக் கண்டுபிடியுங்கள்.
  - பிளேட்டோ
- அநீதி எப்பொழுது உச்சநிலை அடைகிறதென்றால் அது நீதியைப்போல வேஷம் போடும்போதுதான். - பிளேட்டோ
- நீதிமானைப்போல் வேஷம்போடும்போதுதான் ஒரு அநீதிக்காரனுக்கே அதிகாரஆற்றல் சித்திக்கிறது.
  - பிளேட்டோ
- அறியாமைதான் துன்பத்தின் மூல வேர்.
  - பிளேட்டோ
- படகு நீரில் இருக்கலாம்; ஆனால் நீர் படகுக்குள் நுழையலாகாது. மனிதன் உலகில் வாழலாம்; ஆனால் உலக ஆசைகள் அவன் உள்ளத்தில் புகுந்துவிடலாகாது.
- வேகமாய் ஓடுபவர் பந்தயத்தில் எப்பொழுதும் முதலிடம் பெறுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மற்றவர்களுக்குப் படுகுழி தோண்டுபவன் நிச்சயம் அதற்குள் தானே விழுந்து மடிவான்.

- நாவடக்கிப் பேசுவதால் நல்ல வார்த்தைகளே மிஞ்சும்.

- ஒரு கோரமான துன்பம் நிறைந்த அழிவு உன் மனதை அச்சுறுத்தும்போது ஒரு மகத்தான சிருஷ்டியும் வரவிருக்கிறதென்று ஆறுதல் கொள்.
  - அரவிந்தர்

- இந்த உலகில் போனால் திரும்பிவராத மூன்று: காலம், மானம், உயிர்.

- இவ்வுலகில் தேடவேண்டிய செல்வம் அறிவுச் செல்வமே. அது ஒன்றேதான் கவலைகளைப் போக்கி மனச் சாந்தியைத் தரும்.

- சரி எது, பிழை எது என்ற விசாரத்தால் வருவது ஞானம்.

- பாத்திரம், இடம், காலம் அறிந்து பேசுவதை அளந்து பேசவேண்டும்.

- எந்த மனிதனுக்குத் தேவைகள் குறைவோ அவனே உண்மையில் செல்வன்.

- தன் குற்றங்களைத் தானறிந்தவனே அறிவாளி.

- யதார்த்தத்தைப் புரியாத பிற்போக்குவாதிகள் கல்லைத் தூக்குவது தங்கள் காலில் போடவே.
  - சீனப் பழமொழி

- அறிவது அறிந்து அடங்கி அஞ்சுவதன்றி, உறுவது உலகுவப்பச் செய்க. - நாலடியார்

- நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை நிலைகலக்கிக் கீழிடுவானும் தான்.
  - நாலடியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புல் நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி இன்னினியே செய்க அறவினை.

  \- நாலடியார்

- இன்று மனித வாழ்க்கை யோகம், ரோகம், சோகம் என்பவற்றை அனுபவிப்பதாகவே அமைந்திருக்கிறது.

- மெய்யுணர்வு எவ்வளவு பெற்றிருக்கிறானோ அவனே செல்வன்; அதில்லாதவன் வறியவன்.

- தெளிவு, துணிவு, கனிவு - இம்மூன்றும் இல்லாமையே எல்லாப் பிரச்சினைகளுக்கும் காரணம்.

- எது எது,
  எப்பொழுது எப்பொழுது,
  எப்படி எப்படி நடக்க வேண்டுமோ
  அது அது,
  அப்பொழுது அப்பொழுது
  அப்படி அப்படி நடந்தே முடியும்.

- அல்லவை செய்தார்க்கு அறங் கூற்றாகும்.

- கணப்பொழுது மதிகெட்டுத் தவறு செய்பவன் காலமெல்லாம் தண்டனை அனுபவிப்பான்.

- பகுத்தறிவு சாகும்போது ஞானம் பிறக்கிறது.

  \- அரவிந்தர்

- அடாது செய்பவர் படாதுபடுவர்.

- அடக்கமென்பது தன்னைத்தான் சரியாக மதிப்பிட்டுக் கொள்ளுதலாகும்.

- தீவிரமாயேனும் மந்தமாயேனும் நல்வினை இன்பத்தையும் தீவினை துன்பத்தையும் வருவிக்கும். - நாவலர்

- காயத்தாலும் வாக்காலும் மனத்தாலும் தன்கண் நிகழ்வதைப் படிப்பதே படிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பரிபூரண அன்பு கட்டுப்படுத்தாது; கட்டளை செய்யாது.
- மனிதன் தீண்டாமலும் தீண்டப்படாமலும் வாழவேண்டும்.
- தாம்தாம் முன்செய்த வினை தாமே அனுபவிப்பர்.
- நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்.
- முற்பகல் செய்யில் பிற்பகல் விளையும்.
- தன்வினை தன்னைச் சுடும்.
- கேடுவரும் பின்னே, மதி கெட்டுவரும் முன்னே.
- ஒருமுறை செய்யும் தவறு வாழ்க்கை முழுதும் வேதனை தரும்.
- சினம் சீறும்பொழுது அறிவு செத்துவிடுகின்றது.
- புகழ்தேட யுகம் வேண்டும்; இகழ்தேட நொடி போதும்.
- எதற்கும் எந்நேரமும் ஆயத்தமாயிரு.
- அறிவாளி எவனிடமும் எதையும் இனாமாகப் பெறமாட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. மௌனம் சர்வரோக நிவாரணி

- மௌனம் ஒரு சர்வரோக நிவாரணி
- கண்மூடி மௌனியாய் இருப்பதுவே சுகம், சுகம்!
- மௌனம் என்பது தவம்.
- மௌனம் கைவரப்பெற்றவர்கள் பாக்கியசாலிகள். ஏனென்றால் அவர்கள் மற்றவர்களைத் தம் வார்த்தைகளால் சுட்டெரிக்க மாட்டார்கள்.
- மௌனம் குடிகொண்ட நெஞ்சில் உண்மையொளி வீசும்.
- மனச்சாந்தியின் திறவுகோல் மௌனமே.
- ஆன்ற பொருளாம் அடக்கத்தின் உற்ற நண்பன் மௌனம்.
- ஒருவனுக்கு உறுதுணையாய் என்றும் உடன் நிற்பது மௌனம்.
- பின்னின்னா பேதையர் நட்பு; முன்னின்னா மூத்தோர் வாய்ச்சொல்.
- பெருமையும் சிறுமையும் தான்தர வருமே.
- நன்றும் தீதும் பிறர்தர வாரா.
- பொல்லாங்கென்பவை எல்லாம் தவிர்.
- நல்லவை செய்தல் ஆற்றீராயினும் அல்லவை செய்தல் ஓம்புமின்.
- எவரையும் எக்கணத்திலும் மரணத்துக்குரியவராகவே தெளிய வேண்டும்.
- பெருஞ்செயல் அமைதியிலிருந்து பிறக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பேசாத பேச்சுக்குக்கு நீ எசமான்; பேசிய பேச்சு உனக்கு எசமான்.
- போனது போகட்டும். புத்தியாய் இனி நட.
- செல்வம் என்பது சிந்தையின் நிறைவே.
- அகங்காரம் வரும்போது அதன் பின்னே அவமானமும் வந்துசேரும்.
- மோனமென்பது ஞான வரம்பு.
- தீயோன் ஒருவன் துறந்த ஞானிபோல் நடிக்கும்போது மேலும் மேலும் மோசமாகிறான்.
- கஷ்டங்கள் மனிதனை உற்சாகப்படுத்துவனவே அன்றி தைரியத்தைக் குறைப்பதற்காக வருவதில்லை.
- இயற்கையின் விதிகளை மீறுவோருக்கு அது அளிக்கும் தண்டனையே நோய்.
- புல்லறிவாளன் தான்கொண்டது விடாமையால் அவனுக்கு நல்லன கூறுவான் அவனால் அவமதிக்கப்படுவான்.
- மனிதனது உண்மையான தோற்றம் அவனது எண்ணங்களேயாகும்.
- ஒவ்வொரு துன்பமும் ஒரு வழிகாட்டி. அதுவே நன்மைக்குத் தூண்டுகோலாகும்.
- மிகவும் தனிமையாய் நிற்பவனே உலகில் தலைசிறந்த வலிமையுள்ள மனிதன்.
- அறிவாளி தன் இரகசியங்களைத் தனக்குள்ளே வைத்துக்கொள்வான்.
- இயற்கையின் விதிகள் நீதியானவை; ஆனால் பயங்கரமானவை.
- மனிதனது உண்மையான தோற்றம் அவனது எண்ணங்களேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒவ்வொரு துன்பமும் ஒரு வழிகாட்டி. அதுவே நன்மைக்குத் தூண்டுகோலாகும்.
- மிகவும் தனிமையாய் நிற்பவனே உலகில் தலைசிறந்த வழிகாட்டி. அதுவே நன்மைக்குத் தூண்டுகோலாகும்.
- தருமத்தை நோக்காது தனது கருமத்தை நோக்கலாகாது. – தருமபுத்திரன் - பாரதம்
- மெல்லத் தெரிந்து சொல்.
- உன் வாழ்க்கையில் எதையும் இழக்க நேர்ந்தால் அது உன் உயிருக்குச் சமமானதாக இருந்தாலும் அதைப்பற்றி வருந்தாதே.
- இன்னதுதான் இப்படித்தான் என்பதெல்லாம் பொய்க் கணக்கு.
- பிறர்மேல் சாராது நிற்பதுதான் உண்மைச் சுதந்திரம்.
- மனிதன் எண்ணங்களே அவன் வாழ்வு.
- நீ கவனிக்க வேண்டிய காலம் நிகழ்காலமே.
- வறுமையும் செல்வமும் இருவகை நோய்கள். – வினோபா
- நல்லவர் நல்மொழி உரைப்பர்; ஆனால், நன்மொழி உரைப்பவரெல்லாம் நல்லவரல்லர்.
- எதையும் எவரிடமும் எதிர்பாராதவனுக்கு ஏமாற்றம் இல்லை. அவனே ஞானி.
- அறிவு கைவரப்பெற்றவன் அடக்கமுடையவனாய் இருப்பான்.
- அறிவதறிந்து அடங்கி, அஞ்சுவதஞ்சி உறுவதுலகு உவப்பச் செய்பவர் இன்பம் எய்துவர்; எஞ்ஞான்றும் துன்பமுறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மூட நம்பிக்கை அறியாமையின் குழந்தை; வேதனையின் அன்னை.
- உன்னைத் திருத்து. உலகம் திருந்தும்.
- ஆன்றோர் காணார் எனச் செய்யார் மாணாவினை.
- இன்பமும் துன்பமும் மனமென்னும் தாய் பெற்றெடுத்த இரட்டைக் குழந்தைகள்.
- சேரிடம் அறிந்து சேர்.
- கூரம்பாயினும் வீரியம் பேசேல்.
- போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து.
- திருப்தியே வாழ்க்கையில் பெறமுடியாத அரும்பெருஞ் செல்வம்.
- குறுக்கு வழிகளும் கோணல் நடத்தையும் ஒருபோதும் மனிதனுக்கு இன்பத்தைக் கொடுத்ததில்லை.
- உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதோ செய்வதோ கயமையிலும் கடையாய கயமை.
  - குரு கோவிந் சிங்
- சுயநலமென்பது ஒரு சிறு உலகம். அதில் ஒரேயொரு மனிதன் மட்டுமே வாழமுடியும்.
- நடக்குமென்பார் நடக்காது; நடக்காதென்பார் நடந்துவிடும்.
- ஒரு மனிதன் தனது நாக்கை எப்படிப் பயன்படுத்துகிறானோ அதைப் பொறுத்தே அவன் பெருமையும் சிறுமையும் அடைகின்றான்.
- பொல்லாத காலம் சொல்லாமல் வரும்.
- அதர்மத்தில் உறுதிகொண்ட எவரும் தோல்வியையும் அழிவையும் தவிர்க்க முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒரு பொருளைப் பெறும் சந்தோஷத்திலும் பார்க்க அதைப் பெற்று இழக்கும்போது வருந்துன்பம் நூறு மடங்கு அதிகமானது.
- விடியாத இரவு என்று ஒன்று என்றுமே இல்லை. இரவு வந்தால் அதைத் தொடர்ந்து பகல் கட்டாயம் வரும்.

## 3. ஆள் வேறு விஷயம் வேறு அல்ல

- ஆள் வேறு விஷயம் வேறு அல்ல; ஆளைவிட்டு விஷயம் இல்லை.
- ஒருவன் ஒன்றைச் சொல்லுமுன் ஆளை அறிந்து சொல்லவேண்டும். ஆளுக்குத் தக்கினதுதான் விஷயமும்.
- முட்டாளின் வாய்க்கும் நாசத்துக்கும் அதிக தூரம் இல்லை. - பைபிள்
- உண்மைகள் சாவதில்லை; பொய்யும் கபடமும் வெல்லுவதில்லை; அநீதி நிலைப்பதில்லை.
- பொய்யைச் சாதிக்க முயல்பவர்கள் முடிவில் தோல்வியைத் தழுவித் தலைகுனிந்து துன்பம் அனுபவிப்பர்.
- தீயவற்றைச் செய்வதற்கு அஞ்சும் அச்சமோ, பழியைக் கண்டால் நாணும் நாணமோ மூடர்களுக்கு இருப்பதில்லை.
- நீதி இறுதியில் வெல்லும்; அநீதி இறுதியில் தோல்வியுறும். உண்மை முடிவில் வெல்லும்; பொய்யும் சூழ்ச்சியும் முடிவில் தோல்வியுறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நியாயமே வலிமை என்கிற உறுதி நமக்கு இருக்கவேண்டும்.
- எவருக்கும் மரணம் நிச்சயம்; இரட்டை வேடம் போடுபவனுக்கு மரணம் நித்தியம்.
- தன்னயைறிந்தொழுகுவோர் தன்னை மறைப்பர்; தன்னையறியாதவரே தன்னைக் காட்டுவார்.
- ஆசைப்பட ஆய்வரும் துன்பங்கள்; ஆசை விடவிடஆனந்தமாமே.
- விடுதலையென்பது போராட்டத்தினூடாகவே வென்றெடுக்கப்படுகிறது. அது எவரதும் அன்பளிப்பாகத் தரப்படுவதில்லை.
- அனுபவம் என்பது தலையில் வழுக்கல் விழுந்தபின் வாழ்க்கையில் கிடைக்கும் சீப்பு போன்றது.
- அரசியல் பொய்யர்களின் பிறப்பிடம்; அவர்களின் புகலிடமும் அதுவே.
- பணம் அறிஞர்க்குச் சேவை செய்கின்றது; முட்டாள்களை ஆட்சிசெய்கின்றது.
- அறியுந்தோறும் அறியுந்தோறும் வெளிப்படும் அறியாமையே ஞானத்தின் உதயமாகும்.
- ஒருவன் தன் நினைவின் வழியே செல்கின்றான்; அதன் மயமாகவே ஆகிறான்.
- நீதி அரசியலின் ஆணிவேர்.
- உலகில் நியதியின்படி நீதி நடக்கிறது; நீதியின்படி நியதி அமைகிறது.
- உலகத்தில் நாம் சுகமென்று கருதுகிற ஒவ்வொரு சுகத்திற்குப் பின்னேயும் துக்கம் காத்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நீ பலவானாக இருக்க விரும்பினால் உன்னுடைய பலவீனங்களை அறிந்துகொள்.
- நிதி பின் கதவால் வீட்டில் நுழைய நீதி முன் கதவால் வெளியேறுகின்றது.
- சாக்கடைக்கு விளம்பரம் வேண்டியதில்லை; பூக்கடைக்கும் விளம்பரம் வேண்டியதில்லை.
- அதிகம் பேசுபவர் சிந்திப்பதில்லை.
- அதர்மம் அழிக்கும்; அழியும். தர்மம் ஆக்கும்; ஆகும்.
- வரலாற்றைப் படியாதவர் பழைய வரலாற்றைத் திரும்பவும் புரிவர்; அதனைப் படித்தவர் வேறு வழிகளில் தவறாக நடக்க வழிகாண்பர்.
- நாம் பாதுகாக்க வேண்டிய பொருட்களை விட நம்மைப் பாதுகாக்கும் கல்வி மிகமிக உயர்ந்தது.
- காம விகாரம், சூதாட்டம், குடிப்பழக்கம் இவை மனிதனை தெரிந்தே ஏமாற்றி இழுத்துக் குழியில் தள்ளுகின்றன.
- மாசுறு செல்வம் சேர்த்தால் மதிகெடும்; நிதிதான் மிஞ்சும்.
- முதலில் தூசியைக் கிளப்பிவிடுகின்றோம். பின்னர் பார்க்க முடியவில்லை என்று முறையிடுகின்றோம்.
- அரசியல்வாதி அடுத்த தேர்தலைப்பற்றி சிந்திக்கின்றான்; அரசியல் ஞானி அடுத்த சந்ததியைப் பற்றிச் சிந்திக்கின்றான்.
- ஒருவனிடம் இருக்கவேண்டியது மூன்று : தூய்மை, நீதி, நேர்மை – மகாவீரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உலகம் உன்னைப் புரியுமுன் நீதான் உலகத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.
- புல்லறிவு - "நான் அறிவுடையேன்" என ஒருவன் தன்னைத்தானே மதித்துக் கொள்ளும் செருக்கு.
- பேதைமை - தனக்குப் பொருந்தாததவற்றில் அல்லது தனக்குத் தீமை வருவிப்பவற்றில் விருப்பத்தைச் செலுத்துதல்
- அறிவைத் தந்தையாகவும் திருப்தியைத் தாயாகவும் சத்தியத்தைச் சகோதரனாகவும் வைத்துக்கொள். - மகா பாரதம்
- மனித வாழ்வு ஒரு குழந்தையின் கையிலுள்ள முட்டை போன்றது.- ரூமேனிய முதுமொழி
- அதி சிறந்த நாள் இன்று:
  சிறந்த மனிதன் - சரியென உணர்ந்ததைச் செய்பவன்;
  அதியுயர்ந்த செல்வம் - மெய்யறிவு;
  சாந்திக்கு வழி - மௌனம்
- விளம்பரங்களுக்குத்தான் வெளிச்சம் வேண்டும்; வெளிச்சங்களுக்கு விளம்பரம் வேண்டியதில்லை.
- மனச்சாட்சி உறங்கும்போதுதான் மனக்குரங்கு ஊர் சுற்றக் கிளம்பிவிடுகிறது.
- மகிழ்ச்சியின் சாவி பொறுமை. அது என்றும் உன் கையில் இருக்கட்டும்.
- வார்த்தைகள் நடமாடினால் அது வசனம். வார்த்தைகள் நடனமாடினால் அது கவிதை.
- உன்னை அதிகமாகச் சிந்திக்கச் செய்பவைகளே உனக்கு அதிகமாக உதவக் கூடியவை.
- திறமை அமைதியில் வளர்கிறது.
- இயலாமை என்பது முயலாமையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அன்பு இருக்கும் இடத்தில் அதிகாரம் நிலைப்பதில்லை.
- அறியத் தகாத விஷயங்களை அறியாதிருந்தால் அறிவுடைமையின் ஒரு பகுதியாகும்.
- செல்வத்தால், செல்வாக்கால், ஆணவத்தால், அதிகாரத்தால் அடைந்தவை நீண்டகாலம் நிலைத்திரா.

## 4. ஒவ்வொரு பொருளுக்கும் இடமுண்டு

- ஒவ்வொரு பொருளுக்கும் இடமுண்டு; ஒவ்வொன்றும் தன்னிடத்தில் இருக்கவேண்டும்.
- அனுபவம் என்ற பள்ளிக்கூடம் செலவு மிகுந்தது; ஆனால், மூடர்கள் வேறு எங்கும் படிக்கமாட்டார்கள்.
- அறிஞர்கள் பேசுவதற்கு முன் யோசனை பண்ணுகிறார்கள்; அறிவிலிகள் பேசிவிட்டு யோசனை பண்ணுகிறார்கள்.
- உன் வாயையும் பணப் பையையும் அதிகமாகத் திறக்காதே. அப்பொழுது உன் செல்வமும் வளரும்; உன் மதிப்பும் உயரும்.
- ஏழைக்கு இல்லையென்னும் தொல்லையடா; உள்ளவர்க்கு உள்ளதெல்லாம் தொல்லையடா.
- தீயவழிகளில் வந்த பொருள்களை தீய வழிகளில் செலவுசெய்யவே ஆசையுண்டாகும்.
- பணமும் சந்தோஷமும் ஜென்ம விரோதிகள். ஒன்று தங்குமிடத்தில் மற்றது தங்குவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திருப்தி இயற்கையான செல்வம். சொகுசான வாழ்வு செயற்கையான வறுமை.
- கடன் கவலையைப் பெருக்கும். செருக்கு பகைமையைப் பெருக்கும்.
- பார்வையின் உறுப்பு கண்ணல்ல; அறிவே.
- விநாச காலே விபரீத புத்தி.
- உண்மை ஒருநாள் வெளியாகும். அதில் உருட்டும் புரட்டும் பலியாகும்.
- அதி விநயம் தூர்த்த லட்சணம்.
- அகோர தபசி விபரீத சோரன்.
- கண்ணாடியில் கல் விழுந்தாலும், கல்லில் கண்ணாடி விழுந்தாலும் அழிவு கண்ணாடிக்குத்தான்.
- தன்னைப்பற்றி புகழாமலும் மற்றையோரை இகழாமலும் இருக்கவேண்டும் என்று உலகில் சட்டமிருந்தால் மௌனம் நிலவும்.
- தொட்டதெல்லாம் தொல்லையடா; விட்டதெல்லாம் இன்பமடா.
- வன்முறை என்பது இருபக்கமும் கூருள்ள ஒரு ஆயுதம். அதைப் பயன்படுத்துபவனையும் அது தாக்கும்.
- கதைகட்ட ஒருவன் பிறந்துவிட்டால் கண்ணகி வாழ்விலும் களங்கமுண்டு.
- கள்ள மனமில்லையேல் கள்ளப் பணம் இல்லை.
- அச்சமும் நாணமும் அறிவிலோர்க்கு இல்லை.
- அறிஞர்க்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல்.
- நல்லோரை நாடு; அல்லோரை வெறுக்காதே.
- கேட்டதையெல்லாம் நம்பிவிடாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- செய்யவேண்டும் என்று நினைப்பதையெல்லாம் செய்துவிடாதீர்கள்; தெரிந்ததையெல்லாம் சொல்லிவிடாதீர்கள்; இருப்பதையெல்லாம் உபயோகித்துவிடாதீர்கள். பார்ப்பதையெல்லாம் வாங்கிவிடாதீர்கள்; சந்தோஷத்திற்குப் பஞ்சமேயிராது.
- கயவர்கள் கெஞ்சினால் மிஞ்சுவார்கள். மிஞ்சினால் கெஞ்சுவார்கள்.
- உன் நண்பனை அவன் என்றாவது உன் எதிரியாக வருவான் என்ற முறையிலும், உன் விரோதியை அவன் என்றாவது உன் நண்பனாவான் என்ற முறையில் நடத்துவாயாக.
- அறிவாளியுடன் ஒருமுறை உரையாடுவது ஒரு மாதம் நூல்களைப் படிப்பதைவிட மேலானது.
- யானை படுகுழியில் விழும் போது தவளையும்கூட பின்னால் நின்று உதைகொடுக்கும்.
- காசு கதறிக்கொண்டிருக்கிறது. ஆனால், பேரறிவு குசுகுசுக்கிறது.
- தான் பல நூல் கற்றாலும் துச்சனர் நல்லோராகார்.
- இரண்டுபேர் ஒருபோதும் திருப்தியடையாதவர்கள்; ஒருவர் அறிவைத் தேடுபவர். மற்றவர் செல்வத்தைத் தேடுபவர்.
- ஒரு மனிதனிடமுள்ள மிகச் சிறந்ததும் மிகக் கேவலமானதும் நாக்கேதான்.
- ஒருவனுடைய நாக்கினாலேயே அவன் பெருமையும் சிறுமையும் அடைகிறான்.
- மனிதன் பிறந்து தவழும்போது தெய்வம்; எழுந்து நடக்கும்போது மிருகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கவனமாய் நடக்கின்றேன் நான் - என் காலின்பின் நடக்கும் சிறுவனுக்காய். பிழையாய் நடக்க அஞ்சுகின்றேன்; என் பின்னவன் அதையே தொடருமதால்.

- பொறுமை ஒருநாள் புலியாகும். அதற்கு பொய்யும் புரட்டும் பலியாகும்.

- அறம் வழுவிய ஆட்சி ரோல்ஸ்றோய் காரை குரங்கு செலுத்துவதற்கு ஒப்பாகும். – நவீன பழமொழி.

- அன்பில்லா உலகில் ஆலயம் ஒரு கல்லுக் குவியல்; நூல் நிலையம் ஒரு குப்பைத் தொட்டி; வைத்தியசாலை ஒரு கசாப்புக் கடை.

- இலட்சியம் வெகுதூரத்தில் இருக்கலாம். ஆனால் அதற்குச் செல்லும் அடுத்தபடி வெகு அருகிலே இருக்கிறது.

- கருணைக்காக ஏங்க நேரும்போது இறைவனின் எல்லையற்ற கருணையில் நாம் நம்பிக்கை கொள்வது மிகவும் எளிதாக உள்ளது. அதே சமயம் இறைவனின் எல்லையற்ற நீதியைப் பற்றியும் நாம் மறந்துவிடலாகாது.

## 5. செய்யவேண்டிய கருமங்கள் புறக்கணிக்கப்படுகின்றன

- செய்யவேண்டிய கருமங்கள் புறக்கணிக்கப் படுகின்றன. செய்யக்கூடாதவைதான் செய்யப்படுகின்றன. ஒழுங்கற்ற ஆசைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிக்கின்றன. சிந்தனையற்ற மக்கள் எண்ணிக்கை பெருகுகின்றது. - புத்தர்

- சாணக்கியம் என்ற பெயரில் அரசியல்வாதிகள் கொடூரத்தைச் சாணைபிடித்து கூர்மைப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

- அன்பே உலகின் தாய்மொழி. அதன் வழியும் நேர்வழியே.

- முட்டாள் அலைகிறான்; அறிவாளி பிரயாணம் செய்கிறான்.

- உன்னைப் பயன்படுத்திக்கொள்ள உன் மூளையை உபயோகி. பிறரைப் பயன் படுத்திக்கொள்ள உன் இருதயத்தை உபயோகி.

- ஒருவன் வாழ்வை ஒருவன் கெடுத்து உயர்ந்த வரலாறே இல்லை.

- இன்பத்தின் ஒரு கதவு மூடும்போது மற்றொன்று திறக்கிறது. ஆனால் மூடிய கதவை உற்று நோக்குவதால் நமக்காகத் திறந்திருக்கும் கதவைக் கவனிப்பதே இல்லை.

- பிறருக்கு நன்மை செய்யப் பிறந்த நீ நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிரு. - விவேகானந்தர்

- தனி மனிதனின் ஆணவத்தாலும் அறியாமையாலும் நாடுகளே நாசமடைகின்றன.

- ஒருவன் எவ்வளவு உயர்ந்த நிலைக்கு ஏறுவான் என்பதிலிருந்தல்ல அவன் எவ்வளவு கீழ் நிலைக்கு இறங்குவான் என்பதிலிருந்தே ஒருவனை மட்டிட வேண்டும். .

- கொலைகளுக்குள் மிகப் பெரியது அறிவுக் கொலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கொடூரமும் கோழைத்தனமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. இரண்டிலும் வீரத்திற்கு இடமில்லை. — வினோபா

- அறியாமை ஒருவனது குற்றமல்ல; வஞ்சகம் அவனுடைய குற்றம். அறியாமை ஒருவனுக்குத் தெரியாத நிலை; வஞ்சகம் அவனுடைய ஆட்சியில் இருக்கிறது.

- ஒருவனில் அனுதாபம் இல்லாதவனுக்கு அவன் குற்றத்தைக் கண்டிக்க உரிமை கிடையாது.

- பணமிருந்தால் உங்களுக்கு உங்களைத் தெரியாது. பணம் இல்லாவிட்டாலும் ஒருவருக்கும் உங்களைத் தெரியாது.

- ஏமாற்றுதல் என்பது மனிதன் கற்றுக்கொண்ட மிகக் கீழ்த்தரமான வித்தையாகும்.

- போருக்கு மனிதன் முற்றுப்புள்ளி வைக்காவிட்டால் போர் மனித இனத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும்.

- தீவினை அகற்று.

- இணக்கமறிந்து இணங்கு.

- ஒவ்வொருவருக்கும் தத்தமக்குப் பகைவன் தத்தம் அஞ்ஞானமே இல்லாமல் பிற சீவர்களல்ல.

- உய்யவல்லார் அறிவு உள்ளறிவாமே.
  - திருமந்திரம்

- ஏமாற்றினவன் அனுபவிக்கும் இன்பமும் ஏமாற்றப்பட்டவன் அனுபவிக்கும் துன்பமும் மிகச் சொற்பகால அளவினதேயாகும்.

- உன்னையே நீ நிர்த்தாட்சண்யமாகப் பரீட்சித்துக்கொள். பிறரிடம் தயாதாட்சண்யம் நிறைந்தவனாகி விடுவாய். - அரவிந்தர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- செல்வமென்பது செருப்பைப் போன்றது. அது குறைந்தால் நம்மைப் புண்படுத்துகிறது; அளவுக்கு அதிகமானால் நம்மைத் தடுமாற வைக்கிறது.
- அன்பு வளர அடக்கமும் வளரும். - வினோபா
- நல்லாரை நாவிலுரை; பொன்னைக் கல்லிலுரை.
- அழக்கொண்டவெல்லாம் அழப்போம். - குறளடி
- எந்த மனிதனையும் முற்றச் சோதிப்பது 'இவனுக்கு எது பிரியம்' என்னும் கேள்வியே.
- என்ன சொல்லப்படுகின்றது என்பதைவிட எந்த நோக்கத்தோடு சொல்லப்படுகின்றது என்று ஆராய்வதே அறிவுடைமை.
- நீ எண்ணுவது எல்லோருக்கும் சொந்தம். நீ உணர்வதே உனக்குச் சொந்தம்.
- மற்றவர்கள் உன்னைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதல்ல முக்கியம்; உண்மையில் நீ யார் என்பதே முக்கியம்.
  - அரவிந்தர்
- மனிதனின் ஐம்புலன்களே அவனுக்குப் பெரிய பகைவர்களாக அமைந்துவிடுகின்றன.
- ஆள்காட்டி விரல்மூலம் எதிரில் உள்ளவரை நீ குற்றம் சாட்டும்போது, மற்ற நான்கு விரல்களும் உன்னை நோக்கிக் குற்றம் சாட்டுகின்றன.
- மூடன் பிறரைக் குறைகூறுவான்; அரைகுறை அறிவாளி தன்னைக் குறைகூறுவான். அறிவு முற்றியவன் தன்னையும் குறைகூறான்; பிறரையும் குறைகூறான்.
- தன்னைப் பூரணமாய் அறியமுடியாதவன் ஒருநாளும் பிறரைச் சரியாய் அறியமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எதிர்பாராதது எந்த நேரத்திலும் நடக்கலாம்.
- உயர் பதவி பெரியோரை அதிகப் பெரியோராகவும் சிறியோரை அதிகச் சிறியோராகவும் காட்டும் உரைகல்.
- தானே தனக்குப் பகைவனும் நட்டானும்.
  - திருமந்திரம்
- பிறர் தீமை சொல்லா நயத்தது சால்பு.
  - குறளடி

## 6. உண்மைக்கு ஒரு சாட்சி பொய் சொல்லப் பல சாட்சி

- உண்மைக்கு ஒரு சாட்சி;
  பொய் சொல்லப் பல சாட்சி
- பொன்னும் பொருளும் நிறைந்தவர் நெஞ்சம்
  பொய்கள் மலிந்த காடு.
- எண்ணும் எழுத்தும் நிறைந்தவர் நெஞ்சம்
  இறைவன் இருக்கும் வீடு.
- வருவதும் போவதும் - இன்ப துன்பம்
  வந்தால் போகாதது - அவமானம், பழி
  போனால் வராதது - மானம், உயிர்
  தானாய் வருவது - இளமை, மூப்பு
  அழிவைத் தருவது - கோபம், பொறாமை
  தவிர்க்க முடியாதது - பசி, தாகம்
  அனைவர்க்கும் சமமானது - பிறப்பு, இறப்பு
  நம்முடன் வருவது - பாவ, புண்ணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வந்தது தெரியும் போவது எங்கே வாசல் நமக்கே தெரியாது.
- கோடுபோட்டு வாழ்ந்தவர்கள் எத்தனையோ - கொண்ட குறியும் தவறிப் போனவர்கள் எத்தனையோ!
- அறிவுக் கதவைச் சரியாகத் திறந்தால் பிறவிக் குருடனும் கண் பெறுவான்.
- உண்மை ஒருநாள் வெளியாகும்; அதில் உருட்டும் புரட்டும் பலியாகும்.
- வகுப்பார் அதுபோல் வாழ்வதில்லை; தொடங்குவார் பலர் அதை முடிப்பதில்லை.
- இன்ப மயில் ஆடலுக்கு மேடை அமைத்தான் - அதில் துன்பமெனும் நாடகத்தைக் கண்டு ரசித்தான்!
- கோடானுகோடி கொடுப்பினும் தன்னுடை நாக்கோடாமை கோடி பெறும் - ஔவையார்
- மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று மிதியாமை கோடிபெறும் - ஔவையார்
- இணக்கமறிந்து இணங்கு; சேரிடம் அறிந்து சேர்.
- சுளிக்கச் சொல்லேல்; வெட்டெனப் பேசேல்
- நிலையில் பிரியேல்
- மிகைபடச் சொல்லேல்
- மொழிவது அறமொழி
- கேட்டில் உறுதி கூட்டும் உடைமை.
- நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
- பொல்லாங்கு என்பவை எல்லாந் தவிர்.
- முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
- போகவிட்டுப் புறஞ் சொல்லித் திரியவேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்.
- மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்.
- சேராத இடந்தனிலே சேரவேண்டாம்.
- இறந்தாலும் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.
- அறிஞர்க்கழகு கற்றுணர்ந்து அடங்கல்
- பெருமையும் சிறுமையும் தான்தர வருமே.
- நன்றும் தீதும் பிறர்தர வாரா.
- அச்சமும் நாணமும் அறிவிலோர்க்கு இல்லை
- உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.
- குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
  நடைமெலிந்து ஓரூர் நண்ணினும் நண்ணுவர்.
- சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
  அறக் கூழ்ச்சாலை அடையினும் அடைவர்.
- அறத்திடு பிச்சை கூவி இரப்போர்
  அரசொடு இருந்து அரசாளினும் ஆளுவர்.
- குற்றத்தனைய இருநிதியைப் படைத்தோர்
  அன்றைப் பகலே அழியினும் அழிவர்.
- நட்டாலும் நண்பல்லார் நண்பு அல்லர்.
- கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே
- தான் கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. நல்லாரை நாவில் உரை

- நல்லாரை நாவில் உரை, பொன்னைக் கல்லில் உரை.
- ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர் நாழி முகவாது நானாழி
- சீர் ஒழுகு சான்றோர் சினம், விற்பிடித்து நீர் கிழிய எய்த வடுப்போல மாறுமே
- கற்பிலா மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்.
- நெஞ்சில் கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவிலா நெஞ்சத்தவர் கரவார்.
- கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.
- அறநெறி பிழைத்தார்க்கு அறங்கூற்றம்; அல்லாத மாந்தர்க்கு அறங் கூற்றம்; அரசியல் பிழைத்தார்க்கு அறங் கூற்றம்.
- சிவாயநம என்று சிந்தித்து இருப்போர்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை.
- தாம்தான் முன்செய்த வினை தாமே அனுபவிப்பர்
- ஆறிடும் மேடும் மடுவும்போல் ஆம் செல்வம் மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர்.
- வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம்.
- உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கு சினம்காத்துக் கொள்ளும் குணமே குணமென்க.
- பொய்ப் புலன்கள் ஐந்தும் புல்லியர்பால் அன்றி மெய்ப் புலவர் தம்பால் நோய் விளையா.
- அன்பு இல்லானுக்கு இங்கு இடம், பொருள், ஏவல் எல்லாம் இருந்தும் அவற்கு என் செய்யும்?
- இன்சொலால் அன்றி இருநீர் வியன் உலகம் வன்சொலால் என்றும் மகிழாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முனிவினும் நல்குவர் முதறிஞர்;
  உள்ளம் கனிவினும் நல்கார் கயவர்.
- அறிவுடையார் அன்றி அதுபெறார்
  தம்பால் செறு பழியைச் சிறிதும் அஞ்சாரே.
- கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன் மக்கள்
  மற்றையர் தாம் என்றும் மதியாரே.
- நல்லார் செயும் கேண்மை நாள்தோறும்
  நன்றாகும் அல்லார் செயும் கேண்மை ஆகாதே.
- கற்றோர் கனம் அறிவார் கற்றோரே; கற்றறியா
  மற்றோர் அறியார்.
- செய்யுமொரு கருமம் தேர்ந்து புரிவதன்றிச்
  செயின் மனத்தாபம் சேருமே.
- துர்ச்சனர்க்கு அங்கம் முழுவதும் விடம்
- அவ்விய நெஞ்சத்து அறிவிலாத் துர்ச்சனரைச்
  செவ்வியராக்கும் செயல் உண்டே.
- குணநன்குணராக் கொடியோரிடத்து
  குணநன்குடையார் குறுகார்.
- சிற்றுணர்வோர் என்றும் சிலுசிலுப்பர்;
  ஆன்றமைந்த முற்றுணர்வோர் ஒன்றும்
  மொழியாரே.
- உற்றதொழில் செய்வோர்க் குறுபஞ்சம் இல்லை.
  பற்று செபத்தோர்க்குப் பாவங்கள் இல்லை.
  முற்றும் மௌனத்தோர்க்கு வருகலகம் இல்லை.
- இன்னல் தரும் பொருளை ஈட்டுதலுந் துன்பமே;
  பின்னதனைப் பேணுதலும் துன்பமே.
- தானே புரிவினையாற் சாரும் இரு பயனும் தானே
  அனுபவித்தல் தப்பாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சத்தியத்தை வெல்லாது அசத்தியம்.
  நீள் பொறையை வெல்லாது மெத்திய கோபம்.
  பக்திமிகு புண்ணியத்தைப் பாவமது வெல்லாது.
- நலிந்தாலும் உத்தமர்பால் முன்னிருந்த
  நற்குணமே நயந்து தோன்றும்
- மன்னுகலை கற்றோர்க்கு அழகு கருணை.
  ஆசை மயக்கற்றோர்க்கு அழகு பொறை
- வல்லவர்பாற் கல்வி, மதம் ஆணவம் போக்கும்.
  அல்லவர் பாற் கல்வி அவை ஆக்கும்.
- தீயவர்பாற் கல்வி சிறந்தாலும் மற்றவரைத்
  தூயவரென்று எண்ணியே துன்னற்க.
- பொன்னாசையோர்க்கில்லை போற்று குரு
  கிளைஞர்; தோற்று பசிக்கில்லை சுவை பாகம்.
  காமுகர் தம்மாசைக்கில்லை பயம் மானம்.
- நன்றறியாத் தீயோர்க்கு இடங்கொடுத்த
  நல்லோர்க்கும் துன்று கிளைக்கும் துயர் சேரும்.

## 8. நல்லொழுக்கம்

- நல்லொழுக்க மில்லாரிடம் சேர்ந்த நல்லோர்க்கு
  நல்லொழுக்கமில்லார் சொல் நண்ணுமே.
- வினைவேறு பட்டவர்பால் மனம் வேறு, சொல்
  வேறு, தொழில் வேறாயிருக்கும்.
- கனமொன்று மேலவர்பால் மனம் ஒன்று
  சொல்லொன்று வான்பொருளும் ஒன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விண்ணுக்கினிய மணி வெய்யோன்;
  கண்ணுக்கினிய சபைக்கு மணி கற்றோன்.

- நிந்தையிலாத் தூயவரும் நிந்தையரைச் சேரின்
  அவர் நிந்தையது தம்மிடத்தே நிற்குமே.

- கல்லார் பகைசேர் கலகம் விரும்புவார்; நல்லார்
  விரும்புவார் நட்பு.

- பிறர் தாரம் புல்லினர்க்கு எல்லா நலமும் போம்.

- நல்லோர், எல்லோர்தமக்கும் இனிது உதவலன்றி
  தமக்குதவி நாடார்.

- உத்தமர் தாம் ஈயுமிடத்து ஓங்கு பனைபோல்வார்
  மத்திமர் இவ்விடத்து தெங்குதனை மானுவரே.
  அதமர்களோ இங்கு தேன்கதலி கமுகுதனை
  ஒப்பர்.

- வெய்யகதிர் எல்லோன் கிரணத்தும் எரியினிலும்
  எண்ணமில்லார் சொல்லே மிகவும் சுடும்.

- திங்கள் கிரணம் சந்தனத்தின் சீதளமாம்; இங்கு
  இவற்றின் அன்பு அறிவு சாந்தம் அருளுடையார்
  நல்ல வசனம் இன்பமிகுஞ் சீதளமாமே.

- கல்லார் பலகூடிக் காதலித்து வாழினும்
  நூல்வல்லான் ஒருவனுக்கு நிகராகார்.

- ஒன்றாகக் காண்பதுவே காட்சி புலனைந்தும்
  வென்றான்தன் வீரமே வீரம் ஒன்றானும்
  சாகாமல் கற்பதே வித்தை தனைப் பிறர்
  ஏவாமல் உண்பதே ஊண். - ஔவையார்

- சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும்
  நாப்பழக்கம்
  வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் - நித்தம்
  நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
  கொடையும் பிறவிக் குணம். - ஔவையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உண்ணீர் உண்ணீரென்று உபசரியான் தன்மனையில்
  உண்ணாமை கோடி பெறும்;
  கோடிகொடுத்தும் குடிப்பிறந்தார் தம்முடனே
  கூடுவதே கோடிபெறும். - ஔவையார்

- பாங்கு அறியாப் புல்லறிவாளர்க்குச் செய்த
  உபகாரம் கல்லின் மேல் இட்ட கலம்.

- அன்னம் ஆவே, மண்ணொடு கிளியே
  இல்லிக்குடம், ஆடு, எருமை நெய்யரி அன்னர்
  முதல் இடை கடை மாணாக்கர்.

- அழுதுகொண்டு பிறக்கிறோம்;
  குறைகூறிக்கொண்டு வாழ்கிறோம்;
  ஏமாற்றத்துடனேயே இறக்கிறோம்.

- ஒவ்வொருவனும் தன்னை அறிஞன் என்று
  நினைக்கிறான். அதனால்தான் உலகில்
  இவ்வளவு முட்டாள்கள் நிறைந்திருக்கிறார்கள்.

- மனிதன் குறை உடையவன் மட்டுமல்ல;
  குறைகாண்பவனும் அவனே.

- பிறர் குறையைக் காண்பவன் அரை மனிதன்;
  தன் குறையை உணர்பவன் முழு மனிதன்.

- எல்லா நம்பிக்கைகளும் அறிவுக்கு எதிரி -ஓஷோ

- திரும்பப் பெறமுடியாதவை :
  பேசிவிட்ட வார்த்தை; தொடுத்துவிட்ட அம்பு;
  இழந்துவிட்ட வாய்ப்பு; கடந்துவிட்ட காலம்.

- உனது சமயத்துக்குப் புறம்பே செல்லாதே.
  அதனுள் எல்லாம் உண்டு. - யோகர்

- ஒருவனைக் கூடாதவன் என்று நினைக்கும்
  நினைப்பே நினைப்பவனுக்கு நஞ்சாகும். -யோகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கைவிரல்களைப் போல் தனித்து இருந்துகொள்ள வேண்டும். தேவையான நேரம் கூடிக்கொள்ளலாம்.

- ஓரெட்டில் ஆடாத விளையாட்டு, ஈரெட்டில் கற்காத கல்வி, மூவெட்டில் செய்யாத திருமணம், நாலெட்டில் பெறாத சந்தானம், ஐயெட்டில் தேடாத பொருள், ஆறெட்டில் விளையாத அனுபவம், ஏழெட்டில் கிடைக்காத ஓய்வு, எண்ணெட்டில் வராத சாவு - ஒரு வாழ்வல்ல.

- மனதை அறிந்தவன் மகானாவான். - ஓஷோ

- பகுத்தறிவு சாகும்போது ஞானம் பிறக்கிறது.
  - அரவிந்தர்

- எப்படியும் வாழலாம் என்று நினைத்து வாழ்பவன் செல்வனாயிருப்பான். இப்படித்தான் வாழவேண்டும் என்ற குறிக்கோளுடன் வாழ்பவன் எப்பொழுதும் வறியவனாகவே இருப்பான்.

- வாழவிட்டால்தான் வாழவும் முடியும். ஆற்றா அழுகை அமைதியின் அன்னை.
  - கண்ணதாசன்

## 9. அஞ்ஞானம்

- அஞ்ஞானம் திரிகரணங்களாலும் கக்கியே அழியும் - ஆன்ம விசாரம்

- தன்னையறிந்தவன் தத்துவ ஞானி.

- கொலைகளுக்குள் மிகப் பெரியது அறிவுக் கொலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பணம், அதிகாரம் முதலியன பெரும் தீமை செய்யா. புகழ்ச்சுவை பொல்லாதது. ஒருநாளும் தெவிட்டிப் போகாது.
- ரோஜா மலர் பிறரிடமிருந்து எதனையும் எதிர்பாராது தன் நறுமணத்தை எங்கும் நுகர்வதற்கு அள்ளி வீசிக்கொண்டிருக்கிறது.
- கல்லைச் சிந்தினால் பொறுக்கிக்கொள்ளலாம். ஆனால் சொல்லைச் சிந்தினால் பொறுக்க முடியாது.
- ஒருவன் கடுமையாகப் பேசினாலும் அவனுக்கு இனிமையாகவே பதில் கூறுக. முடியாவிட்டால் மௌனமாய் இருந்திடுக.
- ஆசைகளை மட்டும் வளர்ப்பவன் அமைதியை இழந்துவிடுகிறான்.
- மனிதனிடம் சிறந்தது நாக்கு. அவனிடம் மிகக் கேவலமானதும் நாக்கேதான்.
- முட்டாளின் முழு வாழ்க்கையும் புத்திசாலியின் ஒருநாள் வாழ்க்கைக்குச் சமம்.
- தீயவை தீய பயத்தலால் தீயவை
  தீயினும் அஞ்சப் படும். - திருக்குறள்
- மண்ணோடு மண்ணாக நசுக்கப்பட்ட உண்மை மறுபடியும் நிமிர்ந்தெழும். இதில் சந்தேகமே இல்லை.
- நீதி நசுக்கப்படலாம். இதனால் தற்காலிகமாகச் செயலற்றுப் போகலாம். ஆனால் நீதியைக் கொல்ல முடியாது. அது மறுபடியும நிமிர்ந்து எழுவது நிச்சயம்.
- **யமதேவன்** : “இவ்வுலகில் மிகப் பெரிய அதிசயம் யாது?”

**தருமபுத்திரன்**: “இவ்வுலகில் தினமும் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறப்பதைக் கண்ணாரக் கண்டுகொண்டும் மனிதன் தான் சிரஞ்சீவி என்ற எண்ணத்துடன் வாழ்வதுதான்."

- பழைமையை மூலமாக அமைக்காத புதுமையாகிய விஞ்ஞானம் அழிவைத்தான் கொண்டுவரும்.
- ஆரவாரங்கள் வெறும் மயக்கங்களே. அவற்றில் சாரம் இல்லை.
- தன்னையறிவது அறிவாம் அஃதன்றிப் பின்னையறிவது பேயறிவாமே. - திருமந்திரம்
- கடலில் அசாதாரண அமைதி புயலுக்கு அறிகுறி; புலி பதுங்குவது பாய்ச்சலுக்கு அறிகுறி.
- உடலுக்கு உணவு; உயிருக்குப் பிரார்த்தனை. - வினோபா
- ஈகை இருபக்கத்தையும் வாழவைக்கும். - வினோபா
- மனத்தை மருந்துகொண்டு மாற்ற முடியாது. - வினோபா
- வறுமையும் செல்வமும் இருவகை நோய்கள். - வினோபா
- ஆத்மாவைச் சாந்தப்படுத்தக்கூடியது உள்ளத்துக்கு வெளியே எதுவுமில்லை.
- யானை படுகுழியில் விழும்போது தவளைகூட பின்னால் நின்று ஒரு உதைகொடுக்கும்.
- அதிகம் பேசுபவர் சிந்திப்பதில்லை.
- ஒருபொழுதும் துன்பமாக மாறாத பொருள் நாம் செய்யும் நல்ல செயலே.
- வேகமாய் ஓடுபவர் பந்தயத்தில எப்போதும் முதலிடம் பெறுவதில்லை; அதேபோல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலமுடைய பக்கம் போரில் எப்போதும் வெற்றி பெறுவதில்லை.

- அபாயத்திலிருந்து ஒருவனைத் தப்புவிப்பது எது?: துணிவு.
- தங்கள் கருத்துக்களை ஒருபோதும் மாற்றிக் கொள்ளாதவர் இருவர். அதில் ஒருவர் மூடர், மற்றவர் இறந்தவர்.
- ஒருவருடைய அகமும் புறமும் ஒன்றாயிருக்க வேண்டும். - பிளேட்டோ
- போனது போகட்டும்; புத்தியாய் இனி நட.
- பொல்லாத காலம் சொல்லாமல் வரும்.
- பாவத்துக்குப் பல வழிகள் உண்டு. ஆனால் தருமத்துக்கு ஒரேயொரு வழிதான் உண்டு.
- சிந்திக்க இயலாதவனுக்குக் கேளிக்கையே இன்பம்.
- ஒருமுறை அடகுவைத்த நேர்மை, பின்னால் மீள்வதே இல்லை.
- விடியாத இரவு என்ற ஒன்று என்றுமே இல்லை. இரவைத் தொடர்ந்து பகல் கட்டாயம் வரவேசெய்யும்.
- அகம்பாவம் ஒரு மகா பொல்லாத குதிரை. அதில் சவாரி செய்வது மிக உல்லாசமாகவே இருக்கும். ஆனால், அது நிச்சயமாக தன் எஜமானனை கீழே தள்ளி விழுத்தாமல் விடாது.
- நியாயமின்றி ஒருவரைச் சிறையிலிடும் ஆட்சியில் நீதிமானுக்கு உரிய இடம் சிறைச்சாலையே. அடிமை நாட்டில் சுதந்திர மனிதன் கௌரவத்துடன் வாழும் இடம் அது ஒன்றே. - தோரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. உன்னையே நீ அறிவாய்

- உன்னை அறிந்துகொள். அதற்காகவே நீ பிறந்திருக்கிறாய்.
- எதுவும் எங்கும் எந்த நேரத்திலும் நடக்கலாம்.
- மோனமென்பது ஞான வரம்பு.
- தன்னைத் திருத்தி ஒருவன் உயர்வதற்கு வழி மௌனமும் சிந்தனையுமே. - ஆன்ம விசாரம்
- மனம் வாக்கு காயம் இம்மூன்றாலும் தன்கண் நிகழ்வனவற்றைப் படிப்பதே உண்மையான படிப்பு. - ஆன்ம விசாரம்
- தன்னை அறியும் வழி மௌனமும் விழிப்புணர்ச்சியுமே.
- கண்டவர்கள் ஒருக்காலும் விண்டிடார்களே விண்டவர்கள் ஒருக்காலும் கண்டிடார்களே. - சித்தர் பாடல்
- தன்னையறியத் தன்னுள்ளே நோக்குமின்.
- மனிதனால் எட்டக்கூடிய அதியுயர்ந்த நிலை தன்னை அறியும் நிலையே.
- தன்னையறிய வழி மௌனமும் சிந்தனையுமே.
- தன்னையறிந்தவனே ஞானி.
- தன்னுள்ளே தன்னோக்கைத் தான்செலுத்தி தன்னையறிவதே அறிவு.
- தன்னையறியார் தலைவனை அறியார். - சிவபோக சாரம்
- தன்னையறிவதே மெய்யறிவு; மற்றெல்லாம் பொய்யறிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தன்னையறியும் அறிவதனைப் பெறில்
  பின்னைப் பிறப்பில்லை வீடு. - ஔவை குறள்

- மறவாநினையா மவுனத்திருக்கில் பிறவார்
  இறவார் பினை. - ஔவை குறள்

- தன்னையறிந்தவன் தம்பட்டம் அடியான்.

- தன்னையறிந்தொழுகுவோர் தன்னை மறைப்பர்
  தன்னையறியாதவரே தன்னைக் காட்டுவர்.
  - சித்தர் பாடல்.

- தன்னையறிவது அறிவாம் அஃதன்றிப்
  பின்னையறிவது பேயறிவாமே. - திருமந்திரம்

- மனம் வாக்குக் காயமெனும் வாய்த்த
  பொறிக்கெட்டாத
  தினகரனை நெஞ்சமதிற் சேவித்துப் போற்றீரே.
  - சித்தர் பாடல்

- அறிவுடையார் நெஞ்சத்து அங்கு நின்றானே
  - திருமந்திரம்

- தெள்ளத் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்
  - திருமந்திரம்

- காடு நாடு வீடு விண் கலந்து நின்ற கள்வனை
  நாடியோடி உம்முள்ளே நயந்துணர்ந்து பாருமே.
  - சித்தர் பாடல்

- உண்மையான இன்பம் புறத்திலிருந்து
  வருவதில்லை; அகத்திலிருந்தே வருகிறது.

- கட்புலனுக் கெவ்வளவும் காணாதிருந் தெங்கும்
  உட்புலனாய் நின்ற ஒன்றை உய்த்தறி நீ
  புல்லறிவே. - சித்தர் பாடல்

- நீதி அரசியலின் ஆணிவேர்.

- அரசியல் பிழைத்தார்க்கு அறங்கூற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இன்பம் பொருள்களில் இல்லை; அது எண்ணத்திலேதான் இருக்கிறது.
- ஆயுதம் இருக்குமிடத்தில் என்றும் அமைதி இருக்காது.
- தன்கையாலும் நாவாலும் பிறரைத் துன்புறுத்தாதவனே அதியுயர்ந்த மனிதன்
- ஒருவன் தவறுகளுக்குப் பிராயச்சித்தம் பச்சாத்தாபம் ஒன்றுதான்.
- ஒருவன் வெற்றியிலே கற்பது சொற்பம், தோல்வியிலே கற்பது அனேகம்.
- பண்புக்கு உரைகல் பணிவு. பண்புள்ளவனிடத்தில் பணிவு எப்பொழுதும் காணப்படும்.
- தெளிவு, துணிவு, கனிவு இம்மூன்றும் இல்லாத காரணத்தினாற்றான் மக்களிடையில் பிரச்சினைகள் நிலவுகின்றன.
- பணம் இருந்தால் உங்களுக்கு உங்களைத் தெரியாது; பணமில்லாவிட்டால் ஒருவருக்கும உங்களைத் தெரியாது.
- வாழ்க்கையென்பது மேடுபள்ளம் உடையதென்பதை நினைவில் வைத்துக்கொள்.
- தினைத்துணை நன்றிசெயினும் பனைத்
                                துணையாய்க்
  கொள்வர் பயன் தெரிவார். - குறள்
- யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
  சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. - குறள்
- ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
  உயிரினும் ஓம்பப் படும். - குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஏதிலார் குற்றம்போல் தன்குற்றம் காண்கிற்பின்
  தீதுண்டோ மன்னும் உயிர்க்கு. - குறள்
- தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
  வீயாது அடி உறைந்தற்று. - குறள்
- வலியார்முன் தன்னை நினைக்க தான்தன்னின்
  மெலியார் மேல் செல்லும் இடத்து. - குறள்
- அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி எடுத்த
  கருமங்கள் ஆகா - ஔவையார்
- அச்சமும் நாணமும் அறிவிலோர்க்கு இல்லை
  - வெற்றிவேற்கை

## 11. திருக்குறளமுதம்

- அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
  பகவன் முதற்றே உலகு
- தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
  நாவினாற் சுட்ட வடு.
- தீயவை தீய பயத்தலால் தீயவை
  தீயினும் அஞ்சப் படும்.
- பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம்
  எற்றெற்றென்று ஏதம் பலவும் தரும்.
- களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து
  ஆவது போலக் கெடும்.
- பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
  செய்யாமை செய்யாமை நன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
  பிறத்தல் அதனால் வரும்.
- பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
  பிற்பகல் தாமே வரும்.
- நில்லாதவற்றை நிலையின என்றுணரும்
  புல்லறி வாண்மை கடை.
- கற்க கசடறக் கற்பவை கற்றபின்
  நிற்க அதற்குத் தக.
- சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீஇ
  நன்றின்பால் உய்ப்ப தறிவு.
- அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
  என்னுடைய ரேனும் இலர்.
- வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
  வைத்தூறு போலக் கெடும்.
- நல்லினத்தி னூங்குந் துணையில்லை
  தீயினத்தின் அல்லற்படுப்ப தூஉம் இல்.
- எனைவகையான் தேறியக் கண்ணும்
  வினைவகையான் வேறாகும் மாந்தர் பலர்.
- அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
  பிற்பயக்கும் நற்பாலவை.
- சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
  சொல்லிய வண்ணம் செயல்.
- கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
  நீட்டி அளப்பதோர் கோல்.
- நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
  ஒல்லை உணரப் படும்.
- ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
  பேதையின் பேதையார் இல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை
  உடையம்யாம் என்னும் செருக்கு.

- இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
  கைகொல்லும் காழ்த்த விடத்து.

- வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
  கேள்போல் பகைவர் தொடர்பு.

- இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
  திருநீக்கப் பட்டார் தொடர்பு.

- கையறியாமை யுடைத்தே பொருள்கொடுத்து
  மெய்யறியாமை கொளல்

- மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு
  அருந்தியது அற்றது போற்றி உணின்.

- பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
  அணியுமாம் தன்னை வியந்து.

- அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்
  மக்கட் பண்பு இல்லாதவர்.

- பிறர் பழியும் தன்பழியும் நாணுவர் நாணுக்கு
  உறைபதி என்னும் உலகு.

- சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
  கொல்லப் பயன்படும் கீழ்.

- யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
  சோகாப்பர் சொல் லிழுக்குப் பட்டு.

- வானுயர் தோற்றம் எவன் செய்யும் தன்நெஞ்சம்
  தான்அறி குற்றப் படின்.

- மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
  பழித்தது ஒழித்து விடின்.

- உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
  கள்ளத்தால் கள்வேம் எனல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தன்னெஞ் சவறிவது பொய்யற்க பொய்த்தபின்
  தன்னெஞ்சே தன்னைச் சுடும்.
- தன்னைத்தான் காக்கின் சினங்காக்க
  காவாக்கால் தன்னையே கொல்லும் சினம்.
- எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
  மெய்ப்பொருள் காண்பது அறிவு.
- இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
  ஒழுக்க முடையார்வாய்ச் சொல்.
- எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும்
  அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு.
- நன்றாற்ற லுள்ளுந் தவறுண்டு அவரவர்
  பண்பறிந் தாற்றாக் கடை.
- சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
  கலத்துள்நீர் பெய்திரீ இயற்று.
- அன்பொடும் அருளொடும் வாராப் பொருளாக்கம்
  புல்லார் புரள விடல்.
- உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
  அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு.
- ஒல்லும் கருமம் உடற்றுபவர் கேண்மை
  சொல்லாடார் சோர விடல்.
- கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
  சொல்வேறு பட்டார் தொடர்பு.
- பேதைமை என்பதொன்று யாதெனின்
  ஏதங்கொண்டு ஊதியம் போக விடல்.
- பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை
  கையல்ல தன்கட் செயல்.
- காணாதான் காட்டுவான் தான்காணான்
  காணாதான்
  கண்டானாம் தான் கண்டவாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக் காணுங்கால்
  உள்ளான்கொல் உண்டதன் சோர்வு.
- அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
  குற்றமே கூறி விடும்.
- கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
  சொல்லா நலத்தது சால்பு.
- வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
  ஐந்தும் அகத்தே நகும்.

## 12. தீயவை அகற்று

- தீவினை அகற்று - ஆத்திசூடி
- அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
  பேணித் தமராக் கொளல் - குறள்
- அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
  வியந்தான் விரைந்து கெடும். - குறள்
- உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
  நில்லாது நீங்கிவிடும் - குறள்
- நெடுநீர் மறவழி மடிதுயில் நான்கும்
  கெடுநீரார் காமக் கலன் - குறள்
- ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
  காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு - குறள்
- உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
  அச்சாணி அன்னார் உடைத்து - குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தினமும் தன்கண் முன்னே மக்கள் இறப்பதைக் கண்டுகொண்டிருந்தும் தான் சிரஞ்சீவி என்று மனிதன் நினைத்துக்கொண்டு வாழ்வதுதான் இவ்வுலகத்தில் மிகப் பெரிய அதிசயம்.
- கேடுவரும் பின்னே மதி கெட்டுவரும் முன்னே.
- கெடுவான் கேடு நினைப்பான்
- வினைவிதைத்தவன் வினை அறுப்பான்
- தன்வினை தன்னைச் சுடும்
- கெடுப்பது ஒழி.- ஆத்திசூடி
- நன்மை கடைப்பிடி - ஆத்திசூடி
- கூரம்பாயினும் வீரியம் பேசேல்
  - கொன்றை வேந்தன்
- முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
  - கொன்றை வேந்தன்
- மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
  அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு - குறள்
- தீயவை தீய பயத்தலால் தீயவை
  தீயினும் அஞ்சப் படும் - குறள்
- தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
  வீயாது அடியுறைந் தற்று. - குறள்
- சேரிடம் அறிந்து சேர் - ஆத்திசூடி
- பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் பேசும்
  அமுதத் தாய்மொழியும்
  என்தன் உயிருக்கு நேர். - தமிழன்
- இணக்கம் அறிந்து இணங்கு. - ஆத்திசூடி
- என்றும் மேடு பள்ளம் உடையதுதான் நமது வாழ்க்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குற்றச் செயல்களைச் செய்பவன் வாழ்க்கையில்
  ஒருபோதும் நிம்மதி அடையவே மாட்டான்.

- ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந்து இதனினிது
  சீரியது என்ற ஒன்றைச் செப்பரிது

- உள்ளம் சிலிர்க்கும் உயிர் சிலிர்க்கும்
  விண்ணமுதம் வள்ளுவ நின் வாய்மை மறை

- வேதப்பொருளை விரகால் விரித்து உலகோர்
  ஓதத் தமிழால் உரைசெய்தார்.
  
  \- குறளின் பெருமை

- ஆரியம் வேதம் உடைத்து,
  தமிழ் திருவள்ளுவனார் ஓதுகுறட் பாவுடைத்து
  
  \- சங்கப் புலவர்

- திருக்குறள் : சிந்தைக்கினிய செவிக்கினிய
  வாய்க்கினிய வந்த இருவினைக்கு மாமருந்து.

- தெள்ளிய வள்ளுவரின் குறள் வெண்பா
  அகிலத்தோர் உள்ளிருள் நீக்கும் ஒளி.

- அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக்
  குறுகத் தறித்த குறள் - ஔவையார்

- ஓதற் கெளிதாகி உணர்தற் கரிதாகி
  வேதப் பொருளாய் மிக விளங்கித் – தீதற்றோர்
  உள்ளுதோ றுள்ளுதோ றுள்ளமுருக்குமே
  வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

- எல்லாப் பொருளும் இதன் பால் உள;
  இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை.
  
  \- குறளின் பெருமை

- தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
  நிலையின் இழிந்தக் கடை. - குறள்

- நல்லார் கண்பட்ட வறுமையின் இன்னாதே
  கல்லார் கண்பட்ட திரு. - குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 அகந் தூய்மை

- புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
  வாய்மையால் காணப் படும்.
- பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
  கருமமே கட்டளைக் கல். - குறள்
- மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
  ஆகுல நீர பிற. - குறள்
- அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
  இழுக்கா இயன்றது அறம். - குறள்
- ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
  செல்லும் வாயெல்லாம செயல். - குறள்
- உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
  இன்னாச்சொல் நோற்பாரின் இல். - குறள்
- இன்று மனித வாழ்க்கை போகம், ரோகம், சோகம் என்பவற்றை அனுபவிப்பதாகவே அமைந்திருக்கிறது.
- குடித்திருப்பவரோடு விவாதம் செய்தால் உங்களில் யார் குடித்திருப்பவர் என்று தெரியாது.
- கெடும் குடி சொற்கேளாது.
- தான் சாக மருந்து குடிப்பவனை ஒருவரும் ஒன்றும் செய்ய முடியாது.
- பொய்சொல்லி வாழ்ந்தாரும் இல்லை; மெய்சொல்லிக் கெட்டாரும் இல்லை.
- பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
  செய்யாமை செய்யாமை நன்று. - குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
  இகழ்வார்ப் பொறுத்தல் தலை. - குறள்

- ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்
  பொறுத்தார்க்குப்
  பொன்றுந் துணையும் புகழ் - குறள்

- சட்டம் ஏமாந்து போனாலும் போகும், ஆனால்
  தர்மம் எப்போதும் பழிவாங்கியே தீரும்.

- அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்.

- மனிதன் எண்ணங்களே அவன் வாழ்வு.

- பொல்லாத காலம் சொல்லாமல் வரும்.

- செருக்கும் சினமும் சேர்ந்தாரைக் கொல்லிகள்.

- கீழே விழுந்தவனைக் கண்டு சிரிக்கவேண்டாம்;
  உன் பாதையும் வழுக்கல் நிறைந்தது.

- ஒருமுறை அடகுவைத்த நேர்மை, பின்னால்
  மீள்வதே இல்லை.

- பால் கசப்பது நாவின் குற்றமே.

- ஒருவனுக்குப் பகைவன் அவனது அஞ்ஞானமே
  அன்றிப் பிறரல்லர்.

- ஏழைகள் உணவைத் தேடுகின்றனர். செல்வர்கள்
  பசியைத் தேடுகின்றனர்.

- துரோகிகளுக்குத்தான் முதலில் ஆபத்து வரும்.

- மூடர்களும் முட்டாள்களும் படுகுழியில்
  விழுவதைத் தடுக்க முடியாது.

- ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
  கோடியும் அல்ல பல. - குறள்

- மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா.

- அதர்மத்தில் உறுதிகொண்ட எவரும்
  தோல்வியையும் அழிவையும் தவிர்க்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அறிந்தறிந்து செய்த பாவத்தை அழுதழுது தொலைக்க வேண்டும்.
- கொடுங்கோல் அரசு நெடுங்காலம் நில்லாது. பேய் சிரித்தாலும் ஆகாது,அழுதாலும் ஆகாது.
- கண்கெட்ட பிறகா சூரிய நமஸ்காரம்?
- கனிந்த பழம் தானே விழும்.
- பார், கேள், மௌனமாயிரு.
- மனப்பேயே ஒழிய மற்றவை பேயல்ல.
- அறச்செட்டு முழு நட்டம்.
- குண்டுபட்டுச் சாகாதவன் வண்டடித்துச் செத்தானாம்.
- மந்திரிக்கும் உண்டு மதிக்கேடு.

## 14. ஒரு பொல்லாப்பும் இல்லை

- மாறுபாடில்லாத உண்டி மறுத்து உண்ணின் ஊறுபாடு இல்லை உயிர்க்கு – குறள்
- இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும் கழிபேரிரை யான்கண் நோய் - குறள்
- படிப்பது திருவாசகம் இடிப்பது சிவன் கோயில்
- ஆனைக்கும் அடி சறுக்கும்.
- கடனில்லாக் கஞ்சி கால் வயிறு போதும்.
- தூங்குகிற புலியைத் தட்டி எழுப்பாதே.
- புலையும் கொலையும் களவும் தவிர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கடிதான சொல் அடியிலும் கொடிது.
- மனப்பால் குடித்து மாண்டவர் பலர்.
- முட்டுமுன் குனிய வேண்டும்.
- மொழி தப்பியவன் வழி தப்பியவன்.
- பொருளும் போகமும் கூட வரா.
- மட்டான போசனம் மனதிற்கு மகிழ்ச்சி.
- முளையில் கிள்ளாததை கோடரிகொண்டு வெட்டுகிறான்.
- ஆகிறவன் அரைக் காசிலும் ஆவான், ஆகாதவன் ஆயிரம் கொடுத்தாலும் ஆகான்.
- எப்பொழுதோ முடிந்த காரியம்.
  ஒரு பொல்லாப்பும் இல்லை.
  முழுவதும் உண்மை.
  நாமொன்றும் அறியோம். - யோகர் சுவாமிகள்
- அண்ட சராசரம் அவன் திருமேனி.
  அண்ட சராசரம் அவன் திரு ஆடல்.
  அண்டசராசரம் அவனே ஆகும்.
  அண்ட சராசரம் முழுதும் அதிசயம்.
  - யோகர் சுவாமிகள்
- போனது போகட்டும்; புத்தியாய் இனி நட.
- அற்ப ஆசை கோடி தவத்தைக் கெடுக்கும்.
- கணப்பொழுது மதி கெட்டுத் தவறு செய்வான். காலமெல்லாம் தண்டனையை அனுபவிப்பான்.
- பதறாத காரியம் சிதறாது.
- நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி. (நாலு - நாலடியார், இரண்டு -திருக்குறள்)
- வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
  உள்ளத் தனையது உயர்வு. - குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- புல்நுனி நீர்போல் நிலையாமை என்றெண்ணி
  இன்னினியே செய்க அறவினை. - நாலடியார்

- உணர உணரும் உணர்வுடையாரைப்
  புணரிற் புணருமாம் இன்பம் - நாலடியார்

- இடம்பட மெய்ஞ்ஞானம் கற்பினும் என்றும்
  அடங்காதார் என்றும் அடங்கார் - நாலடியார்

- அறிவ தறிந்தடங்கி அஞ்சுவ தஞ்சி
  உறுவ துலகுவப்பச் செய்து - பெறுவதனால்
  இன்புற்று வாழும் இயல்பினார் எஞ்ஞான்றும்
  துன்புற்று வாழ்தல் அரிது - நாலடியார்

- உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
  நில்லாது நீங்கி விடும் - குறள்

- தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
  நிலையின் இழிந்தக் கடை. - குறள்

- ஒருவன் தன்னைத் திருத்தி உயர்வதற்கு வழி
  மௌனமும் சிந்தனையுமே. - ஆன்ம விசாரம்

- புண்ணியங்களெல்லாவற்றிலும் விசேட
  புண்ணியமாவது பிறர் செய்யும் தீங்கைப்
  பொறுத்தலே. - ஆன்ம விசாரம்

- அழுக்கை வைத்துக்கொண்டு ஞானந்தேடி
  அலைவது வீண்.

- கடவுள் நீதிமயமானவர். காணப்படும் உலகம்
  புறத்தோற்றம். இவ்வுலகம் இப்படி இருப்பதே
  நீதி. - 32,33 - உப அதிபர் பொ.கைலாசபதி

- ஒன்றே குலமும் ஒருவனே தேவனும். -
  திருமந்திரம்

- தானே தனக்குப் பகைவனும் நட்டானும் -
  திருமந்திரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவுன்
  தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே. –
  தாயுமானவர்

- கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொல்
  கூற்றம்.
  அல்லாத மாந்தர்க்கு அறம் கூற்றம்.
  - மூதுரை - ஔவையார்

## 15. உண்மையான சுகம்

- குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.

- கண்கண்ட தெய்வம் இரண்டு :
  அன்னை, தந்தை.
  வருவதும் போவதும் இரண்டு:
  செல்வம், வறுமை.
  வந்தால் போகாதவை இரண்டு :
  கீர்த்தி, அபகீர்த்தி
  போனால் வராதவை இரண்டு :
  மானம், உயிர்.
  தன்னுடன் வருபவை இரண்டு :
  பாவம், புண்ணியம்.

- சிக்கனமாயிரு, ஆனால் உலோபியாய் இராதே.

- நல்லோரை நாடு, ஆனால் அல்லோரை
  வெறுக்காதே.

- விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
  கற்றாரோடு ஏனை யவர். - குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
  மாடல்ல மற்றை யவை. - குறள்

- கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
  புண்ணுடையர் கல்லா தவர். - குறள்

- தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
  கற்றனைத் தூறும் அறிவு. - குறள்

- நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
  கல்லார்கண் பட்ட திரு. - குறள்

- ஒழுக்க முடையவர்க்கு ஒல்லாவே தீய
  வழுக்கியும் வாயாற் சொலல் . - குறள்

- அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே
  செல்வத்தைத் தேய்க்கும் படை. - குறள்

- கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறியாரே.
  - திருமந்திரம்

- ஒவ்வொரு புதிய தீர்க்கதரிசியின் எழுச்சியும் புதிய ஆசாடபூதிப் பிரிவு உருவாகுவதற்கு ஏதுவாகி விட்டதுதான் வேதனைக்குரிய விஷயமாயிருக்கிறது.

- கபடம், பொய், மோசம் இவை கலந்த பேச்சும் செயலும் துரோகமாகும். பயனில்லாத செயலும் சிந்தனையும் குறிக்கோளற்ற வாழ்க்கையும் அவ்வாறே துரோகமாகும்.

- ஆத்மாவைச் சாந்தப்படுத்தக்கூடியது உள்ளத்துக்கு வெளியே எதுவுமில்லை.

- நீதி, சத்தியம், தெளிவான புத்தி, தைரியம் இவைகளைவிட வேறு எதுவும் உண்மையான சுகத்தைத் தரமாட்டா என்பதை நீ உணர்ந்துகொள்.

- நீதி தவறாதவனுக்கு மனதில் எப்பொழுதும் மகிழ்ச்சி இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நிலையான அபிப்பிராயம் கொள்ளாத அறிவில்லாதவர்கள் உன்னைப்பற்றிப் பேசுவதே புகழ் எனப்படுகிறது. அதனால் நீ அடைவது ஒன்றுமில்லை.

- இன்பம் பொருள்களில் இல்லை. அது எண்ணத்திலேதான் இருக்கிறது.

- ஞானம், சரி எது, பிழை எது என்ற விசாரத்தால் வரவேண்டும். அது வெற்றியிலும் தோல்வியிலும் நிலைத்திருக்கும்.

- பொருளுக்கும் தர்மத்திற்கும் பெருந் தொடர்புண்டு. பொருள் அறிந்தவர் தம் உழைப்பால் வராத பொருளைத் தீண்ட அஞ்சுவர்.

- காலாடு போழ்திற் கழி கிளைஞர் வானத்து
  மேலாடு மீனிற் பலராவர் - ஏலா
  இடரொருவர் உற்றக்கால் ஈர்ங்குன்ற நாட
  தொடர்புடையோ மென்பார் சிலர். - நாலடியார்

- நாவடக்கிப் பேசுவதால் நல்ல வார்த்தையே மிஞ்சும்.

- காமம், வெகுளி, கடும் பற்றுள்ளம், மானம், உவகை, மதம் எனக் குற்றங்கள் ஆறுவகை.

- துன்பமென்பது தவம், சுகமென்பது அவம்.
  - ஆன்ம விசாரம்

- பிறர் குற்றம் தூற்றலாகிய புறங்கூற்றானது ஆற்றாமை, பொறாமை, செருக்கு, களிப்பு(மதம்) என்றும் இந்நான்கு துர்க்குணமும் காரணமாக நிகழும். - ஆன்ம விசாரம்

- கல்வியின் பயன் அறிவு. அறிவின்பயன் ஒழுக்கம். - நாவலர்

- அறமுறுக்கினால் அற்றுப் போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உண்டது தானே ஏப்பம் வரும்.
- காலமெனும் தேவமகள்
  கையிலுள்ள துலாக் கோலில்
  எந்த எடை எப்போது
  எவ்வளவென் றாரறிவார்! - கண்ணதாசன்

## 16. காலம் போம், வார்த்தை நிற்கும்.

- காலம் போம், வார்த்தை நிற்கும்; கப்பல் போம், துறை நிற்கும்.
- அம்மணதேசத்தில் கோவணம் கட்டியவன் பயித்தியம்.
- பின்னின்னா பேதையர் நட்பு.
- பிடித்த கொம்பு ஒடிந்தது, மிதித்த கொம்பும் முறிந்தது.
- அகோர தபசி விபரீத சோரன்.
- எத்தொழிலைச் செய்தாலும் ஏது அவத்தைப் பட்டாலும் முத்தர் மனம் இருக்கும் மோனத்தே.
  - பட்டினத்தார்.
- ஆவியொடு காயம் அழியினும் மேதினியில் பாவி என்ற நாமம் படையாதே. - பட்டினத்தார்
- இருப்பது பொய் போவது மெய் என்று எண்ணி நெஞ்சே ஒருத்தருக்கும் தீங்கினை உன்னாதே.
  - பட்டினத்தார்
- பொம்மலாட்டம் என்றே இரு பொல்லா உடலை; அடர்ந்த சந்தைக் கூட்டமென்றே இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றத்தை; குடங்கவிழ் நீர் ஓட்டமென்றே இரு
வாழ்வை. - பட்டினத்தார்

- செத்துக்கிடக்கும் பிணத்தருகே இனிச்
சாம்பிணங்கள்
கத்தும் கணக்கென்ன காண் கயிலாபுரிக்
காளத்தியே. - பட்டினத்தார்.

- நல்லார் இணக்கமும் நின்பூசை நேயமும்
ஞானமுமே
அல்லாது வேறு நிலையுளதோ. - பட்டினத்தார்

## தாயுமானவர் கண்ணிகள்

- கொலை களவு கள் காமம் கோபம்
விட்டாலன்றோ மலை இலக்கா நின்னருள்தான்
வாய்க்கும் பராபரமே.

- பார்க்கின்ற அண்டபிண்டப் பரப்பனைத்தும்
நின்செயலே
யார்க்கும் செயல் இலையே ஐயா பராபரமே.

- பொய்யைப் பொய்யென்றறியும் போதத்துக்கு
ஆதரவுன்
மெய்யருளே அன்றோ விளம்பாய் பராபரமே.

- சினமிறக்கக் கற்றாலும் சித்தி எல்லாம்
பெற்றாலும்
மனம் இறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே.

- கொல்லா விரதம் ஒன்று கொண்டவரே நல்லோர்
மற்று அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே.

- எத்திக்கும் தானாகி என் இதயத்தே ஊறித்
தித்திக்கும் ஆனந்தத் தேனே பராபரமே.

- அன்பைப் பெருக்கி எனது ஆருயிரைக் காக்க
வந்த இன்பப் பெருக்கே இறையே பராபரமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சின்னஞ் சிறியார்கள் செய்த மணல்சோற்றை
 ஒக்கும் மன்னும் கலைஞான மார்க்கம்
 பராபரமே.

- நூலேணி விண்ணேற நூற்குப் பருத்தி வைப்பார்
 போலே கருவி நன்னூல் போதம் பராபரமே.

- வேதாந்தம் சித்தாந்தம் வேறு என்னார்
 கண்களிக்கும்
 நாதாந்த மோன நலமே பராபரமே.

- தேடும் திரவியமும் சேர்ந்த மணிப்பெட்டகமும்
 கூட வருந்துணையோ கூறாய் பராபரமே.

- இல்லாத காரியத்தை இச்சித்துச் சிந்தைவழி
 செல்லாமை நல்லோர் திறம்காண் பராபரமே

- பொய்யெல்லாம் ஒன்றாய்ப் பொருத்திவைத்த
 பொய் உடலை
 மெய்யென்றால் மெய்யாய் விடுமோ பராபரமே

- கங்குல் பகல் அற்ற திருக்காட்சியர்கள்
 கண்டவழி
 எங்கும் ஒரு வழியே எந்தாய் பராபரமே.

- வேதாந்தம் சித்தாந்தம் வேறு என்னார்
 கண்களிக்கும்
 நாதாந்த மோன நலமே பராபரமே.

- இல்லாத காரியத்தை இச்சித்துச் சிந்தைவழி
 செல்லாமை நல்லோர் திறம் காண் பராபரமே.

- பொய்யெல்லாம் ஒன்றாய்ப் பொருத்திவைத்த
 பொய் உடலை
 மெய்யென்றால் மெய்யாய் விடுமோ பராபரமே.

- கங்குல் பகல் அற்ற திருக்காட்சியர்கள்
 கண்ட வழி
 எங்கும் ஒரு வழியே எந்தாய் பராபரமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அண்டம் அனைத்திலும் அப்பாலுக்கு அப்பாலும் கொண்ட நின்னை யார் அறிந்து கொள்வார் பராபரமே.

- கற்ற அறிவால் உனை நான் கண்டவன் போல் கூத்தாடில்
  குற்றம் என்று என் நெஞ்சே கொதிக்கும் பராபரமே.

- ஓடும் இருநிதியும் ஒன்றாகக் கண்டவர்கள் நாடும் பொருளான நட்பே பராபரமே.

  கேட்டதையே சொல்லும் கிளிபோல நின்னருளில்
  நாட்டமின்றி வாய்பேசல் நன்றோ பராபரமே.

## 17. ஆன்ம விசாரம்

- நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைக்கும்.

- கற்றிலனாயினுங் கேட்க அ∴தொருவற்கு ஒற்கத்தின் ஊற்றாந் துணை - குறள்

- ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டொன்றாகும் அன்றி அதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும் எனையாளும் ஈசன் செயல்.
  - நல்வழி ஔவையார்

- அல்லும் பகலும் அப்பன் திருவடியைச் சொல்லாமற் சொல்லிச் சுகம் பெறுவதெக்காலம்
  - யோகர் சுவாமிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நில்லாவுலகையும் நிலையென எண்ணி மனஞ்
 செல்லாமல் திருவடியைச் சிந்திப்பதெக்காலம்
 - யோகர் சுவாமிகள்

- எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும்
 நிறைந்தவனை
 தெள்ளுதமிழ் பாடிச் சேவிப்ப தெக்காலம்
 - யோகர் சுவாமிகள்

- நினைவுக்கு நினைவாய் நிலைத்திருக்கும்
 மெய்ப்பொருளை
 அனைத்துக்கும் காரணனை அறிவதுவு
 மெக்காலம். - யோகர் சுவாமிகள்

- அன்பே சிவம் அறிந்திடடா;
 அதுவே நாமெனத் தெரிந்திடடா.
 - யோகர் சுவாமிகள்

- அங்கிங்கென் றெண்ணாதே அவனிவனென்
 றுன்னாதே
 எங்கும் சிவத்தைக் கண்டு - தங்கமே
 இன்பமாய் வாழ்ந்திடடி. - யோகர் சுவாமிகள்

- எதை நீ பாவனை செய்கிறாயோ அது நீ ஆவாய். உண்மை இன்மையாகாது - இன்மை உண்மையாகாது. அகமுகமாகு, அப்போதே ஆனந்தம் உண்டாகும். - யோகர் சுவாமிகள்

- வெட்ப தட்பம், இன்ப துன்பம், இளமை முதுமை இவை இயற்கையின் குணங்கள். இவைகளின் தீண்டுதலால் நாம் ஏன் கவலைப்படுவான். இவைகள் தோன்றி மறைவன. நாமோ தோன்றுவதுமில்லை. மறைவதுமில்லை.
 - யோகர் சுவாமிகள்

- ஓ மனிதனே, வானம் வந்தாலும் பூமி வந்தாலும் ஆட்சி செய்யக் கருதாதே. - யோகர் சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒழுக்கம் உயிரினும் சிறந்தது. ஒழுக்கமுடையார் எல்லாமுடையார். கொல்லாமை, கள்ளாமை, பிறர் வசை உரையாமை, பிறர்பொருள் கவராமை, தாழ்மை, பொய்யுரையாமை, இவைகள் ஒழுக்கத்தின்பாற்படும்.
  - யோகர் சுவாமிகள்

- சிவதொண்டு செய்வார் தீநெறிச் செல்லார்
  சிவதொண்டு செய்வார் புலனைந்தும் வெல்வார்
  சிவதொண்டு செய்வார் பிறன்பொருள் வெ.்.கார்
  சிவதொண்டு செய்வார் சிவமே யாவார்
  - யோகர் சுவாமிகள்

- தெளிந்த சிந்தனை, திறந்த நெஞ்சம் - இவையிரண்டும் ஆன்ம விசாரத்தின் இரு கண்கள்.

- விருப்பு வெறுப்பு ஆகிய இரண்டும் ஆன்மாவைப் பீடித்துள்ள இரு பெரும் நோய்கள்.

- ஒவ்வொருவருடைய பேச்சும் அவரவர் நிலை, சுவைகள், அறிவு இவற்றிற்கு ஏற்றபடிதான் அமைந்திருக்கும்.

- நாங்கள் எதையும் அதனதன் நிலையில் காண்பதில்லை. எங்கள் நிலையின் ஊடாகவே காண்கிறோம்.

- புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு இரந்து கோள்தக்கது உடைத்து. - குறள் (இதற்குக் கரும்புலிகள் மிகப்பொருத்தமான எடுத்துக்காட்டு)

- மனிதனுடைய அத்தியாவசிய தேவைக்கு அப்பாற்பட்ட எல்லாப் பொருட்களும் அவனுக்கு துன்பம் கொண்டுவரும் பகைவர்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஐம்புலன்களால் அனுபவிக்கும் இன்பங்களில் நாட்டம் கொள்வதுதான் அதி உச்சமான அறியாமையாகும். - பிளேட்டோ

- நம்நாட்டின் தலைவிதி ஊசலாடும் நேரம் உள்ளும் புறமும் உள்ள எதிரிகள், சதிசெய்வோர், புல்லுருவிகள், சோம்பேறிகள் ஆகியோர் மீது சகிப்புத் தன்மை காட்டவே கூடாது. - ஜோர்ஜ் டிமிற்றோவ்

- அரசாங்கம் மிகவும் ஊழல் நிறைந்ததாய் இருந்தால் அப்போது சட்டங்களும் அளவுக்கதிகமாகும். - டாசிடஸ்

## 18. நெஞ்சை ஒழித்து ஒரு வஞ்சகமில்லை

- நெஞ்சை ஒழித்து ஒரு வஞ்சகமில்லை. - ஔவையார்

- வேகங்கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க - திருவாசகம்

- நீர ஆர் அதற்குத் தக்கபடி நான்.
  ஓம்: முன்னுக்குச் செல்லவும் ஓம்; பின்னுக்குச் செல்லவும் ஓம்.
  கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்.
  மோனமென்பது ஞான வரம்பு
  ஒன்றாகக் காண்பதுவே காட்சி. அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது.
  ஆருயிர் முறைவழிப் படூஉம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநெறி பிழைத்தார்க்கு அறங் கூற்றம்.
- ஆப்தர் வாக்கியங்கள்

- பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
  பிற்பகல் தாமே வரும். - குறள்

- உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண்
  செய்யாமை
  அற்றே தவத்திற்கு உரு. - குறள்

- அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
  புல்லார் புரள விடல். - குறள்

- தனித்துணை நீநிற்க யான் தருக்கித்
  தலையால் நடந்த
  வினைத்துணை யேனை விடுதிகண்டாய்
  - திருவாசகம்

- புலன்கள் திகைப்பிக்க யானும் திகைத்திங்கோர்
  பொய்ந்நெறிக்கே
  விலங்குகின்றேனை விடுதி கண்டாய்.
  - திருவாசகம்

- மாறுபட்டு ஐஞ்சென்னை வஞ்சிப்ப
  உன்மணி மலர்த்தாள்
  வேறுபட்டேனை விடுதி கண்டாய் - திருவாசகம்

- ஞாலவிருட்சத்தின் மூலாதார வேர் தர்மம்.
  ஞானம் நிலைகொள்ளும் பரிசுத்த நிலம் தர்மம்.
  - பண்டிதமணி சி.க.

- வெறும் சரித்திரக் கதைகள் அவகதைகள்.
  அவைக்கு மேற்பட்டவை இதிகாசக்
  கதைகளாகிய தவ கதைகள். இவற்றிலும் மிக
  மேலானவை புராணக் கதைகளாகிய சிவ
  கதைகள். - பண்டிதமணி சி.க.

- மேன்மைகொள் சைவநீதி விளங்குக
  உலகமெல்லாம். - பெரியபுராணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தர்மத்தின் நுண் உண்மைகளை உணர்த்துவன தவ கதைகள். திருவருள் கைவந்த அடியார்களின் வரலாற்றை உரைப்பன சிவ கதைகள். - பண்டிதமணி சி.க.

- வாழ்க்கையின் அடிப்படையான மூலதத்துவம் 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்ற மகாவாக்கியம். - பண்டிதமணி சி.க.

- இருவினையொத்த சமத்துவ புத்திமான்கள் முனிவர்கள். அவர்கள் துனியில் காட்சியினர். - பண்டிதமணி சி.க.

- தமிழ் இரண்டு வகை : அகத்தமிழ், புறத்தமிழ். இரண்டின் சுருக்கம் களவு தமிழ். களவு தமிழின் புற இதழ் அறம், பொருள். அக இதழ்: இன்பம், வீடு. - பண்டிதமணி சி.க.

- என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
  தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே
  - திருமந்திரம்

- முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
  அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
  - திருமந்திரம்

- தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
  மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
  திருவாசகமும் திருமூலர் சொல்லும்
  ஒரு வாசக மென்றுணர். - ஔவையார்

- **எனது வினாக்களும் இறைவன் பதில்களும்:**

பிறப்பு என்பது யாது? - பிறந்து பார்
படிப்பு என்பது யாது? - படித்துப் பார்.
அறிவு என்பது யாது? – அறிந்து பார்.
அன்பு என்பது யாது? அளித்துப் பார்.
பாசம் என்பது யாது? பகிர்ந்து பார்.
மனையாள் சுகம் என்பது எது? மணந்து பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை என்பது யாது? பெற்றுப் பார்.
முதுமை என்பது யாது? முதிர்ந்து பார்.
வறுமை என்பது யாது? – வாடிப் பார்.
இறப்பின் பின்னது எது? இறந்து பார்.
அனுபவித்தேதான் அறிவது வாழ்வெனில்
ஆண்டவனே நீ ஏன் எனக் கேட்டேன்.
ஆண்டவன் சற்று அருகினில் வந்து
அனுபவம் என்பதே நான் தான் என்றான்!
- கண்ணதாசன்

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
- குறள்

## 19. ஈத்துவக்கும் இன்பம்

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர் - குறள்

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல் - குறள்

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி - குறள்

ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை - குறள்

பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு - குறள்

உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன் - குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சிந்தனைத் தெளிவுக்கு மூலாதாரம் திரிகரண சுத்தி.
- அழியாத இன்பம் உலகோர்கள் எண்ணும் பணம் காசிலே இல்லை.
- ஒரு நாள் இரண்டு மூடர்கள் ஒருவரையொருவர் கொடூரமாகத் தாக்கி அடிபட்டுக்கொண்டு நின்றார்கள். அவ்வழியே ஒரு மகாஞானி வந்தார். அவர் அவ்விடத்தில் அசந்துபோய் நின்று சொன்ன வார்த்தைகள்:
  "அச்சிவம் இச்சிவத்தைச் சிவசிவ, இச்சிவம் அச்சிவத்தைச் சிவசிவ; இரு சிவமும் சிவசிவ."
- எதிலும் சமநோக்கு ஏற்படும் நிலை வந்தால்தான் மனச்சாந்தி சாத்தியமாகும்.
- மதியால் விதியை ஆராய்ச்சி செய்யலாம். ஆனால் ஆட்சிசெய்ய முடியாது.
- முன்னர் நமதிச்சையில் பிறந்தோமில்லை. முதல் இடை கடை நமது வசத்தில் இல்லை. – பாரதியார்
- **நினைவும் முடிவும்: (இரவு குவிந்ததாமரை மலரினுள் அகப்பட்டுக்கிடந்த வண்டொன்றின் சிந்தனை):**
  "இருளும் அகலும் இரவியும் தோன்றும்
  பொருவில் இத்தாமரைப் பூவும் மலரும்
  மலரும்பொழுது இவ்வன்சிறை நீங்கி
  உலகில் எங்கும் உலவித் திரிந்து
  பூவெழு பற்பல புதுவனங்கண்டு
  நாவெழு சுவைதரு நறை மிகவுண்டு வாழ்குவன்"
  என்றொரு மதுகரம் இருப்ப
  தாழ் மதவேழமொன்று ஆழ்கயமிறங்கி
  பாசிலை பூவெலாம் பறித்துப் பிய்த்து
  வீசியெறிந்து வெறிகொண்டதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **காகத்திடம் நாம் கற்கவேண்டியவை:**
  காலை எழுந்திருத்தல் காணாமலே புணர்தல்
  மாலை குளித்து மனைபுகுதல் - சால
  உற்றாரோ டுண்ணல் உறவாடல் இவையைந்தும்
  கற்றாயோ காக்கைக் குணம்.

- மனிதன் அறியவேண்டிய அறிவுகளிலெல்லாம் முக்கியமான அறிவு தன்னை அறிதலே.

- ஜனனம் தகப்பனூடாக ஆண்டவன் நடைப்பு; மரணம் ஆண்டவன் தானே அழைக்கும் அழைப்பு.

- நம்மிடம் எதுவுமில்லை என்று நினைப்பது ஞானம்; நம்மைத் தவிர எதுவுமில்லை என்று நினைப்பது ஆணவம்.

- ஞானம் பணிந்து நின்று வெற்றிபெறுகிறது; ஆணவம் நிமிர்ந்து நின்று அடி வாங்குகிறது.

- ஆணவத்தின் மூலம் வெற்றியோ லாபமோ கிடைப்பதில்லை; அடிதான் பலமாக விழுகிறது.

- அடக்கத்தில் இருக்கும் பரமசுகம் ஆணவத்தில் ஒருபோதும் இருப்பதில்லை.

- வசிட்டர். வியாசர், வால்மீகி, சுகர் முதலிய ஞானிகள் இந்து மதத்தின் பாரம்பரியங்கள்.

- தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
  தீரா இடும்பை தரும். - குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. விதியின் பாங்கு

- இந்து மதத்தின் முக்கிய தத்துவம் 'விதி'.
  நினைப்பவன் நீ, முடிப்பவன் இறைவன்.
  கோவலனின் விதி மாதவியின் மயக்கத்தில் இருந்தது.
  கண்ணகியின் விதி மதுரையில் இருந்தது.
  நெடுஞ்செழியனின் விதி ஒரு காற்சிலம்பில் அடங்கியிருந்தது.
  மகா அலக்சாண்டரின் விதி பாபிலோனியாவில் முடிந்தது.
  யூலியஸ்சீசரின் விதி நண்பன் புறூட்டசின் கையில் இருந்தது.
  நெப்போலியனின் விதி அவனது பேராசையில் அடங்கியிருந்தது.
  ஹிட்லரின் விதி ரூசியாவின் கொடிய குளிர்காலத்தில் இருந்தது.
  காந்தியடிகளின் விதி கோட்சேயின் கைத் துப்பாக்கியில் இருந்தது.
  விதி-மதி ஆராய்ச்சியிலும்கூட மதியை விதிதான் ஆட்சி செய்கிறது.

- மனம் ஒருமைப்பட்டால் சிந்தனை சீராகும். சிந்தனை சீர்பட்டால் செயல்கள் செவ்வனே நடக்கும். சிந்தனையும் செயலும் ஒருமித்தால் நியாயம் அநியாயங்கள் தெளிவாகும். அத் தெளிவு ஏற்பட்டால் மன அமைதி உண்டாகும்.

- இந்த உயிர் இறைவன் கொடுத்த கடன்; இந்த உடல் அவன் இலவசமாகக் கொடுத்த பரிசு.

- உரோமம் நரைப்பது, பல் விழுவது, தோல் சுருங்குவது, இவை இறைவன் மரணத்தை ஞாபகப்படுத்தி நமக்குப் போடும் ஞாபகக் கடிதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நிறைவேறிவிட்ட ஆசைகளில் மனம் பெருமிதப் படுவதில்லை. நிறைவேறாத ஆசைகளுக்காகவே அது மரணபரியந்தம் போராடுகிறது.

- கப்பலில் பயணம் செய்வது நம் பொறுப்பு; அதைக் கரைசேர்ப்பது இறைவன் பொறுப்பு.

- செங்காட்டில் ஆடுகின்ற தேசிகனைப் போற்றாமல்
அங்காடி நாய்போல் அலைந்தனையே
நெஞ்சமே! - பட்டினத்தார்.

- மரணபரியந்தம் மனம் தன் சலன வித்தையைக் காட்டிக்கொண்டே இருக்கிறது.

- கவலை என்பது ஒரு வலை. தனக்குத்தானே அதை வீசிக்கொள்பவர்கள் பலர். சில வேளைகளில் ஆண்டவனே அதை வீசுவதும் உண்டு.

- இப்பிறப்பை நம்பி இருப்பாரோ நெஞ்சகமே
வைப்பிருக்க வாயில் மனையிருக்க
- சொப்பனம்போல்
விக்கிப்பற் கிட்டக்கண் மெத்தப்பஞ் சிட்டப்பைக்
கக்கிச்செத் துக்கொட்டக் கண்டு. - பட்டினத்தார்

- முதற்சங்கு அமுதூட்டும் மொய்குழலார் ஆசை
நடுச்சங்கம் நல்விலங்கு பூட்டும் - கடைச்சங்கம்
ஆம்போதது ஊதும் அம்மட்டோ இம்மட்டோ
நாம்பூமி வாழ்ந்த நலம். - பட்டினத்தார்

- 'இது இவ்வளவுதான், இப்படித்தான்' என்று தேறுவதும் தெளிவதும் ஞானம். 'எது எப்படி இருந்தால் என்ன, இறைவன் விட்ட வழி' என்றிருப்பது ஞானம்.

- துன்பம் ஒரு சோதனை. வாழ்க்கையில் துன்பம் எப்போதும் இருந்தே தீரும். நாம் பிறக்கும்போது தாய்பட்டது துன்பம். தாய் இறக்கும்போது நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படப்போவது துன்பம். இரண்டுக்கும் இடையிலே நாம் அனுபவிப்பது துன்பம்.

- காமம் (பாலுணர்ச்சி) என்பது ஆண்மை பெண்மை இரண்டையும் சோதிக்க ஆண்டவன் நடத்தும் லீலை.

- மனிதனைப் பாவத்தில் அழுத்துகிற இரு பெரும் சக்தி காமமும் குரோதமும். -கிருஷ்ணபரமாத்மா

- வேதங்களின் முடிவையே விஞ்ஞானம் தன் முடிவாக ஏற்றுக் கொண்டிருக்கிறது.

- வாழ்க்கையின் ஒவ்வொரு சிக்கலிலும் பின்னலிலும் விதியின் பங்கு பெரியது.

- எது நடக்கக்கூடாதென்பதற்காக நீ கோபப்படுகிறாயோ நீ கோபப்பட்டு நிதானம் இழந்த ஒரே காரணத்துக்காக அது நடந்தேவிடுகிறது.

- எரிகிறதைப் பிடுங்கினால் கொதிக்கிறது அடங்கிப்போம். - பழமொழி.

- மது உள்ளே போனால் மதி வெளியே போகும். - பழமொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி

- நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி நினைத்தால் எல்லாம் உனக்குள்ளே.

- மனித வாழ்க்கையின் மூன்று கட்டங்கள்: முதலாவது ஒன்றுமே புரியாத உணர்ச்சிக் கூத்து. இரண்டாவது: ஏதோ இருப்பதாக, ஆனால் தெளிவாகத் தெரியாத மயக்க நிலை. மூன்றாவது: பிரபஞ்சத்தைப் பற்றிய வியப்பும் எல்லாவற்றிற்கும் மேலே ஒரு சக்தி இருக்கிறது என்று நம்பிக்கை கொள்ளும் நிலை.

- எதையும் அறிவால் உணர்ந்துவிடு. இல்லையேல் அனுபவம் காட்டும்.

- ஆரம்பத்தில் பிறப்பும் நம் கையில் இல்லை; அடுத்தடுத்த நடப்பும் நம் கையில் இல்லை.

- தம்மின் மெலியோரை நோக்கி தமதுடைமை அம்மா பெரிதென்று அகமகிழ்க. - நன்னெறி

- ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்து தூங்காமற் தூங்கிச் சுகம் பெறுவ தெக்காலம்.
  - பத்திரகிரியார்

- நடமாடற் கோயில் நம்பற் கொன்றீயில் படமாடக் கோயில் பகவற்கதாமே. - திருமந்திரம்

- அளந்து பேசி, அளந்து வாழ்கிறவனுக்கு அதிகபட்ச ஆசை கிடையாது.

- துக்கம் நம் உடன்பிறப்பு. அது முன்னமே நாம் போட்ட விதை. - காஞ்சிப் பெரியார்

- இல்லறத் துறவியாக வாழ்ந்த மகான் காந்தியடிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மனத்தின் அசுத்தந்தான் துக்கத்துக்குக் காரணம். மனமாசுகள் நீங்கினால் மனம் தானாகவே இறைவன் பக்கம் திரும்பிவிடும்.
  - காஞ்சிப் பெரியவர்

- ஆசையும் தேவையும் இல்லாதவன் துறவி.

- காலத்தின் பெருமையை உணர்ந்தவன்தான் ஒரு காரியத்தின் பெருமையை உணருவான்.

- ஞாலம் கருதிலும் கைகூடும் காலம்
  கருதி இடத்தாற் செயின். - குறள்

- காலம் அறிந்து காரியம் செய்பவனே அறிவாளி.

- மனிதர்களைப் பார்த்து இறைவன் சிரிக்கும் சந்தர்ப்பங்கள்:
  1. இது என் சொத்து, இதை நான் செய்தேன், நான் சமர்த்தன், பெரியவன், அதிகாரி என்றெல்லாம மனிதர்கள் சொல்லும்போது;
  2. மருத்துவர் நோயாளியைப் பார்த்து 'கவலைப்படாதே நான் குணமாக்கிவிடுவேன்' என்று சொல்லும்போது.

- தன்னையுணர்ந்த மனிதன் மரணத்திலிருந்து விடுதலையடைகிறான்.

- பேசாமல் இருப்பது பெருந் திறமை. பேசுந் திறமையைவிட அது மிகப் பெரியது.

- ஆறாத செல்வத் தரம்பையர்கள் தற்சூழ
  வானாளும் செல்வமும் மண்ணரசும்
  யான்வேண்டேன்
  தேனார் சோலைத் திருவேங்கடற் சுனையில்
  மீனாய்ப் பிறக்கும் விதியுடையேனாவேனே.
  - குலசேகராழ்வார் (அரசன்)

- தவம் மௌனத்தின் சக்தியை உணர்த்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நாணயம், ஒழுக்கம், இரக்கம், அன்பு, அருள், மனிதாபிமானம் இவற்றைப்பற்றி இந்து மதம் போதித்த அளவுக்கு எந்த மதமும் போதிக்கவில்லை.

- சீவனென்னச் சிவனென்ன வேறில்லை
  சீவனார் சிவனாரை அறிகிலர்
  சீவனார் சிவனாரை அறிந்த பின்
  சீவனார் சிவனா யிட்டிருப்பரே. - திருமந்திரம்

- தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
  தானே தனக்கு மறுமையும் இம்மையும்
  தானே தான் செய்த வினைப்பயன் தூய்ப்பானும்
  தானே தனக்குத் தலைவனும் ஆமே.
  -திருமந்திரம்

- மாறுபட்ட உணர்வுகளே மனத்தின் லயங்கள். மனிதன் தன்னை அறியும்படி வைப்பதும் அந்த மனம்தான். தன்னை அறியவிடாமல் தடுப்பதும் அந்த மனந்தான்.

## 22. எல்லாம் சிவன் செயல்

- அவரவருக்குள்ளபடி ஈசனருளாலே
  அவரவரைக் கொண்டியற்றுமானால் - அவரவரை
  நல்லார் பொல்லாரென்று நாடுவதென் நெஞ்சமே
  எல்லாம் சிவன் செயலென்றெண்
  - சிவபோகசாரம்

- தன்னை அறிய வேண்டிய மனிதன் முதன்முதல் வெல்லவேண்டிய மிகப் பெரிய எதிரி தன் மனமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தன்னை அறிய தனக்கொரு கேடில்லை
  தன்னையறியாமல் தானே கெடுகின்றான்
  தன்னையே அறியும் அறிவை அறிந்தபின்
  தன்னையே அர்ச்சிக்க தான் இருந்தானே.
  - திருமந்திரம்

- மனத்தகத் தழுக்கறா மௌனஞான யோகிகள்
  வனத்தகத் திருக்கினும் மனத்தகத் தழுக்கறார்
  மனத்தகக் தழுக்கறுத்த மௌனஞான
  யோகிகள்
  முலைத் தடத்திருக்கினும் பிறப்பறுத்திருப்பரே
  - சிவவாக்கியர்

- ஏதேது செய்திடினும் ஏதேது பேசிடினும்
  ஏதேது சிந்தித் திருந்திடினும் - மாதேவன்
  காட்டுவ தானஅருட் கண்ணைவிட்டு நீங்காது
  நாட்டம் அதுவாய் நட. - சிவவாக்கியார்

- **கல்விப் பொருளும் செல்வப் பொருளும்**

  வெள்ளத்தால் அழியாது வெந்தழலால் வேகாது
  வேந்தராலும் கொள்ளத்தான் முடியாது
  கொடுத்தாலும் நிறைவன்றிக் குறைவுறாது
  கள்ளர்க்கோ மிகஅரிது காவலோ மிக எளிது
  கல்வியெனும் உள்ளத்தே பொருளிருக்க
  உலகெலாம் பொருள்தேடி அலைவதென்னோ!

- சிவாய நமவென்று சிந்தித் திருப்பார்க்கு
  அபாயம் ஒருநாளும் இல்லை - உபாயம்
  இதுவே மதியாகும் அல்லாத வெல்லாம்
  விதியே மதியாய் விடும். - ஔவையார்

- விதிக்கோட்டை நடுவினிலே விளையாடும்
  காலமகள்
  சதிசெய்வாள் சிலநேரம் தர்பாரில்
  ஏற்றிவைப்பாள் - கண்ணதாசன்

- வானுயர் தோற்றம் எவன் செய்யும் தன்நெஞ்சம்
  தானறி குற்றப் படின். - குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஒரு தாசியின் மகள் தன் தாயிடம் கேட்ட வினாவும் அதற்குத் தாய் சொன்ன விடையும். சிந்தனையை நனிதூண்டும் கவிதை)

என்னையே புணருவோர்கள்
எனக்குமோர் இன்பம் நல்கி
பொன்னையே குவித்துப்பாதம்
பணிவதும் ஏனோஅம்மா
இம்மையில் அறம்செய்யாதோர்
திரவியம் சிதறவேண்டி
என்னையும் சூதும்வாதும்
நான்முகன் படைத்தவாறே.
- விநோதரசமஞ்சரி

பொல்லான் என்பர் அதனாலென்
புனிதர் என்பார் அதனாலென்
கல்லான் என்பர் அதனாலென்
கலைஞன் என்பார் அதனாலென்
சொல்லா வசைகள் சொன்னாலென்
சூழ்ந்து நின்று புகழ்ந்தாலென்
எல்லாநாளும் ஒருநாள்போல்
இருக்க வேண்டும் என்மனமே. - உமர்கயாம்

உள்ளினும் சுட்டிடும் உணரும் கேள்வியிற்
கொள்ளினும் சுட்டிடும் குறுகி மற்றதைத்
தள்ளினும் சுட்டிடும் தன்மை யீதினாற்
கள்ளினும் கொடியது காமத்தீயதே.
- கந்தபுராணம்

'எல்லாம் அவன் செயலே' என்பதற்கு என்ன பொருள் 'உன்னால் முடிந்ததெல்லாம் ஓரளவே' என்று பொருள். - கண்ணதாசன்

தக்கது இனிது என்றிவ்
விரண்டையும் எடுத்து நோக்கில்
தக்கது தனையேநாடி
மதியுளோர் என்றும்நிற்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியிலாமூடர் என்றும்
இனிதையே நாடியோடி
மிக்கதோர் துன்பவெள்ளம்
அதில்விழுந் தேங்கி நிற்பர்
- கத உபநிடதம்

அகமோ நிலையில் உலகில் அலைய
மிகவாய துதிபாடிடில் என்விளையும்
சகமீதுனை எத்தருணந் தனிலும்
குகநான் மறவாமை அருள்குருவே
- சந்நிதிக் கந்தர் சதகம்

## 28. நல்லறிவு

**சங்கச் செய்யுள் - பாலைக் காட்சி**
வறியவன் இளமைபோல்
வாடிய சினையவாய்
சிறியவன் செல்வம்போல்
சேர்ந்தார்க்கு நிழலின்றி
யார்கண்ணும் இகந்த செய்து
இசைகெட்டான் இறுதிபோல்
வேரொடும் மரம் வெம்ப.... (கலித்தொகை:
பாலைபாடிய பெருங்கடங்கோன் -மன்னன்)

இன்பம தடைந்தகாலை
இனிதென மகிழ்ச்சி யெய்தார்
துன்பம துற்றபோதுந்
துண்ணெனத் துளங்கிச் சோரார்
இன்பமுந் துன்பந்தானும்
இவ்வுடற்கியைந்த வென்றே
முன்புறு தொடர்பை யோர்வார்
முழுவதுமுணர்ந்த நீரார். - கந்தபுராணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தாம்தாம்முன் செய்தவினை தாமே அனுபவிப்பார்
  பூந்தா மரையோன் பொறி வழியே - வேந்தே
  ஒறுத்தாரை என்செயலாம் ஊரெல்லாம் ஒன்றாய்
  வெறுத்தாலும் போமோ விதி. - ஒளவையார்

- கண்காணியில் லென்று கள்ளம் பல செய்வார்
  கண்காணி யில்லா இடமில்லை காணுங்கால்
  கண்காணி யாகக் கலந்தெங்கு நின்றானைக்
  கண்காணி கண்டார் களவொழிந் தாரே
  - திருமந்திரம்

- இன்னதுதான் இப்படித்தான் என்பதெல்லாம்
  பொய்க்கணக்கு இறைவனிடம் உள்ளதடா
  எப்போதும் உன்வழக்கு - கண்ணதாசன்

- தந்தையார் போயினார் தாயாரும் போயினார்
  தாமும் போவார்
  கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார்
  பார்க்கின்றார்
  கொண்டு போவார்
  எந்தநாள் வாழ்வதற்கே மனம் வைத்தியால்
  ஏழை நெஞ்சே
  அந்தணா ரூர்தொழு துய்யலா மையல்கொண்டு
  அஞ்சல் நெஞ்சே. - சம்பந்தர்

- வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்
  பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த
  பறிதான்
  தாழாதறஞ் செய்மின்தடங் கண்ணான்
  மலரோனும்
  கீழ்மேலற நின்றான் திருக் கேதாரமெனீரே.
  - சுந்தரர்

- நடலைவாழ்வு கொண்டென் செய்திர் நாணிலீர்
  சுடலை சேர்வது சொற்பிர மாணமே
  கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால்
  உடலினார் கிடந்தூர் முனி பண்டமே - அப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இருந்தவீடும் கொஞ்சிய சிறுவரும் உறுகேளும்
 இசைந்தஊரும் பெண்டிரும் இளமையும்
 வளமேவும்
 விரிந்தநாடுங் குன்றமு நிலையென மகிழாதே
 விளங்குதீபங் கொண்டுனை வழிபட
 அருள்வாயே
 குருந்திலேறுங் கொண்டலின் வடிவினன்
 மருகோனே
 குரங்குலாவுங் குன்றுறை குறமகள்
 மணவாளா
 திருந்த வேதந் தண்டமிழ் தெரிதரு புலவோனே
 சிவந்த காலுந் தண்டையு மழகிய
 பெருமாளே. - அருணகிரிநாதர் திருப்புகழ்

- சொல்லொக்குங் கடியவேகச்
 சுடுசரங் கரிய செம்மல்
 அல்லொக்கும் நிறத்தினாள்மேல்
 விடுதலும் வயிரக் குன்றக்
 கல்லொக்கும் நெஞ்சில் தங்கா
 தப்புறங் கழன்று கல்லாப்
 புல்லர்க்கு நல்லோர் சொன்ன
 பொருளெனப் போயிற்றன்றே. - கம்பராமாயணம்

- நீற்றைப் புனைந்தென்ன நீராடப் போயென்ன
 நீமனமே
 மாற்றிப்பிறக்க வகையறிந் தாயில்லை
 மாமறைநூல்
 ஏற்றிக்கிடக்கு மெழுகோடி மந்திர
 மென்னகண்டாய்
 ஆற்றிற் கிடந்தும் துறையறியாமல்
 அலைகின்றாயே. - பட்டினத்தார்

- காலமகள் கைவரிசை காட்டத்
 தொடங்கிவிட்டால்
 ஞானமகள் கூடத்தன் நல்லறிவை
 இழந்துநிற்பாள் - கண்ணதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24. தன்னையறி

தன்னை அறிந்து விட்டால் தானந் தவமேது?
தனக்குவமை இல்லையடி கிளியே.
- யோகர் சுவாமிகள்

**நோய் :**
மனிதன் பிறப்போடு நோயும் பிறக்கிறது. மனிதன் சிரிக்கிறான் என்றால் நோய் இளைப்பாறுகிறது. அழுகிறான் என்றால் நோய் சோம்பல் முறிக்கிறது. முனகுகிறான் என்றால் நோய் எழுந்து உட்கார்ந்துவிட்டது. கூப்பாடு போடுகிறான் என்றால் நோய் நாட்டியம் ஆடுகிறது. மனிதன் அமைதியாகிவிட்டான் என்றால் நோய் அவனை வென்றுவிட்டது.

தீமையுள்ளன யாவையும் தந்திடும் சிறப்பும்
தோமில்செல்வமும் கெடுக்கும்நல் லுணர்வினைத்
தொலைக்கும்
ஏமநன்னெறி தடுத்து இருள்உய்த்திடு மிதனால்
காமமன்றியே ஒரு பகை உண்டுகொல் கருதில்.
- கந்தபுராணம்

அன்னை எத்தனை எத்தனை அன்னையோ
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ
பின்னை எத்தனை எத்தனை பெண்டிரோ
பிள்ளை எத்தனை எத்தனை பிள்ளையோ
முன்னை எத்தனை எத்தனை பிறவியோ
மூடனாய் அடியேனும் அறிந்திலேன்
இன்னமெத்தனை எத்தனை பிறவியோ
என்செய்வேன் கச்சி ஏகம்பநாதனே.
- பட்டினத்தார்

எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப்
பட்டாலும்
முத்தர் மனமிருக்கும் மோனத்தே - வித்தகமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலும்
தாதிமனம் நீர்க்குடத்தே தான். - பட்டினத்தார்

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!
- கந்தர் அனுபூதி

தித்திக்கும் தெள்ளமிர்தச் சித்தாந்தத்
துட்பொருளை
முத்திக்கு வித்தை முதனினைப்ப தெக்காலம்
- பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப் புலம்பல்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற்
குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப்
பெருமாளே. - திருப்புகழ்

மனமெனுந் தோணிபற்றி
மதியெனுங் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கையேற்றிச்
செறிகடல் ஓடும்போது
மதனெனும் பாறைதாக்கி
மறியும்போ தறியவொண்ணா
துனையுனும் உணர்வை நல்காய்
ஒற்றியூர் உடையகோவே.- அப்பர் சுவாமிகள்

(அ) நானெனவும் நீயெனவும்
நாமிரண்டு மற்றொன்றும்
நீயெனவே சிந்தைதனில்
நேர்படுவ தெக்காலம்
(ஆ) உள்ளமறியா தொளித்திருந்த
நாயகனைக்
கள்ளமனந் தெளிந்து காண்பதினி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்காலம்
- பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப் புலம்பல்

- ஆதியாய் நடுவுமாகி
அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித்
தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகமாகிப்
பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும்தில்லைப்
பொதுநடம் போற்றி போற்றி.
- சேக்கிழார் பெரியபுராணம்

- அளவுக் காகாரம் அறிந் துண்ணாதான்
பிளவளவேனும் பேரின்ப மெய்தான்
- யோகர் சுவாமிகள்

- அன்பை அடிநாதமாகக்கொண்டு திகழ்வது சமயம்; அதிகாரத்தை ஆதார சுருதியாகக் கொண்டு சுழல்வது சட்டம்.

- சட்டம் ஏமாந்து போகும்; தர்மம் பழிவாங்கித் தீரும்.

## 25. மெய்விளக்கு உன்னுள்ளிருக்கு

- கைவிளக்குக் கொண்டு கடலில் வீழ்வார்போல்
மெய்விளக்குன் னுள்ளிருக்க வீழ்குவதேன்
புல்லறிவே. - இடைக்காட்டுச்சித்தர்

- நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும். - திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எதைக்கண்டு மகிழ்வெய்துகிறாயோ அது
  உனக்குக் கேடு தரும். - சித்தர் வாக்கியம்.

- சினமென்னும் பாம்பிறந்தால் தாண்டவக்கோனே
  யாவும் சித்தியென்றே நினையேடா
  தாண்டவக்கோனே. - இடைக்காட்டுச் சித்தர்

- ஆசையெனும் பசுமாளின் தாண்டவக்கோனே -
  இந்த அண்டமெல்லாம் கண்டறிவாய்
  தாண்டவக்கோனே. - இடைக்காட்டுச் சித்தர்

- மனம் வாக்குக் காயமெனும் வாய்த்த
  பொறிக்கெட்டாத தினகரனை நெஞ்சமதிற்
  சேவித்துப் போற்றீரே. -இடைக்காட்டுச்சித்தர்

- எள்ளிற் தைலம்போல எங்கும் நிறைபொருளை
  உள்ளிற் துதித்தே உணர்வடைந்து போற்றீரே
  - இடைக்காட்டுச்சித்தர்

- பொய்யான கல்விகற்றுப்பொருள் மயக்கம்
  கொள்ளாமல்
  மெய்யான ஞானக்கல்வி விரும்புவாய்
  கன்மனமே. - இடைக்காட்டுச்சித்தர்

- கட்புலனுக் கெவ்வளவுங் காணா
  திருந்தெங்கும்
  உட்புலனாய் நின்றவொன்றை
  உய்த்தறிநீ புல்லறிவே.
  - இடைக்காட்டுச்சித்தர்

- நல்வழியிற் சென்று நம்பதவி யெய்தாமல்
  கொல்வழியிற் சென்று குறுகுவதேன் புல்லறிவே
  - இடைக்காட்டுச்சித்தர்

- தன்னை அறியவேணும்
  சாராமற் சாரவேணும் அகப்பேய்
  பின்னை அறிவதெல்லாம்
  பேயறிவாகுமடி அக்கப்பேய்.
  - அகப்பேய் சித்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வஞ்சகமற்று வழிதன்னைக் கண்டோர்க்குச்
  சஞ்சலமேதுக்கடி குதம்பாய் சஞ்சல மேதுக்கடி.
  - குதம்பைச்சித்தர்

- காணாமற்கண்டு கருத்தோடிருப்போர்க்கு வீணாசை
  ஏதுக்கடி. -குதம்பைச் சித்தர்

- முத்தமிழ் கற்று முயங்கு மெய்ஞ்ஞானிக்குச்
  சத்தங்களேதுக்கடி குதம்பாய்
  சத்தங்களேதுக்கடி. - குதம்பைச் சித்தர்

- கண்டாரை நோக்கிக் கருத்தோ டிருப்பார்க்குக்
  கொண்டாட்ட மேதுக்கடி. - குதம்பைச் சித்தர்

- சொல்லரும் சூது பொய்மோசம் - செய்தாற்
  சுற்றத்தை முற்றாய்த் துடைத்திடும் நாசம்
  நல்லபத்தி விசுவாசம் - எந்த
  நாளும் மனிதர்க்கு நன்மையாம் நேசம்
  - கடுவெளிச் சித்தர்

- நாடுநகர் வீடுமாடு நற்பொரு ளெல்லாம்
  நடுவன் வரும்பொழுது நாடிவருமோ
  கூடுபோன பின்பவற்றாற் கொள்பயனென்னோ
  கூத்தன் பதங்குறித்து நின்றாடாய் பாம்பே
  - பாம்பாட்டிச் சித்தர்

- மலைபோன்ற செம்பொற்குவை வைத்திருப்பவர்
  மறலிதான் வருகையில் வாரிச் செல்வரோ
  அலையாமல் அகத்தினை அத்தன்பால்
  வைத்தோர்
  அழியாரென்றே நீதுணிந் தாடாய் பாம்பே
  - பாம்பாட்டிச் சித்தர்

- முக்கனியுஞ் சர்க்கரையும் மோதகங்களும்
  முதிர்சுவைப் பண்டங்களும் முத்தியுண்டவாய்
  மிக்கவுயிர் போனபின்பு மண்ணை விழுங்க
  மெய்யாகக் கண்டோ மென்றாடாய் பாம்பே
  - பாம்பாட்டிச்சித்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணப்பட்டும் வாசனையும் வாய்த்த கோலமும்
வண்கவிகை ஆலவட்டம் மற்றும் சின்னமும்
திண்ணமுடன் யமபுரஞ் செல்லும் காலத்தில்
சேரவரமாட்டா வென்றாடாய் பாம்பே.
- பாம்பாட்டிச்சித்தர்

மக்கள் பெண்டிர் சுற்றம் மருமக்கள் மற்றவர்
மாளும்போது கூடவவர் மாள்வதில்லையே
தக்கவுல கனைத்தும் தந்த கரத்தனைத்
தாவித்தாவித் துதித்து நின்றாடாய் பாம்பே.
- பாம்பாட்டிச்சித்தர்

கானலை மான் நீரெனவே கண்டுசெல்லல்போல்
காசினி வாழ்வினை மூடர் கண்டுகளிப்பர்
மேனிலை கண்டார்கள் வீணாய் வம்பு பேசிடார்
மெய்யன் பாதம் நாடுவரென் றாடாய் பாம்பே.
- பாம்பாட்டிச்சித்தர்

## 26. எல்லாம் வெளிமயக்கே

எல்லாம் வெளிமயக்கே இறைவா
கச்சியேகம்பனே - பட்டினத்தார்

### கடுவெளிச் சித்தர் பாடல்கள் (6)

நந்தவனத்திலோர் ஆண்டி - அவன்
நாலாறுமாதமாய் குயவனை வேண்டி
கொண்டுவந்தானொரு தோண்டி - மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி.

நல்லவழி தனை நாடு - எந்த
நாளும் பரமனை நத்தியே தேடு
வல்லவர் கூட்டத்திற் கூடு - அந்த
வள்ளலை நெஞ்சினில் வாழ்த்திக் கொண்டாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பொய்வேதந் தன்னைப் பாராதே - அந்தப்
  போதகர் சொற்புத்தி போத வராதே
  மைவிழி யாரைச் சாராதே - துன்
  மார்க்கர்கள் கூட்டத்தில் மகிழ்ந்து சேராதே.

- வைதாரைக் கூட வையாதே - இந்த
  வையம் முழுதும் பொய்த்தாலும் பொய்யாதே
  வெய்ய வினைகள் செய்யாதே - கல்லை
  வீணிற் பறவைகள் மீதிலெய்யாதே.

- கஞ்சாப் புகைபிடியாதே - வெறி
  காட்டி மயங்கியே கட்குடியாதே
  அஞ்சவுயிர் மடியாதே - பக்தி
  அற்ற வஞ்ஞானத்தின் நூல்படியாதே.

- கள்ளவேடம் புனையாதே - பல
  கங்கையிலே யுன் கடம் நனையாதே
  கொள்ளை கொள்ள நினையாதே - நட்புக்
  கொண்டு புரிந்துநீ கோள்முனையாதே.

- மயிலென்றும் குயிலென்றும் மாணிக்கமென்றும்
  மானே என்றும் தேனேயென்றும்
  வானமுதென்றும்
  ஒயிலான வன்னமயிற் கொத்தவளென்றும்
  ஓதாமற் கடிந்து விட்டாடாய் பாம்பே
  - பாம்பாட்டிச் சித்தர்

- ஊத்தைக் குழிதனிலே மண்ணையெடுத்தே
  உதிரப் புனலிலே யுண்டை சேர்த்தே
  வாய்த்த குயவனார் பண்ணும் பாண்டம்
  வறகோட்டுக்கு மாகாதென் றாடாய் பாம்பே.
  - பாம்பாட்டிச் சித்தர்

- கள்ளங்கொலை காமமாதி கண்டித்தவெல்லாம்
  கட்டறுத்துவிட்டு ஞானக்கண்ணைத் திறந்து
  தெள்ளிதான வெட்டவெளி சிற்சொரூபத்தைத்
  தேர்ந்து பார்த்துச் சிந்தை
  தெளிந்தாடாய் பாம்பே. - பாம்பாட்டிச் சித்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கோபமென்னும் மதயானை கொண்ட மதத்தைக்
  கூர்கொள்புத்தி அங்குசத்தால்
  கொன்றுவிட்டேங்காண் தீபமென்னும் சிற்சொரூபச்
  செய்யபொருளைச்
  சேர்ந்துறவு கொண்டோமென்றாடாய் பாம்பே
  - பாம்பாட்டிச் சித்தர்

- மனமென்னுங் குதிரையை வாகனமாக்கி
  மதியென்னும் கடிவாளம் வாயினிற் பூட்டி
  சினமென்னுஞ் சீனியின் மேற் சீராயேறித்
  தெளிவிடஞ் சாரி விட்டாடாய் பாம்பே
  - பாம்பாட்டிச் சித்தர்

- சமயபேதம் பலவான சாதிபேதங்கள்
  சகத்தோர்க்கே யல்லாதுசற் சாதுகளுக்கோ
  சிமயத்தி லேறின பேர் சித்தமாறுமோ
  சித்தர் சித்தாந்தந் தேர்ந்தாடாய் பாம்பே.
  - பாம்பாட்டிச் சித்தர்

- நாம் பெரிய ரென்னுமதை நாடா கடக்குமவர்
  தாம் பெரியரென்று மறை சாற்றிடும் - நாம்
  பெரியம்
  என்பார் சிறியர் இவரலார் இவ்வுலகில்
  துன்பார் சுமப்பவர்கள் சொல். - சிவபோகசாரம்

- ஊனாகி ஊனில் உயிராகி எவ்வுலகுந்
  தானாகி நின்றதனை அறிவதெக்காலம்.
  - பத்திரகிரியார்

- உள்ளமறியாது ஒளித்திருந்த நாயகனைக்
  கள்ளமனந் தெளிந்து காண்பதினி எக்காலம்
  - பத்திரகிரியார்

- வெல்லுமட்டும் பார்த்து
  வெகுளியெலாம் விட்டகன்று
  செல்லுமட்டும் சிந்தை
  செலுத்துவது மெக்காலம். - பத்திரகிரியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27. உள்ளக் கருத்து

- ஓயாக் கவலையினால் உள்ளுடைந்து வாடாமல்
  மாயாப் பிறவி மயக்கறுப்ப தெக்காலம்.
  - பத்திரகிரியார்

- மன்னுயிரைக் கொன்று வதைத்துண் டுழலாமல்
  தன்னுயிர்போ லெண்ணித் தவமுடிப்ப
  தெக்காலம். - பத்திரகிரியார்

- அன்பையுருக்கி அறிவை யதன் மேற்புகட்டித்
  துன்ப வலைப்பாசத் தொடக்கறுப்ப தெக்காலம்.
  - பத்திரகிரியார்

- கள்ளக் கருத்தையெல்லாங் கட்டோடு
  வேரறுத்திங்கு
  உள்ளக் கருத்தை உணர்ந்திருப்ப தெக்காலம்.
  - பத்திரகிரியார்

- ஓடாமலோடி உலகை வலம்வந்து சுற்றித்
  தேடாம லென்னிடமாய்த் தெரிசிப்ப தெக்காலம்.
  - பத்திரகிரியார்

- என்னைவிட்டு நீங்காமல் என்னிடத்து நீயிருக்க
  உன்னைவிட்டு நீங்கா தொருப்படுவ தெக்காலம்.
  - பத்திரகிரியார்

- இயங்கும் சராசரத்தில் எள்ளுமெண்ணெயும்போல
  முயங்கு மந்தவேத முடிவறிவ தெக்காலம்.
  - பத்திரகிரியார்

- நானெனவும் நீயெனவும் நாமிரண்டு மற்றொன்றும்
  நீயெனவே சிந்தைதனில் நேர்படுவ தெக்காலம்.
  - பத்திரகிரியார்

- எவரெவர்க ளெப்படிக் கண்டெந்தப் படிநின்றார்
  அவரவருக் கப்படி நின்றாயென்ப தெக்காலம்.
  - பத்திரகிரியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உம்பர் தருத்தே நுமணிக் கசிவாகி
    ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
  இன்ப ரசத்தே பருகிப் பலகாலும்
    என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
  தம்பி தனக்காக வனத் தணைவோனே
    தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
  அன்பர் தமக்கான நிலைப் பொருளோனே
    ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.
  - அருணகிரிநாதர்

- பேய்க் குரங்கு போல பேருலகில் இச்சைவைத்து
  நாய்நரிகள் போலலைந்தேன் நன்மையுண்டோ
    கன்மனமே! - இடைக்காட்டுச் சித்தர்

- தூராதி தூரமடி அகப்பேய்
    தூரமு மில்லையடி
  பாராமற் பாரடியோ அகப்பேய்
    பாழ்வினை தீரவென்றால். -அகப்பேய்ச்சித்தர்

- கண்டவர்கள் ஒருக்காலும் விண்டிடார்களே
  விண்டவர்கள் ஒருக்காலும் கண்டிடார்களே
  கொண்டகோல முள்ளவர்கள் கோனிலை
      காணார்
  கூத்தாடிக் கூத்தாடியே நீயாடாய் பாம்பே
    - பாம்பாட்டிச் சித்தர்

- தன்னை யறியவேணும் அகப்பேய்
    சாராமற் சாரவேணும்
  பின்னையறிவ தெல்லாம் அகப்பேய்
    பேயறிவாகுமடி. - அகப்பேய்ச்சித்தர்

- நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
  பின்நீர பேதையார் நட்பு. - திருக்குறள்

- எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
  பெரியார்ப் பிழைத்தொழுகு வார் - திருக்குறள்

- அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
  வழுக்கியும் கேடீன் பது. - திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அறிவாளிகள் இறந்தவர்களைப்பற்றியோ இருப்பவர்களைப் பற்றியோ ஒருபோதும் கவலைப்பட மாட்டார்கள். அவர்களுடைய மனம் சாந்த சமநிலையில் இருக்கும். - பகவத்கீதை

- விருப்பு வெறுப்புக்களை நீக்கி ஆன்மாவுக்குக் கட்டுப்பட்ட புலன்களால் விஷயங்களை அனுபவிக்கும் தன்னடக்கமுள்ள மனிதன் மனச்சாந்தியை அடைகிறான். - பகவத்கீதை

- ஆமைபோல் அறிவாளிகளும் தங்கள் புலன்களை நினைத்த மாத்திரத்தில் உள்ளிழுத்து அடக்கிக்கொள்வார்கள்.
  - பகவத்கீதை

- எவனுடைய புலன்கள் விஷயங்களிலிருந்து இழுத்து நிறுத்தப்படுகின்றனவோ அவனுடைய ஞானமே நிலைபெற்ற ஞானமாகும்.
  - பகவத்கீதை

- எவன் ஆசைகளை அகற்றிவிட்டு பற்றுக்களில் நீங்கி, 'நான்', 'எனது' விடுபட்டு நிற்கிறானோ அவன் மனச்சாந்தி அடைகிறான்.

## 28. புலனடக்கம்

- அபகார நிந்தைபட்டு உழலாதே
  அறியாத வஞ்சகரைக் குறியாதே
  உபதேச மந்திரப் பொருளாலே
  உனைநான் நினைந்தருள் பெறுவேனோ
  இபமா முகன்தனக்கு இளையோனே
  இமவான் மடந்தையுத் தமிபாலா
  செபமாலை தந்த சற்குருநாதா
  திருவாவி னன்குடிப் பெருமாளே
  - திருப்புகழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நிறைமதி முகமெனும் ஒளியாலே
  நெறிவிழி கணையெனு நிகராலே
  உறவுகொள் மடவர்கள் உறவாமோ
  உனதிரு வடியினி யருள்வாயே
  மறைபயி லரிதிரு மருகோனே
  மருவல ரசுரர்கள் குலகாலா
  குறமகள் தனைமணம் அருள்வோனே
  குருமலை மருவிய பெருமாளே
  - திருப்புகழ்

- கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
  சொல்லா நலத்தது சால்பு. - குறள்

- இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
  அதனை அவன்கண் விடல். -குறள்

- எவர் தம்மில் உலகத்தையும் உலகில் தம்மையும் காண்கிறார்களோ, தம் சுயநல ஆசைகளையும் உள்ளத்தை அரித்துக் கொண்டிருக்கும் புலன்களின் வேட்கைகளையும் துறக்கிறார்களோ அவர்கள் தெய்வ உணர்வில் நிற்கும் ஞானிகள் ஆவார்கள். - பகவத்கீதை

- ஒல்லும் கருமம் உடற்றுபவர் கேண்மை
  சொல்லாடார் சோர விடல். - குறள்

- புலனடக்கத்தினால் மனச்சாந்தி கைவரப் பெற்றவனுக்கு சகல துக்கங்களும் நீங்கி விடுகின்றன. ஆவன் விரைவில் ஞானியாவான்.
  - பகவத்கீதை

- ஐம்புலன்களின் உணர்வாலேயே இன்ப துன்பங்களின் நிலையற்ற தோற்றங்கள் எழுகின்றன. அவைகளால் பாதிக்கப்படாமல் இருக்கக் கற்றுக்கொள். - பகவத்கீதை

- நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
  மேற்சென்று இடித்தற் பொருட்டு. - குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நட்டார்போல் நல்லவை சொல்லினும்
  ஒட்டார்சொல்
  ஒல்லை உணரப் படும். - குறள்

- உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
  அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு. - குறள்

- சட்டத்தரணி உண்மையைத் திரித்து வாதம் செய்பவன்; உண்மையை, நீதியைப் பணத்துக்காகத் திரித்துப் புறக்கணிப்பவன்; சட்டத்துக்குள் உண்மையை அடக்கியது போன்ற பாவனையில் தன்னுடைய வாதத்தை நீதிபதியும் யூரிமாரும் நம்பும்படி செய்து தன்னுடைய கட்சிக்காரனுக்கு வெற்றி ஈட்டிக்கொடுத்து பெரும்பொருள் ஈட்டுபவன்.

- மனிதரிடம் காணப்படும் மூவகைக் குணங்கள்: சத்துவ குணம், ரஜோகுணம், தமோ குணம் என்பன. சத்துவ குணத்திலிருந்து ஞானவேட்கையும், ரஜோ குணத்திலிருந்து பேராசை, புலன் நுகர்ச்சிப் பொருள்களில் அதிக வேட்கை முதலியனவும், தமோ குணத்திலிருந்து அறியாமை, பித்தம், மயக்கம், சோம்பல் முதலியனவும் தோற்றுகின்றன. - பகவத்கீதை

- இவ்வுலகில் தைவம், ஆசுரம் என இருவகைப் படைப்புகள் உண்டு. தைவம் தெய்வீக (உயர்ந்த) குணங்கள் அமைந்தது; ஆசுரம் அசுரத் தன்மை (கீழ்மையான) குணங்கள் அமைந்தது.
  **தைவ குணங்கள்**: அச்சமின்மை, மனத்தூய்மை, தன்னடக்கம், எளிமை, அஹிம்சை, வாய்மை, கருணை, நிதானம், நேர்மை, உற்சாகம், இதம், புலனடக்கம், கோபமின்மை, பேராசையின்மை, தியாகம், பொறுமை, தற்பெருமையின்மை, பணிவு, மென்மை, கோள் சொல்லாமை என்பன.
  **ஆசுர குணங்கள்:** பொய், காமம், கோபம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகம், வஞ்சகம், மமதை, வீண்பெருமை, பொய்க் கௌரவம், ஹிம்சை. டம்பம், கர்வம், பேராசை, போகம், விவேகமின்மை, அடங்கா ஆசைகள் முதலியன. - பகவத்கீதை

## 29. பகவத்கீதையிலிருந்து திரட்டியவை

## தொகுதி – 1

- உடம்பெடுத்த ஆன்மா இளமை, மூப்பு, மரணம் இவற்றைக் கண்டுகொண்டு வேறு பிறவி எடுக்கிறது. தன்னையுணர்ந்த அறிவாளி இம்மாற்றங்களைக் கண்டு மயங்குவதில்லை.
- இன்ப துன்பங்களால் பாதிக்கப்படாதவனும் இருநிலையிலும் சமநிலையில் இருப்பவனுமே விடுதலைக்குத் தகுதிபெறுகிறான்.
- இல்லாததற்கு இருப்பு என்பது கிடையாது. இருப்பதற்கு இல்லாமை கிடையாது. இவ்விரண்டின் உண்மை நிலையையும் மெய்ப் பொருளைக் கண்டவர்கள் அறிவார்கள்.
- உடம்பினுள் நிற்கும் ஆன்மா அழிவற்றது என்பதை அறிவாயாக. இவ்வாறு அழிவற்ற இந்த ஆன்மாவுக்கு எவரும் அழிவை ஏற்படுத்த முடியாது.
- பூதவுடல் மட்டுமே அழிவுறுவது. உடலை இயக்கும் ஆன்மா அழிவற்றது, நித்தியமானது, அளவிட இயலாதது.
- ஆன்மா அழிவதுமில்லை, அழிப்பதுமில்லை என்பதை ஞானிகள் அறிவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆன்மாவுக்கு பிறப்பு, இறப்பு இல்லை. அது பிறப்பற்றது, என்றுமுள்ளது, நிலையானது, பழமையானது, சரீரம் அழியும்போது இது அழியாது.

- பழையனவற்றைக் களைந்து புதிய ஆடைகளை ஒருவன் அணிவதுபோன்று ஆன்மா பழைய உடல்களை நீக்கி, புதிய உடல்களை ஏற்கின்றது.

- ஆன்மா வெட்டவோ எரிக்கவோ நனைக்கவோ உலர்த்தவோ முடியாதது. இது நிலையாக உள்ளது. எங்கும் வியாபித்திருப்பது. அசைவற்றது; இன்றும் என்றும் புதியது.

- பிறந்தவனுக்கு மரணம் நிச்சயம். பிறந்தது இறக்கும்; இறந்தது பிறக்கும். எனவே தவிர்க்க முடியாத இந்நிலை குறித்துக் கவலைப்பட என்ன இருக்கிறது?

- ஆன்மாவைப்பற்றிப் பலரும் பலவிதமாகக் கூறுகின்றபோதிலும் எவரும் இதைப்பற்றிச் சிறிதும் அறியாதிருக்கின்றனர்.

- வெற்றி தோல்வியின் பற்றைத் துறந்து பலன்களை எதிர்பாராது உன் கடமையைச்செய்.

- பலனை எதிர்பாராது, பக்தி உணர்வுடன் கடமையைச் செய்பவர்கள் அறிவாளிகள். பலனை எதிர்பார்த்துக் கருமம் ஆற்றுபவர்கள் பேதைகள்.

- மனதில் எழும் ஆசைகளைத் துறந்து பற்றுக்களில் நின்றும் விடுபட்டுத் தன்னில்தான் மகிழ்ச்சி கொள்பவன் ஞானி ஆகிறான்.

- ஞானி இன்ப துன்பங்களைச் சமமாக நோக்கி ஆசை, பயம் கோபம் இவற்றினின்றும் விடுபட்டு மன அமைதியுடன் இருப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நன்மையின் களிப்பும் துன்பத்தின் கவலையும் இன்றிச் சாந்த சமநிலையில் இருப்பவனே பூரண அறிவில் நிலைபெறுகிறான்.

- பகுத்தறிவுடன் புலன்களை அடக்க வல்லவர் களைக் கூட வலிமைமிக்க புலன்கள் இழுத்துச் சென்று விடுகின்றன.

- அலைந்துகொண்டிருக்கும் புலன்களால் தத்தளிக்கும் மனம் ஒருவனுடைய அறிவை இழுத்துச் சென்று விடுகின்றது.

- விருப்பு வெறுப்புக்களைக் கொண்டுவரும் புலன்களை அடக்கியவனுக்கு மனச்சாந்தி ஏற்படுகின்றது. புலனடக்கத்தினால் மனம் அடங்கியவன் துக்கங்களில் நின்றும் விடுபட்டு ஞானநிலை அடைகிறான்.

- பற்றின்றிக் கடமையைச் செய். அப்படிச் செயல் ஆற்றுபவன் உயர்ந்த நிலையை அடைகிறான்.

- உடம்பெடுத்த ஆன்மா, சட இயற்கையின் முக்குணங்களாகிய சத்வ. ரஜோ, தமோ குணங்களின் பாதிப்பால் மயங்கிய நிலையில் இருக்கிறது.

- தர்மம் அழிந்து அதர்மம் தலைதூக்கும் காலங்களில் எல்லாம் பக்தர்களைக் காத்து, கொடியவர்களை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதற்காக நான் யுகம்தோறும் அவதரிக்கின்றேன்.

- தன் கர்ம பலனில் பற்று வைக்காமல் திருப்தியுடன் பற்றற்றுச் செயல்புரிபவன் செயலில் செயலின்மை நிலையை அடைகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30. பகவத்கீதையிலிருந்து திரட்டியவை தொகுதி - 2

- காமம் ரஜோ குண மேலீட்டினால் உற்பத்தி ஆகிறது. அது கோபமாகவும் மாறுகிறது. காமமே இவ்வுலகத்தில் எல்லாவற்றையும் அழிக்கும் கொடிய பகைவனென்று அறிவாயாக.

- நெருப்பு புகையாலும் கண்ணாடி தூசியாலும், கரு கருப்பையாலும் மூடப்பட்டிருப்பதுபோல ஜீவாத்மாவும் இக்காமத்தால் மூடப்பட்டிருக்கிறது.

- காமம் அறிஞனுக்குக் கொடிய பகைவன். இது போதுமென்ற திருப்தியில்லாத கொடிய நெருப்பு. ஒருவனுடைய தூய அறிவு இந்தக் காமத்தினால் மறைக்கப்பட்டுவிடுகிறது.

- புலன்கள் மனம், புத்தி இவைகள் காமத்தின் பாசறைகள். காமம் இவைகளால் அறிவை மறைத்து மனிதனை மயக்குகின்றது.

- புலன்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் பாவத்தின் பெரும் சின்னமாகிய காமத்தை ஆரம்பத்திலேயே அடக்கி, அறிவைக் கொல்லும் இந்தக் கொடிய பகைவனை வெல்வாயாக. கன்மேந்திரியங்கள் சடப் பொருள்களைவிட உயர்ந்ததவை. மனம் புலன்களை விடவும், அறிவு மனத்தை விடவும் உயர்ந்தது. ஆன்மாவோ அறிவைவிட உயர்ந்ததென்பதை அறிந்துகொள்.

- புலன்கள், மனம், அறிவு இவற்றிலும் விட உயர்ந்தவனென ஆன்மா தன்னை அறிந்து, கொடிய பகைவனாகிய காமத்தை ஆன்ம பலத்தால் வெற்றி கொள்ள வேண்டும்.

- புலன் இச்சைகளைத் திருப்திசெய்யும் நோக்கம் சிறிதுமின்றிச் செயல்புரிபவன் ஞானி. அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்கள் ஞானமென்ற நெருப்பினால் சுட்டு எரிக்கப்பட்டுவிடுகின்றன.

- நெருப்பு விறகை நீறாக்குவதுபோல ஞானமாகிய நெருப்பு எல்லாக் கருமங்களையும் சாம்பராக்கி விடுகின்றது.
- இவ்வுலகில் ஞானத்தைப்போலச் சிறந்ததும் தூயதும் வேறொன்றுமில்லை. ஞானம் எல்லா யோகங்களின் முற்றிய பழமாகும்.
- அறிவில்லாதவன், சிரத்தையில்லாதவன், சந்தேகம் உள்ளவன், இப்படிப்பட்டவன் இறை உணர்வைப் பெறுவதில்லை.
- சந்தேகம் கொள்ளுபவருக்கு இவ்வுலகிலும் பிற உலகிலும் என்றுமே இன்பம் இல்லை.
- செயலின் விளைவுகளில் விருப்பு வெறுப்புக் களைத் துறந்தவன் துறவியாவான். அவன் கர்ம பந்தங்களை வென்று விடுதலை அடைகிறான்.
- காம குரோதங்களிலிருந்து விடுபட்டு, மனதை அடக்கித் தன்னை அறிந்துகொண்டிருக்கும் துறவிகளுக்கு விடுதலை கிட்டுகின்றது.
- மனதை வென்றவனுக்கு மனம் சிறந்த நண்பன் ஆகிறது. அவ்வாறு செய்யத் தவறுபவனுக்கு அதுவே பெரிய விரோதியாகிறது.
- எல்லாவுயிர்களின் இதயங்களிலும் அமைந்து இருக்கும் ஆத்மா நானே. எல்லா உயிர்களின் முதலும், நடுவும் முடிவும் நானே.
- மகிழ்ச்சி, துன்பம், வெறுப்பு, ஆசை இவற்றைக் கடந்தவனாய் நல்லது கெட்டது இரண்டையும் துறந்தவனாய் நிற்கும் என் பக்தன் எனக்கு மிகவும் பிரியமானவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நட்பு-பகை, மானம்-அவமானம், குளிர்-வெப்பம், சுகம்-துக்கம் என்ற இரட்டைகளில் சமநோக்கு உள்ளவனும், புகழ்ச்சி, இகழ்ச்சி இரண்டையும் ஒன்றாகவே கருதுபவனும், எதிலும் திருப்தி உடையவனும், எப்போதும் அமைதியானவனும் தங்குமிடத்திற்காகக் கவலைப்படாதவனும், அறிவில் நிலைபெற்றவனும், பக்தித் தொண்டில் ஈடுபட்டிருப்பவனுமான எனது பக்தன் எனக்கு மிகவும் பிரியமானவன்.

- எல்லா உடல்களில் இருப்பவனும், அழியும் பொருள்களில் அழியாமல் இருப்பவனுமாகிய பரமாத்மாவைக் கண்டவனே உள்ளதை உள்ளபடி அறிந்தவனாவான்.

- பற்றுக்களுடன் பலன் நோக்கிச் செயல்களைச் செய்து கொண்டிருக்கும் அறிவீனர்களுக்கு அறிஞர்கள் புத்திக் குழப்பத்தை உண்டாக்கக் கூடாது. அவர்களை பக்தி உணர்வுடன் செயலாற்றும்படி தூண்டவேண்டும்.

## 81. கேட்டினும் உண்டோர் உறுதி

- கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
  நீட்டி அளப்பதோர் கோல் - குறள்

- கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை
  அடுங்காலை
  உள்ளினும் உள்ளம் சுடும். - குறள்

- கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
  சொல்வேறு பட்டார் தொடர்பு. - திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இறையுணர்வில் மனதைச் செலுத்தியவனுக்கு புலன் உணர்வுகளும் இச்சைகளும் தாமாகவே விடுபட்டுப் போகின்றன. அவனே ஞானி.

  - பகவத்கீதை

- இயலிசையில் உசித வஞ்சிக் கயர்வாகி
  இரவு பகல் மனது சிந்தித் துழலாதே
  உயர்கருணை புரியு மின்பக் கடல்மூழ்கி
  உனைஎனதுள் அறியு மன்பைத் தருவாயே
  மயில்தகர்கல் இடைய ரந்தத் தினைகாவல்
  வனசகுற மகளை வந்தித் தணைவோனே
  கயிலைமலை யனைய செந்திற் பதிவாழ்வே
  கரிமுகவ னிளைய கந்தப் பெருமாளே.

  - திருப்புகழ்

- கலைமேவு ஞானப் பிரகாசக்
  கடலாடி ஆசைக் கடலேறி
  பலமாய வாதிற் பிறழாதே
  பதிஞான வாழ்வைத் தருவாயே
  மலைமேவு மாயக் குறமாதின்
  மனமேவு வாலக் குமரேசா
  சிலைவேட சேவற் கொடியோனே
  திருவாணி கூடற் பெருமாளே.

  - திருப்புகழ்

- புலன் நுகர்ச்சிப் பொருட்களை எண்ணுவதால் பற்று உண்டாகின்றது. பற்றினால் ஆசையும், ஆசையினால் கோபமும் உண்டாகின்றன. கோபத்தில் மோகம் உண்டாகிறது. மோகத்தால் ஞாபகம் தடுமாறுகிறது. இதனால் அறிவு அழிகின்றது. அறிவு அழிந்தால் மனிதன் அழிகிறான். இந்த உண்மையை அறிந்துகொள்.

  - பகவத்கீதை

- முப்பது வயதுக்குள் சிந்தித்து மாற்றம் அடையாதவன் பின்பு மாறுவதென்பது வீண் பேச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இறையுணர்வுடன் ஒன்றி நிற்காதவனுக்கு மனம் அடங்காது. மனம் அடங்காதவனுக்கு ஞானம் உதயமாகாது. அவனுக்கு மனச்சாந்தி ஏற்படாது. சாந்தி இல்லாதவனுக்குச் சுகமேது?
  - பகவத்கீதை

- நதிகள் சென்றுவிழும் சமுத்திரம் அமைதியாய் இருப்பதுபோல ஆசைகள் அடங்கிய மனம் உள்ளவன் சாந்தி அடைகிறான். ஆசைகளை நாடி ஓடுபவன் சாந்தி அடைய ஒருபோதும் முடியாது. - பகவத்கீதை

- உன்னுடைய கடமையைச் செய்யமட்டுமே உனக்கு அதிகாரம் உண்டு; பூரண உரிமை உண்டு. செயல்களின் பலன்களில் உனக்கு அதிகாரமில்லை. - பகவத்கீதை

- **நடராசர் தாண்டவம் - உட்பொருள்:**
  தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
  சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா
  ஊன்றுமலர்ப் பதத்தில் உற்றதி ரோதம்முத்தி
  நான்ற மலர்ப்பதத்தே நாடு.
  - உண்மை விளக்கம் - திருவதிகை மனவாசகங் கடந்தார்

- தொடுவது சுலபம்; பின்பு விடுவது மகா கஷ்டம்.

- ஒருவன் வழுக்காமல் இருக்கத் தெண்டிக்க வேண்டும். வழுக்கத் தொடங்கினால் இடையில் நிற்க முடியாது. அடியில் போய்த்தான் நிற்க வேண்டி நேரிடும்.

- வேதத்தைத் தமிழ் செய்தவர் திருவள்ளுவர். திருக்குறளின் மறுபெயர் தமிழ்மறை. வேதம் கதிபற்றிக் கூறுவது; திருக்குறள் தமிழர்களின் கண்போன்றது. கட்டாயம் அனைவரும் படித்துச் சிந்திக்கவேண்டிய நூல் இது. ஒவ்வொரு தமிழன் வீட்டிலும் திருக்குறள் இருக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரத ரிஷிகளின் காலக் கணிப்பின்படி, இப்பொழுது நடப்பது கலியுகம். கலியுகத்தில் நீதிக்கு இடமில்லை என்கிறது யுக தருமம். நீதி இன்று உலகில் செத்துவிட்டது. எல்லோரும் அநீதி, பொய், சுயநல நோக்கம் இவற்றையே கைக்கொண்டு நடக்கிறார்கள்.

## 32. பற்றுக பற்றற்றான் பற்றினை

- யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
  அதனின் அதனின் இலன். - திருக்குறள்

- யான்எனது என்னும் செருக்கறுப்பான்
  வானோர்க்கு
  உயர்ந்த உலகம் புகும். - திருக்குறள்

- பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
  பற்றுக பற்று விடற்கு. - திருக்குறள்

- நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
  உண்மை அறிவே மிகும். - திருக்குறள்

- மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு
  அருந்தியது
  அற்றது போற்றி உணின். - திருக்குறள்

- **ஔவை மூதாட்டியின் பெறுமதிவாய்ந்த நாலுகோடி தேட்டங்கள்:**

  1. மதியாதார் முற்றம் மதித்தொருக்காற் சென்று மிதியாமை கோடிபெறும்.

  2. உண்ணீர் உண்ணீரென்று உபசரியான்
     தன்மனையில்
     உண்ணாமை கோடிபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கோடிகொடுத்தும் குடிப்பிறந்தார் தம்முடனே கூடுவதே கோடிபெறும்.

4. கோடானுகோடி கொடுப்பினும் தன்னுடைநாக் கோடாமை கோடிபெறும்.

- தானே தனக்குப் பகைவனும் நட்டானும்.
  - திருமந்திரம்

- ஏமாற்றுதல் என்பது மனிதன் கற்றுக்கொண்ட மிகக் கீழ்த்தரமான வித்தையாகும்.

- எல்லா மதங்களையும் ஒரே ஈசுவரனது ஆக்ஞை என உணரும் உண்மை அறிவாளர்தாம் மெய் உணர்ந்த ஞானிகளெனப்படுவார்கள்.
  - ஆன்ம விசாரம்

- நாம் பிறரோடு சம்பாஷிக்கும் அவசியமற்ற பொழுது போக்குப் பேச்செல்லாம் களிப்பே.
  - ஆன்ம விசாரம்

- புண்ணியங்கள் எல்லாவற்றினும் விஷேட புண்ணியமாவது பிறர்செய்த தீங்கைப் பொறுத்தல். - ஆன்ம விசாரம்

- பிறரைஅவர் தீக்குணம் பற்றி நாம் இகழும்போது அங்ஙனம் இகழ்தலாகிய அது தானே முதலில் நம்மில் தீக்குணமாகிறது. - ஆன்ம விசாரம்

- வாழ்வும் சாவும் எங்கள் கையில் இல்லை என்பதை உணர்வதே ஒருவன் படிக்கவேண்டிய முதலாவது முக்கிய பாடமாகும்.
  - ஆன்மவிசாரம்

- அகண்டம் என்ன அருமறை ஆகமம்
  புகன்ற நின்தன்மை போதத்து அடங்குமோ?
  செகங்கள் எங்கும் திரிந்து நல்மோனத்தை
  உகந்தபேர் உனை ஒன்றுவர் ஐயனே!
  - தாயுமானவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வான்கெடுத்துத் தேடும் மதிகேடர் போலஎமை
நான் கெடுத்துத் தேடாமல்
நன்கு அறிவதெந்நாளோ?

2. கைவிளக்கின் பின்னேபோய்க்
காண்பவர்போல் மெய்ஞ்ஞான
மெய்விளக்கின் பின்னேபோய்
மெய்காண்பது எந்நாளோ?

3. எள்ளுக்குள் எண்ணெய்போல்
எங்கும் வியாபகமாய்
உள்ள ஒன்றை உள்ளபடி
ஒருநாள் எந்நாளோ?

4. தர்க்கம்விட்டுப் பாழ்ஆம் சமயக்
குதர்க்கம் விட்டு
நிற்கும்அவர் கண்டவழி
நேர்பெறுவ தெந்நாளோ?

5. கல்கண்டால் ஓடுகின்ற காக்கைபோல்
பொய்மாயச்
சொல்கண்டால் ஓடுமன்பர் தோய்வறிவ
தெந்நாளோ?

6. பண்ணின் இசைபோலப் பரமன்பால்
நின்றதிறன்
எண்ணி யருளாகி இருக்குநாள்
எந்நாளோ? - தாயுமானவர்

எவ்வளவுக்கு இடம்பொருள், ஏவல் மிகுதியோ அவ்வளவும் ஈசுவரனை மறத்தற்கு இடம் ஆகின்றது. - ஆன்ம விசாரம்

துன்பங்களிலே பரீட்சைப்படாதவன் கல்லாத பிள்ளைக்குச் சமமாவான். அவற்றில் பரீட்சைப் பட்டவன்தான் கற்றுத் தேறினவனுக்குச் சமம். கல்வியிலும் பெரியது துன்ப அனுபவம்.
- ஆன்ம விசாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிறசீவர்களை எல்லா விஷயங்களிலும் தானாகக் கருதி நடப்பதுதான் அருள். தன்னைப்போலவே பிற ஆன்மாக்களும் என்றுணர்ந்து அவ்வாறு ஒழுகுவது அருள். - ஆன்ம விசாரம்

- தூய அறிவான சுகரூப சோதி தன்பால்
  தீயில் இரும்பு என்னத் திகழுநாள் எந்நாளோ?
  - தாயுமானவர்

## 33. ஆன்ம விசாரம் - பகுதி 1

> **"ஆன்ம விசாரம் 1, 2" - ஏ.சுப்பிரமணிய ஐயர் (1857-1912). இவர் கொழும்புத்துறையில் வாழ்ந்தவர். தமிழ், சமஸ்கிருதம், நன்கு கற்றவர். ஆங்கிலமும் கொஞ்சம் தெரிந்தவர். கடைசி காலத்தில் மௌனம் கைவரப்பெற்ற சிந்தனையாளர்.**

- பிறருடைய சரீர வருத்தம் கண்டு வருவதன்று இரக்கம். பிறருடைய மமதை, கோபம், பொறாமை முதலிய துர்க்குணங்களாகிய அஞ்ஞானப் பிணியைக் கண்டு அவை பொருட்டாக இரங்குவதே இரக்கம்.

- சுகத்தைப் பெறுவதற்கும் துன்பமே படவேண்டுவதால் அப்படித் துன்பம் அனுபவித்துப் பெறும் சுகத்தால் பயன் யாது?

- தன்னால் இயலுமாயிருக்கவும் பிறருக்குத் தீங்கு செய்யாதவன்தான் நல்லவன். தன்னால் இயலாதிருக்கவும் பிறருக்குத் துன்பம் செய்ய மனமுடையவன் மிகப் பொல்லாதவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மெய்யுணர்வு எவ்வளவு பெற்றிருக்கிறானோ அவனே செல்வன்; அ∴தில்லாதவன்தான் வறியவன்.

- அவரவர் அளவு நிலை தெரிந்து அவரவருக்கும் இயைய நடப்பவன்தான் அறிவாளி.

- பாவங்களெல்லாவற்றுள்ளும் பெரியது பிறரை அவமானஞ்செய்வதும் அதற்கிடமானவற்றைச் செய்வதுமாம்.

- ஒருவனுக்குக் கல்வியானது பிற ஆன்மாக்களை எல்லாம் தானாக உணரப் படிப்பதே.

- எல்லோரும் சிற்சில குணமும் சிற்சில குற்றமும் உடையவராகவே இருக்கின்றனர். இதை உணராது, பிறர் குற்றங்களை எடுத்துக் கூறுபவனே அறிவிலிகளுள் அறிவிலி.

- சர்க்கரை இனிப்பதும் வேம்பு கசப்பதும் அதனதன் இயல்பு. அதுபோலவே மானுடருள் சிலர் நல்லவராயிருப்பதும் சிலர் தீயவராய் இருப்பதும் மலபாக வேறுபாட்டினால் என்பதை உணர்ந்தவனே அறிவாளி. எனவே, பிறரில் குற்றம் காண்பவன் அஞ்ஞானத்தால் பீடிக்கப்பட்ட அறிவிலியே.

- தன்குற்றங்களை அறிந்தவனே அறிவாளி. புலன்களைத் திருப்தி செய்வதில் உண்மையான சுகமென்பது அற்பமுமே கிடையாது.

- நமக்குள்ள விருப்பு வெறுப்பென்னும் வேறு பாட்டினால்தான் நல்லது தீயது என்னும் விகற்பம் தோன்றுகின்றது. எனவே, விருப்பு வெறுப்பென்னும் வேறுபாடுள்ள குற்றம் நம்மதே.

- ஒவ்வொருவனும் தமது அறிவின் அளவுக்குச் சிறந்தது என்று காணப்பட்டதையே நல்லதென்று நினைக்கிறான். அஞ்ஞானத்தின் முதிர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுமை. அகந்தையுடையோர் தம்மைப் பெரியவராக எண்ணிக்கொள்கின்றனர். அகந்தை அஞ்ஞானத்தின் முதிர்ச்சியாகலின் அதுதான் சிறுமை. எனவே பெருமை என்பது அகங்கார இழப்பே.

- கேட்டவர்களுக்கு ஒன்றைத் தெரிவிப்பது அவர்கள் நிமித்தமாகலின் அது தக்கது. தானாய் ஒருவனுக்கு புத்தி போதிக்கவும் திருத்தவும் என்று முயல்வதெல்லாம் தன்னயத்துக்காகவே செய்யப்படுவன. இது தர்மப் பிசகு.

- யாருக்காவது ஒரு போதனையை அவர் அது பெற்று ஒழுகத்தக்க பக்குவம் கண்டே போதித்தல் வேண்டும்.

- இவ்வுலகில் யார்தாம் முற்றும் அறிந்தவர்? யார்தாம் யாதொன்றாயினும் அறியாதவர்? ஆகவே யார் பெரியர்! யார் சிறியர்!

- பிறரை அவமதிப்பவர்களெல்லாரும் தத்தம் அஞ்ஞானமாகிய விசரினாலே இப்படிச் செய்கிறார்களென்பதை நன்கு உணர்ந்து அப்படிச் செய்யாதிருப்பவனே அறிவாளி.

- ஒரு குற்றத்தைச் செய்கிறவனும் குற்றவாளி தான். அவனை நிந்திக்கிறவனும் குற்றவாளியே.

- மெய்யுணர்வு இல்லாதவனுக்கு பிறர் குற்றமே தெரியும். மெய்யுணர்வாளனுக்கு தன் குற்றமே தெரியும்.

- பிணிகளுக்கு மருந்துபோல, அஞ்ஞானத்துக்கு மருந்து துன்பம் என்பதை உண்மை மெய்யுணர்வுள்ளவன்தான் உணர முடியும். துன்ப நுகர்ச்சியால்தான் அஞ்ஞானம் அகல்கிறது என்பதை அவன்தான் நன்கு உணர்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வறியவன் உணவு, காமம் முதலியன புசிப்பு இல்லாமல் வருந்துகிறான். செல்வன் அவற்றை அளவுக்கு மிஞ்சிப் புசித்து வருந்துகிறான். ஆகவே துன்பத்துக்குக் காரணம் வறுமையா?

## 34. ஆன்ம விசாரம் - பகுதி 2

**"ஆன்ம விசாரம் 1, 2" - ஏ.சுப்பிரமணிய ஐயர் (1857-1912) அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பிரபல கல்விமான் களாகிய ந.ச.பொன்னம்பலபிள்ளை, சபாபதி நாவலர், குமாரசாமிப் புலவர், உவில்லியம் நெவின்ஸ், வைமன் கதிரவேற்பிள்ளை, பிறிற்றோ மயில்வாகனம் முதலியோருடன் கலந்துரையாடியவர். சிவகுருநாத பீட ஸ்தாபகரது குருவான சின்னத்தம்பி என்பவர் இவரிடம் சென்று கலந்துரையாடினார். இவர் இறந்தபின் கண்டெடுத்த இவர் எழுதிவைத்த 3ம், 12ம், 13ம் இலக்கக் குறிப்புகள் (ஏனையவையும் குறள் வெண்பாக்களடங்கிய குறிப்பும் சிதைந்துவிட்டன.) 1924ஆம் ஆண்டு சிவகுருநாத பீடத்தாரால் ஆன்ம விசாரம் என்ற நூலாக அச்சிடப்பட்டது.**

- எவர் எதை எளிதில் பெறுகிறார்களோ அவர்கள் அதில் செருக்குடையவர்கள் ஆவார்கள்.
- அறிவைப் போதனையாகப் பெறுவதிலும் பார்க்க அனுபவமாகப் பெறுவதே உறுதியானது. ஆகவே போதனையாக உணர்த்தக்கூடிய ஆசானிலும் பார்க்க அனுபவமாக உணர்த்தற்கு உரிய பகைவர், மூடர், சிறுவர், துஷ்டர், சோம்பேறிகள் முதலானவர்களே விசேடமாக நன்றி பாராட்டுதற்கு உரியவர்கள்.
- மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றாலும் தன்கண் நிகழ்வனவற்றைப் படிப்பதே படிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அகங்காரமாகிய நோய்க்குச் சத்துருக்களாகிய துன்பஞ்செய்பவர்களே வைத்தியர்கள். துன்பமாகிய மருந்து இல்லாவிடில் அகங்கார நோய் மற்று ஒருவிதமாகவும் மாறாது.
- யாதொன்றுக்கும் அஞ்சித் துன்பமென்று பின்வாங்காதவனே ஞானி.
- எந்த நிலையிலும் மற்றவனைத் தான் போலக் காண்பதுதான் அருள்.
- அஞ்ஞானம் திரிகரணங்களாலும் கக்கியே அழியும்.
- அறிவாளி தன்னிற் தாழ்ந்தவர்களது அறிவின் அளவு உணர்ந்து அதற்குத் தக்க விதமாக நடக்கவேண்டும்.
- ஒருகாலமும் பிறருக்கு ஒருவிதமாகவேனும் வெறுப்புண்டாகாமல் நடந்துகொள்.
- 'நீ அகங்காரி' என்று பிறரைக் கண்டிக்கிறவரும் அகங்காரியே.
- உலகத்திலே யார் பெரியவர், யார் சிறியவர்? யார் நல்லவர், யார் பொல்லாதவர்? யார் தேவைப்பட்டவர், யார் தேவைப்படாதவர்? யாது நிலை, யாது நிலையற்றது? யார் வேண்டுபவர்? யார் வேண்டப்படாதவர்? எதை நம்பலாம், எதை நம்பக்கூடாது? ஈஸ்வரா, எல்லாம் உன் மாயை! ஒருகால் பெரியவன் பின்பு சிறியவனாகிறான். ஒருகால் உறவோன் பின்பு பகைவன். ஒருகால் பகைவன், பின்பு நண்பன். மற்றவைகளும் எல்லாம் இவ்வண்ணமே.
- ஒவ்வொருவருக்கும் தத்தமக்குப் பகைவன் தத்தம் அஞ்ஞானமேயன்றிப் பிற ஜீவர்களல்லர்.
- நிகழ்வதெல்லாம் சரியென எப்பொழுது ஒருவனது மனம் கண்டுகொள்கிறதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுதுதான் ஒருவன் மெய்யறிவு உதித்தவனாகிறான்.

- ஈஸ்வரன் விட்ட சுகதுக்க நிலையிலே திருப்தியடைபவனே பாக்கியசாலி. திருப்தியடையாது குறைகூறிக் கொண்டிருப்பவன் மூடன்.

- பேச்செல்லாம் தன்னை மதித்தலும் பிறனைத் தாழ்த்தலுமாய் இருக்கின்றன.

- ஒருவன் தன்னைச் சரிப்படுத்துவது முழுதும் நடுவு நிலைமையினாலே அமைய வேண்டும். அருள் என்பதும் அதுவே.

- அருள், அன்பு இரண்டினுள் அன்பு பொய்யென்பது மெய்யுணர்ந்தார்களுக்கே நன்கு புலப்படும். பிற ஜீவர்களையெல்லாம் தானாகப் பாவிப்பதாகிய அருள் ஒன்றே மெய். அது ஒன்றே நமக்குத் தெய்வ குணம்.

- மெய்யுணர்வுடைய ஞானிகளுக்கு லௌகிகர்கள் எல்லாம் குழந்தைகளாகவே புலப்படுகின்றனர். குழந்தைகளின் செயல்களுக்காக அவர்களை நாம் வெறுக்காதது போலவே மெய்யுணர்வாளர்கள் லௌகிகர்களாகிய புத்தியீனர்களை வெறுக்க மாட்டார்கள்.

- மெய்யுணர்வு உண்டாகாத எல்லோருமே புத்தியீனர்களே.

- பிறரால் தான் இம்சைப்பட்டறியாதவன், தான் பிறருக்கு அதிக இம்சை விளைவிப்பவனாய் இருக்கிறான்.

- தனக்கு பிறர்செய்யும் துன்பத்தால் வருந்துபவன், பிறருக்குத் துன்பம் செய்யக்கூடாதென்பதை உணர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 35. பொதுநோக்குடைய சைவசித்தாந்தம்

- கற்பனைதான் ஒரு கவிதைக்கு அழகு சேர்க்கிறது. ஆனால், யதார்த்தம்தான் கவிதைக்கு அர்த்தம் சேர்க்கிறது.

- அர்த்தத்தின் வரையறைக்கு உட்பட்டதுதான் வார்த்தை. அர்த்தத்தின் வரையறைக்கு உட்படாதது வாழ்க்கை.

- ஒருவன் நிற்கும் நிலைக்குத் தக்கபடிதான் அவனுடைய சுவைகள், எண்ணம், பேச்சு, செயல்கள் எல்லாம் அமைந்திருக்கும். நிலைக்குத் தக்கபடிதான் அவனது அறிவும் தொழிற்படும்.

- இந்த உடல் சடப்பொருள். சடத்தை நோவோ, இன்பமோ துன்பமோ தீண்டா. ஆன்மா உருவற்றது. அதைச் சடப்பொருள்கள் தீண்ட முடியாது. ஆகவே அதற்கு மருந்து தேவையில்லை. இந்த உடலையே ஆன்மாவென மயங்கிச் செயல்படும் மனித உயிருக்குத்தான் மருந்து தேவை. மருத்துவ சாத்திரமே அதனை முன்னிட்டுத்தான் வரையப்பட்டது.

  - சரக சம்ஹிதை

- உலகத்திலுள்ள மதங்களில் உயர்ந்த உண்மையான மதம் சைவம். அது சிறப்பாகத் தென்னிந்தியாவிலும் இலங்கையின் வட பாகத்திலும் பரவியிருக்கிறது. தத்துவ சாத்திரங் களிலும் சைவ சித்தாந்தமே ஏனையவற்றைக் காட்டிலும் பொது நோக்குடையது. சைவ சித்தாந்தத்தின் தெளிதேன் திருவாசகம்.

  - ஜீ.யூ.போப் (G.U.Pope திருவாசகத்தையும் திருக்குறளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஆங்கிலேயர், கிறிஸ்தவ மதபோதகர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப்
  பிள்ளையைப்போல் ஆரும் துறக்கை அரிதரிது.
  - தாயுமானவர்.

- ஐயா அருணகிரி அப்பா உன்னைப்போல்
  மெய்யாக ஒருசொல் விளம்பினர் யார்?
  - தாயுமானவர்

- சக்கரவர்த்தி தவராஜ யோகியெனும் மிக்கதிரு
  மூலனருள் மேவுநாள் எந்நாளோ. - தாயுமானவர்

- பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித
  மெய்கண்ட நாதனருள் மேவுநாள் எந்நாளோ!
  - தாயுமானவர்

- கண்டது பொய்யென்று அகண்டாகார
  சிவமெய்யெனவே
  விண்ட சிவவாக்கியர்தாள் மேவுநாள் எந்நாளோ
  - தாயுமானவர்

- சும்மா இரு சொல்லற என்றலுமே
  அம்மா பொருளொன்றும் அறிந்திலனே.
  - அருணகிரிநாதர்

- மனைமக்கள் சுற்ற மெனுமாயா
  வலையைக் கடக்க அறியாதே
  வினையிற் செருக்கி யடிநாயேன்
  விழலுக் கிறைத்து விடலாமோ
  சுனையைக் கலக்கி விளையாடு
  சொருபக் குறத்தி மணவாளா
  தினநற் சரித்திர முளதேவர்
  சிறைவெட்டி விட்ட பெருமாளே
  - திருப்புகழ்

- எவரெவர்கள் எப்படிக்கண்டு எந்தப்படி
  நினைத்தார்
  அவரவருக்கு அப்படி நின்றாயென்ப
  தெக்காலம்.
  - பத்திரகிரியார் -மெய்ஞானப் புலம்பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. அறிவும் அறிதத்துவமும் அபரிமித
வித்தைகளும்
அறியென இப்பொழுதில் வாழ்வித்த
வேதியன்;
2. இதமகிதம் விட்டுருகி இரவுபகலற்ற இடம்
எனது அற இருக்கைபுரி யோகப் புராதனன்;
3. எனது மனசிற் பரமசுக மவுன கட்கமதை
யமன் முடி துணிக்க விதியா வைத்த பூபதி.
- திருவகுப்பு அருணகிரிநாதர்

1. ஆமை வரும் ஆட்கண்டு ஐந்தடக்கம்
செய்தாற்போல்
ஊமையுருக் கொண்டு ஒடுங்குவது
மெக்காலம்.
2. கஞ்சா அபினியுடன் கள்ளுண்டு வாடாமற்
பஞ்சாமிர்தத்தைப் பருகுவது மெக்காலம்
3. சத்தம் பிறந்தவிடம் தண்மயமாய் நின்றவிடம்
சித்தம் பிறந்தவிடம் தேர்ந்தறிவ தெக்காலம்.
4. அத்துவிதம் போலுமென்றன் ஆத்துமத்தின்
உள்ளிருந்து
முத்திதர நின்ற முறையறிவ தெக்காலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 36. பூரண மாலை - பட்டினத்தார் பாடலிலிருந்து தொகுத்தவை

- ஊனுக்குள் நீ நின்று உலாவினதைக் காணாமல்
  நானென்றிருந்து நலமழிந்தேன் பூரணமே.

- மெய்வாழ்வை நம்பி விரும்பி மிக வாழாமல்
  பொய்வாழ்வை நம்பிப் புலம்பினேன் பூரணமே.

- வாசிதனைப் பார்த்து மகிழ்ந்துனைத்தான் போற்றாமல்
  காசிவரை போய்த்திரிந்து காலலுத்தேன் பூரணமே.

- உடலுக்குள் நீநின்று உலாவினதைக் காணாமல்
  கடல்மலைதோ றும்திரிந்து காலலுத்தேன் பூரணமே.

- உற்றார் அழுதலுத்தார் உறன்முறையார் சுட்டலுத்தார்
  பெற்றலுத்தார் தாயார் பிறந்தலுத்தேன் பூரணமே.

- என்னையறியாம லெனக்குள்ளே நீயிருக்க
  உன்னையறியாமல் உடலழிந்தேன் பூரணமே.

- கருவாய் உருவாய்க் கலந்துலகெலாம் நீயாய்
  அருவாகி நின்ற தறிகிலேன் பூரணமே.

- அண்டபிண்ட மெல்லா அணுவுக் கணுவாய்நீ
  கொண்டவடிவின் குறிப்பறியேன் பூரணமே.

- என்னைத் திருக்கூத்தால் இப்படிநீ யாட்டுவித்தாய்
  உன்னை அறியா துடலழிந்தேன் பூரணமே.

- மூலவித்தாய் நின்று முளைத்துடல் தோறுமிருந்து
  காலனென அழிக்குங் கணக்கறியேன் பூரணமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உள்ளும் புறமுமா யுடலுக்குள் நீயிருந்த
தெள்ளளவும் நானறியா திருந்தேனே பூரணமே.

- தாயாகித் தந்தையாய்த் தமர் கிளைஞர்
சுற்றமெல்லாம்
நீயாகிநின்ற நிலையறியேன் பூரணமே.

- ஆணாகிப் பெண்ணாய் அலியாகி வேற்றுருவாய்
மாணாகிநின்ற நிலையறியேன் பூரணமே.

- பொய்யாய்ப் புவியாய்ப் புகழ் வாரிதியாகி
மெய்யாகிநின்ற வியனறியேன் பூரணமே.

- பூவாய் மணமாகிப் பொன்னாகி மாற்றாகி
நாவாய்ச் சொல்லான நயமறியேன் பூரணமே.

- முதலாய் நடுவாய் முப்பொருளாய் மூன்றுலகாய்
இதமாகி நின்ற இயல்பறியேன் பூரணமே.

- வித்தாய் மரமாய் விளைந்தகனி காய்பூவாய்ச்
சித்தாகி நின்ற திறமறியேன் பூரணமே.

- மனமாய்க் கனவாகி மாய்கையாய் உள்ளிருந்து
நினைவாகி நின்ற நிலையறியேன் பூரணமே.

- சத்தி சிவமிரண்டாய்த் தான்முடிவி லொன்றாகிச்
சித்திரமாய் நின்ற திறமறியேன் பூரணமே.

- பொறியாய்ப் புலனாகிப் பூதபே தப்பிரிவாய்
அறிவாகிநின்ற அளவறியேன் பூரணமே.

- ஒன்றாய் உயிராய் உடல்தோறும் நீயிருந்தும்
என்று மறியார்கள் ஏழைகள்தாம் பூரணமே.

- சட்சமய பேதங்கள் தான்வகுத்துப் பின்னுமொரு
உட்சமய முண்டென்று உரைத்தனையே
பூரணமே.

- என்னதான் கற்றாலென் எப்பொருளும்
பெற்றாலென்
உன்னை யறியாதார் உய்வரோ பூரணமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வானென்பார் அண்டமென்பார் வாய்ஞானமே பேசித்
  தானென்பார் வீணர் தனையறியார் பூரணமே.

- நீர்மேற் குமிழிபோல் நிலையற்ற காயமிதைத்
  தாரகமென் றெண்ணிநான் தட்டழிந்தேன் பூரணமே.

- நெஞ்சமுருகி நினைந்து னைத்தான் போற்றிநெடு
  வஞ்சகத்தைப் போக்க வகையறியேன் பூரணமே.

- எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் நிறைந்திருந்த
  துள்ள மறியாது உருகினேன் பூரணமே.

- மந்திரமாய் சாத்திரமாய் மறைநான்காய் நீயிருந்த
  தந்திரத்தை நானறியத் தகுமோதான் பூரணமே.

- சாந்தமென்றுங் கோபமென்றுஞ் சாதிபே
  தங்களென்றும் பாந்தமென்றும் புத்தியென்றும்
  படைத்தனையே பூரணமே.

- பாச முடலாய்ப் பசுவதுவுந் தானுயிராய்
  நேசமுடன் நீபொருளாய் நின்றனையே பூரணமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 87. மெய்ஞ்ஞான நாட்டம்

**1-12 வரையுள்ளவை அளவெட்டியில் உதித்த மகாஞானி பொ.கைலாசபதியின் (1902-1961) சிந்தனைகள்**

1. குடிசையில் கூழைக் குடித்து வாழலாம்; பின்பு குடிசை மாளிகையாக மாறி, அறுசுவை உண்டியுடன் வாழலாம். ஆனால் ஆளின் நிலை மாறக்கூடாது.

2. பரிபூரண அன்பு கட்டுப்படுத்தாது, கட்டளை செய்யாது.

3. பந்தப்படுத்தும் கொடை கைக்கூலியிலும் கொடியது.

4. தனித்து நிற்க மனிதர்கள் அஞ்சுகிறார்கள். அதனாலேதான் பாத்திரம் இல்லாதவர்களையும் பற்றுக் கோடுகளெனப் பற்றிக் கொள்கிறார்கள்.

5. கடவுள் நீதிமயமானவர்; காணப்படும் உலகம் புறத் தோற்றம். இவ்வுலகம் இப்படி இருப்பதே நீதி.

6. அவித்துவான் இருளில் கிடக்கிறான். வித்துவான் அதிலும் மோசமான இருளில் வீழ்கிறான்.

7. புலால், கள் ஆகியவை அறிவு விருத்தியைக் கெடுக்குமாகையால் விலக்கப்பட வேண்டியவை.

8. ஞானம் வேறு; நூலறிவு வேறு. ஞானம் வேறு; வாக்குவன்மை வேறு.

9. உனது எண்ணங்கள் செயல்கள் ஒவ்வொன்றிலும் உனது சுவை என்ன? தர்மம் என்ன என்பதைச் சிந்தித்துப் பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 10. ஒருவனுடைய மனத்தூய்மைக்குத் தக்கின படி தான் உயர்ந்த காரியங்கள் வெளிக்கும்.

- 11. அழுக்கை வைத்துக்கொண்டு ஞானம் தேடியலைவது வீண்.

- 12. நீரைக் கண்டவன்தான் கானல் நீரைக் கழிக்கலாம்.

- அமைதியும் உள்ளக் குழப்பமற்றதுமான தனியிடம் வேண்டுமானால் ஒருவன் தன்னுள்ளத்திலே அதைக் காணவேண்டும். அதைப் போன்ற ஏகாந்தம் வெளியே எங்கும் கிடையாது. தன் உள்ளமாகிய தனி ஆச்சிரமத்தில் அவ்வப்போது மௌனமாக இருந்து மனவலிமையை அடைவாயாக.
 - மார்க்கஸ் அவுரேலியஸ் றோமன் சக்கரவர்த்தி

- திரிகாலமும் ஒன்றுதான் என்பது மகாஞானிகள் கண்ட முடிவான உண்மை.

- நினைத்த தெத்தனையிற் தவறாமல்
  நிலைத்த புத்திதனைப் பிரியாமல்
  கனத்த தத்துவமுற் றழியாமல்
  கதித்த நித்தியசித் தருள்வாயே
  மனித்தர் பத்தர் தமக் கெளியோனே
  மதித்த முத்தமிழிற் பெரியோனே
  செனித்த புத்திரரிற் சிறியோனே
  திருத்தணிப் பதியிற் பெருமாளே.
  - அருணகிரிநாதர் திருப்புகழ்

- ஒரு அறிஞன் செய்யும் குற்றம் உலகுக்குத் தெரிவதில்லை; அவனுக்குத் தெரிகிறது. ஒரு மூடன் செய்யும் குற்றம் அவனுக்குத் தெரிவதில்லை; உலகுக்குத் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கருவெளிக்குட் புறனாகிக் கரணமெலாங்
  கடந்துநின்ற
  பெருவெளிக்கு நெடுங்காலம் பித்தாகித்
  திரிகின்றோர்
  குருவெளிக்கே நின்றுழலக் கோதறிநீ
  கலந்ததனி
  உருவெளிக்கே மறைபுகழும் உயர்வாத
  வூர்மணியே.
  (இராமலிங்க சுவாமிகள் மணிவாசகரைப் பற்றிப் பாடியது.)

- பெண்சுமந்த பாகப் பெருமான் ஒருமாமேல்
  எண்சுமந்த சேவகன்போல் எய்தியதும்
  வைகைநதி
  மண்சுமந்து நின்றதும் ஓர்மாறன் பிரம்படியால்
  புண்சுமந்து கொண்டதும்நின் பொருட்டன்றோ
  புண்ணியனே.
  - (இராமலிங்க சுவாமிகள் மணிவாசகரைப் பற்றிப் பாடியது.)

- வாட்டமில்லா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
  கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச்
  சாதிகளும்
  வேட்டமுறும் பொல்லா விலங்குகளும்
  மெய்ஞ்ஞான
  நாட்டமுறும் என்னில்இங்கு நானடைதல்
  வியப்பன்றே.
  (இராமலிங்க சுவாமிகள் மணிவாசகரைப் பற்றிப் பாடியது.)

- திறமை அமைதியில் வளர்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 38. ஆத்ம சிந்தனை

கி.பி.161-180 வரை ரோம சாம்ராச்சியத்தை அரசாண்ட மார்க்கஸ் அவுரேலியஸ் சக்கரவர்த்தி தனக்கென எழுதிவைத்த சிந்தனைக் குறிப்புகள் Meditation என்ற நூல் வடிவில் ஆங்கிலத்தில் வெளிவந்தது. அதன் சில பகுதிகளைப் பேரறிஞர் ராஜாஜி அவர்கள் ‘ஆத்ம சிந்தனை’ என்னும் நூல் வடிவில் அழகாக மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார். மிகவும் ஆழமான சிந்தனைகள் இவை. இந்நூலில் இருந்து தொகுக்கப்பட்ட சில சிந்தனைகள்.

- கபடம், பொய், மோசம் இவை கலந்த பேச்சும் செயலும் துரோகமாகும். பயனில்லாத செயலும் சிந்தனையும், குறிக்கோளற்ற வாழ்க்கையும் அவ்வாறே துரோகமாகும்.
- தீய எண்ணங்களை அறவே ஒழித்தல் வேண்டும். எந்தநேரத்திலும் உன் உள்ளத்தில் உள்ளதைப் பலர் அறிய வெளிப்படுத்தினாலும் அதில் வெட்கப்படக் கூடிய எதுவும் இல்லாத அளவுக்கு உனது மனதைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.
- மற்றவர்களின் நலத்தை நாடுவதே மனிதனுடைய இயல்பான தருமம் என்பதை நீ உணர்ந்துகொள்.
- மனமொவ்வாத செயலைச் செய்யாதே. பேச்சுத் திறமையினால் உண்மையை மறைக்க வேண்டாம்; வீண் பேச்சுப் பேசவேண்டாம்.
- பிறருடைய ஆதரவை எதிர்பாராமல் சிரித்த முகத்துடன் சுதந்திரமாய் வாழ்வாய். சாட்சியாவது, ஆணைச்சொல்லாவது வேண்டாத சத்தியவானாய் இரு. பிறருடைய ஆறுதலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாமல் உள்ளத்தில் சாந்தத்தை அமைத்துக் கொள்வாய். பிறர்மேல் சாராது நிற்பதே உண்மைச் சுதந்திரம்.

- நீதி, சத்தியம், தெளிவான புத்தி, தைரியம் இவைகளைவிட வேறு எதுவும் உண்மையான சுகத்தைத் தரமாட்டா என்பதை நீ உணர்ந்துகொள்.

- உன் அறிவை உபயோகித்து மதிக்கத் தகாததை உறுதியுடன் விலக்கிவிடு. அப்படி விலக்குவதிலும் கர்வமில்லாது அடக்கத்துடன் நடந்துகொள்.

- சத்தியத்தைப் புறக்கணித்து அடையக்கூடிய எந்தப் பொருளும் சந்தோஷம் தராது. அதற்காக ஆசைப்படாதே. பிறர் அறியாமல் மறைந்து அனுபவிக்கும் எந்தச் சுகமும் உனக்கு நன்மை தராது. அதை விரும்பாதே.

- எதையும் ஆராய்ந்து பார்த்து ஒரு முடிவுக்கு வரும் விவேகம் படைத்திருக்கிறாய். இந்த விவேகத்தைப் பயபக்தியுடன் உபயோகிக்கக் கடவாய். இதைத் துஷ்பிரயோகம் செய்யாதே. இதுவே மனிதனைக் காக்கும் பெருந்துணை.

- மனிதன் எண்ணங்களே அவன் வாழ்வு.

- நிலையான அபிப்பிராயம் கொள்ளாத அறிவில்லாதவர்கள் உன்னைப்பற்றிப் பேசுவதே புகழ் எனப்படுகிறது. அதனால் நீ அடைவது ஒன்றுமில்லை.

- மனநிம்மதியைக் கெடுக்கும் எந்தப் பொருளையும் விலக்கிக் கொள்வது உண்மையில் எவ்வளவு எளிது. நமக்குள்ள சக்தியை நாம் அறிவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மனதில் சாந்தியடைய மெய்யறிவை நாடு. மெய்யறிவைவிட வேறெந்த சாதனமும் மனிதனுக்குச் சுகம் தரமுடியாது.
- ஆத்மாவைச் சாந்தப்படுத்தக்கூடியது உள்ளத்துக்கு வெளியே வேறு எதுவுமில்லை.
- மனிதனுடைய எண்ணங்களும் செயல்களும் அவரவர்களுடைய அறிவுக்கு ஏற்றபடிதான் இருக்கும்.
- நெறி தவறாதவனுக்கு மனதில் எப்பொழுதும் மகிழ்ச்சி இருக்கும்.
- நீ கவனிக்கவேண்டிய காலம் நிகழ்காலமே.
- உள்ளத்தைப் பரிசுத்தமாக்கிப் பயன் படுத்துவதிலேதான் சகல நற்பயன்களும் இருக்கின்றன.
- உலகத்தில் எதுவும் நிலையில்லை. நடந்தது எல்லாம் கதையேயாகும். பிறகு முற்றும் மறக்கப்பட்டு மறையும். புகழும் பேரும்தான் என்ன? வெறும் பேச்சு. நடுவுநிலைமை, ஒப்புரவு, வாய்மை, பொறை இவையே வேண்டப்படுவன.
- அமைதியும் உலகக் குழப்பமற்றதுமான தனியிடம் வேண்டுமானால் ஒருவன் தன் உள்ளத்திலே அதைக் காணவேண்டும். அதைப் போன்ற ஏகாந்தம் வெளியே எங்கும் கிடைக்காது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 39. தாயினும் நல்ல தயாளு

- தாயினும் நல்ல தயாளுவே நின்னை உன்னித்
தீயின்மெழு கொத்துருகும் சிந்தைவரக்
காண்பேனோ.

- பகையை வெல்லும் சக்தி பண்புக்கும்
அன்புக்கும் தான் உண்டு.

- பன்னிரு திருமுறைகள் பதினான்கு சாத்திரங்கள்
என்னரிய திருக்குறள்நூல் உயர்வேத
சிவாகமங்கள் தன்னிகரில்
மிருதிகளும் தக்கபுரா ணாதிகளும்
என்னிரண்டு கண்ணனைய இதிகாசம் இவை
நூல்கள்.

- இருள்தரும் உலகத்தே இங்கிலீசு உருவாகி
மருள்தரு கலிகாலம் மயல்செயும் அதனாலே
அருமறை நெறிபோக அறமது புறமாக
குருடொரு குருடுக்கு குழிவழி செயுமன்றே.

**தாயுமானவரின் கண்ணிகளிலிருந்து தொகுத்தவை**

- சிந்திக்கும் தோறும் தெவிட்டா அமுதே என்
புந்திக்குள் நீதான் பொருந்திடவும் காண்பேனோ.

- கேவலத்தில் நான்கிடந்து கீழ்ப்படாது
இன்பஅருள் காவலன்பால்
ஒன்றிக் கலந்திடவும் காண்பேனோ.

- பொய்யுலகும் பொய்யுறவும் பொய்யுடலும்
பொய்யெனவே
மெய்யநினை மெய்யெனவே மெய்யுடனே
காண்பேனோ.

- காட்டுகின்ற முக்கண் கரும்பே கனியே என்
ஆட்டமெல்லாம் தீரஉன தாடலையும்
காண்பேனோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- என்செயினும் என்பெறினும் என்னிறைவா ஏழையன்யான்
  நின்செய லென்றுன்னும் நினைவுவரக் காண்பேனோ.

- பஞ்சாயப் பறக்கும் நெஞ்சப் பாவியை நீகூவி ஐயா
  அஞ்சாதே என்றின்னருள் செய்யவும் காண்பேனோ.

- ஆடுகறங்காகி அலமந்து உழன்று மனம்
  வாடும்எனை ஐயாநீ வாவெனவும் காண்பேனோ.

- வாக்கால் மனத்தால் மதிப்பரிய நின்னருளை
  நோக்காமல் நோக்கிநிற்கும் நுண்ணறிவு காண்பேனோ.

- கண்நிறைந்த மோனக் கருத்தேஎன் கண்ணேஎன்
  உள்நிறைந்த மாயை ஒழிந்திடவும் காண்பேனோ.

- அண்டபகிரண்டம் அனைத்தும் ஒருபடித்தாக்
  கண்டவர்கள் கண்டதிருக் காட்சியையும் காண்பேனோ.

- தினையத் தனையும் தெளிவறியாப் பாவியேன்
  நினைவில் பரம்பொருள்நீ நேர்பெறவும் காண்பேனோ.

- என்னையறிய எனக்கு அறிவாய் நின்றருள்நின்
  தன்னையறிந்து இன்பநலம் சாரவைத்தல் ஆகாதோ.

- பொய்மாய மேஆன புரைதீர எந்தையின்ப
  மெய்ம்மயம் வந்தென்னை விழுங்கவைத்தால் ஆகாதோ.

- அத்தாநின் பொன்தா ளடிக்கே அனுதினமும்
  பித்தாக்கி இன்பம் பெருகவைத்தால் ஆகாதோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சோதியே நந்தாச் சுகவடிவே தூவெளியே
  ஆதியே நின்னை அறியவைத்தால் ஆகாதோ.

- என்னறிவுக்குள்ளே இருந்ததுபோல் ஐயாவே
  நின்னறிவுள் நின்னுடன்யான் நிற்கவைத்தால்
  ஆகாதோ.

- ஆசைச்சுழற் கடலில் ஆழாமல் ஐயாநின்
  நேசப் புணைத்தாள் நிறுத்தினால் ஆகாதோ.

- சேராமற் சேர்ந்துநின்று சின்மயனே
  நின்மயத்தைப்
  பாராமற் பார்எனநீ பக்கம் வைத்தால் ஆகாதோ.

- கண்ணாடிபோல் எல்லாம் காட்டும் திருவருளை
  உள்நாடி ஐயா உருகவைத்தால் ஆகாதோ.

- ஏதும் தெரியாது எனைமறைத்த வல்லிருளை
  நாதநீ நீக்கவொரு ஞானவிளக்கு இல்லையோ.

- ஊனாகநிற்கும் உணர்வை மறந்து ஐயாநீ
  தானாக நிற்கஒரு தந்திரம்தான் இல்லையோ.

- அல்லும் பகலும் அகண்டவடி வேயுனைநான்
  புல்லும்படி எனக்கோர் போதனைதான்
  இல்லையோ.

- கண்டவடி வெல்லாம்நின் காட்சியென்றே
  கைகுவித்துப்
  பண்டும்இன்றும் நின்றஎன்னைப் பார்த்திரங்க
  வேண்டாவோ.

- எண்ணிறைந்த மேன்மை படைத்தெவ்வுயிர்க்கும்
  அவ்வுயிராய்க்
  கண்ணிறைந்த சோதியை நாம்
  காணவா நல்லறிவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40. தெய்வ ஒளி

- தெய்வ ஒளிதனையே தேடு மற்றெல்லாம்
  கைநழுவும் காலத்திற்றான். - சுத்தானந்த பாரதி

- தேவர் குறளும் திருநான் மறைமுடிபும்
  மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
  திருவாசகமும் திருமூலர் சொல்லும்
  ஒரு வாசகமென் றுணர்.

- விநாயகப் பெருமானிடம் ஒரு பக்தனின் வேண்டுகோள்:

  "பிறர்செய் குற்றம் பொறுத்து உடன் மறக்கும்
  பெற்றி எனக்குப் பெரியோய் தருக.
  மறந்தும் பிறன்கேடு சூழும் நினைவை
  முற்றுமுழுதாய் முதல்வா நீக்குக"

- "ஒருமையுடன் நினதுதிரு மலரடியை
  நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்
  உள்ளொன்று வைத்துப் புறம்மொன்று பேசுவார்
  உறவு கலவாமை வேண்டும்
  பெருமைபெறு நினது புகழ் பேசவேண்டும்
  பொய்ம்மை பேசா திருக்க வேண்டும்
  பெருநெறி பிடித்தொழுக வேண்டும்
  மதமானபேய் பிடியா திருக்க வேண்டும்"
  - இராமலிங்க சுவாமிகள்

- உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
  அனைத்தே புலவர் தொழில். - குறள்

- பேசாத ஞானப் பெருமை கிடைப்பதுதான்
  ஆசாபா சங்களில்லாதார்க் கல்லோ - கூசாமல்
  தேசமெல்லா மோடித் திரிகின்றாயே மனமே
  ஆசாபா சங்களும் நீயாய் - பட்டினத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இருப்பதுபொய் போவதுமெய் என்றெண்ணி
  நெஞ்சே
  ஒருத்தருக்குந் தீங்கினை யுன்னாதே-
  பருத்ததொந்தி
  நம்மதென்று நாமிருக்க நாய்நரிகள் பேய்கழுகு
  தம்மதென்று தானிருக்குந் தான். - பட்டினத்தார்

- கொள்ளைக் குட்பட்டுக் குடிகேட ரோடிருந்து
  கள்ளக் கருத்தால் கருதாதே - மெள்ளமெள்ள
  ஆய்ந்தாய்ந்து பார்த்துநீ ஆறாறுக் கப்பாலே
  தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி - பட்டினத்தார்

- விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
  கற்றா ரோடேனை யவர் - குறள்

- கற்றிலனாயினுங் கேட்க அஃதொருவற்கு
  ஒற்கத்தின் ஊற்றாந் துணை - குறள்

- அவனன்றி ஓரணுவும் அசையாது எனும் பெரிய
  ஆப்தர் மொழி ஒன்று கண்டால்
  அறிவாவது ஏதுசில அறியாமை ஏதுஇவை
  அறிந்தார்கள் அறியார்கள் ஆர்?
  மௌனமொடு இருந்ததார் என்போல்உடம்பெலாம்
  வாயாய்ப் பிதற்று மவர்யார்?
  மனதெனவும் ஒருமாயை எங்கே இருந்துவரும்
  வன்மையொடு இரக்கம் எங்கே?
  புவனம் படைப்பதென் கர்த்தவ்வியம் எவ்விடம்
  பூதபே தங்கள் எவ்விடம்?
  பொய்மெய் இதமகிதமேவரு
  நன்மைதீமையொடு
  பொறை பொறாமையும் எவ்விடம்?
  எவர்சிறியர் எவர்பெரியர் எவர்உறவர்
  எவர்பகைஞர்
  யாதும் உனையன்றி உண்டோ?
  இகபரமிரண்டினிலும் உயிருக்கு உயிராகி
  எங்கும் நிறைகின்ற பொருளே.
  \- தாயுமானவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தருமமென் றொருபொருள் உளது தாவிலா
இருமையின் இன்பமும் எளிதில் ஆக்குமால்
அருமையில் வரும்பொருள் ஆகும் அன்னதும்
ஒருமையினோர்க் கலால் உணர்தற்
கொண்ணுமோ. - கந்தபுராணம்

- கண்டதோர் நறவமே காமமே யென
எண்தரு தீப்பொருள் இருமைத் தென்பரால்
உண்டுழி அழிக்குமொன்று உணர்வை
உள்ளமேல்
கொண்டுழி உயிரையும் கொல்லும் ஒன்றரோ
- கந்தபுராணம்

## 41. பார்த்தவிடமெல்லாம் பரம்

- பார்த்தவிடமெல்லாம் பரமென்றிருமனமே
காற்றனல்மண்
நீர்வெளியாம் கண்ட வெல்லா - மாத்திரண்ட
ஐம்புலனும் நில்லா ஆசைகளும் நில்லாவே
என்புடலும் நில்லா தினி. - பட்டினத்தார்

- எங்கள் புராணங்கள் அன்றைக்காலக் கதைகள் அல்ல; இன்றைக் காலக் கதைகளும்தான். எங்கள் ஒவ்வொருவருடைய கதைகளும்தான். அவை வருங்காலக் கதைகளும்தான். அதாவது எக்காலக் கதைகளும்தான். இது புராணங்களை நன்கு ஆராய்ந்து தெளிந்த ஒரு பெரியவரின் முடிபு.

- கையறியாமை யுடைத்தே பொருள் கொடுத்து
மெய்யறி யாமை கொளல். - குறள்

- சான்றவர் ஆய்ந்திடத் தக்க ஆம்பொருள்
மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்றதோர் தொல்பதி ஆருயிர்த் தொகை
வான்திகழ் தளையென வகுப்பர் அன்னவே.
- கந்தபுராணம்

தேவதேவன் மாதேவன் சிறப்புடை
ஈசன் எங்கோன்
மூவரின் முதல்வன்ஏகன் முடிவிற்கு
முடிவாய் நின்றோன்
ஆவியுள் ஆவியானோன் அந்தணன்
அநாதி என்றே
ஏவரை இசைத்தஅம்மா எல்லையில்
மறைகளெல்லாம். - கந்தபுராணம்

முற்றுமாயினான் முடிவிற்கு முடிவிற்கு முடிவாய்
உற்றுளான் என்றுமுள்ளவன் அனைத்தையும்
உடையோன் மற்றென்னால் உரைப்பரியதோர்
சீர்த்தியன் மலர்த்தாள் பற்றினோர்க்கன்றி
உணரவொண் ணாததோர் பழையோன்.
- கந்தபுராணம்

பாக்கியத்தைக் கண்டு பரிந்து மகிழாதே
தாக்குமிடி வந்தால் சலியாதே - நோக்குமே
ஒருத்தன் திருவிளையாட் டென்றுணரு நெஞ்சே
கருத்தாலே நின்று கருது. - பட்டினத்தார்

கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றும் அறிவு இல்லாத என்
கர்மத்தை என்சொல்கேன்
மதியைஎன்சொல்லுகேன் கைவல்யஞானநீதி
நல்லோர் உரைக்கிலோ கர்மம் முக்கியமென்று
நாட்டுவேன் கர்மம் ஒருவன்
நாட்டினாலோ பழையஞானம் முக்கியமென்று
நவிலுவேன் வடமொழியிலே
வல்லான் ஒருத்தன் வரவும் திராவிடத்திலே
வந்ததா விவகரிப்பேன்
வல்லதமிழ் அறிஞர்வரின் அங்ஙனே
வடமொழியின் வசனங்கள் சிறிது புகல்வேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்லாமல் எவரையும் மருட்டிவிட கைவந்த
வித்தை என்முத்தி தருமோ
வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே - தாயுமனாவர்

- இருவினைக் குளாகாதே என்னுடைமை
எண்ணாதே
பெருகு சினங்கொண்டு பினற்றாதே - மருவுமலக்
கள்ளமெலாம் விட்டுக் கரைந்து கரைந்துருகி
உள்ளுணர்ந்து நெஞ்சே பார்ஒன்று.
- பட்டினத்தார்

- பொருட் பெண்டிர் பொய்மைமுயக்கம்
இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று. - குறள்

- இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு. - குறள்

- களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீரக்
குளித்தனைத் தீத்துரீஇ யற்று. - குறள்

- கள்ளுண்ணாப் போழ்தில் களித்தானைக்
காணுங்கால்
உள்ளான்கொல் உண்டதன் சோர்வு. - குறள்

- வயது செல்லச்செல்ல மனிதன் மாறுவான் என்பது நடப்பதில்லை. வயது செல்லச்செல்ல ஒருவன் தனது பழைய நிலைப்பாட்டில் இறுகிக்கொண்டு போவானேயன்றி நல்வழியில் திருந்தி வருவானென்பது நடக்காத காரியம்.

- கதைக்க எழுச்சி வராமலிருந்தால் நல்லதுதான். ஆனால் கதைக்கத் தூண்டுதல் வந்தால் கதைக்க வேண்டியதுதான். அடக்கிப் பிரயோசனம் இல்லை. (சைவ சித்தாந்தம் உணர்ந்த ஒரு சிந்தனையாளன் கூற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 42. ஆறுமுக நாவலர்

- நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்
  சொல்லுதமிழ் எங்கே சுருதியெங்கே -
  எல்லவரும்
  ஏத்துபுராண இதிகாசமெங்கே சைவப்பிர
  சங்கமெங்கே
  ஆத்தனறி வெங்கே அறை.
  - சி.வை.தாமோதரம்பிள்ளை
  தமிழ்தந்த தாமோதரனார்

- கந்தவேள் செய்தவம்போற் காணும் தவமுமவன்
  மைந்தனாம் நாவலன்போல் மைந்தர்களும் -
  செந்தமிழில்
  வல்லவர்க ளன்னவன்போல் வந்திடுவதும்
  உலகில்
  இல்லையில்லை இல்லை இனி.
  - (சுன்னாகம் குமாரசாமிப் புலவரின்
  தமிழாசிரியர் "இலக்கணக் கொட்டர்"
  என்றழைக்கப்பட்ட முருகேச பாண்டிதர்)

- சொல்வன்மையில் நாவலரவர்கள் அக்காலத்தில் தமக்கு நிகராவாவார் எவருமின்றித் திகழ்ந்த வரலாற்றை எம்மாசிரியர் சோமசுந்தர நாயக்கர் அவர்கள் நேரே சொல்லக் கேட்டோம்.
  - மறைமலையடிகள்

- "கற்றுணர் புலவர் உட்களிக்கும்
  முற்றுமுணர் ஆறுமுக நாவலன்"
  - திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான்
  திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை

- நாவரைப்போல் முன்னும் இப்பொழுதும் தமிழ் வித்துவான்களில்லை. ஒருவேளை இருந்தாலும் இவரைப்போலத் தமிழையும் நல்லொழுக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையும், சைவசமயத்தையும் வளர்த்து நல்ல தமிழ் வசன நடையில் தமிழ் நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்தியவர் வேறெவருமில்லை. - (சென்னை உயர்மன்ற நீதிபதி கனம் தி.சதாசிவ ஐயர்)

- நாவலரைப் போல நமக்காளில்லை. முற்போக்குப் பேச நமக்காட்களுண்டு. சமரசம் பேச நமக்கு ஆட்களுண்டு. பாதிரிமார் செய்த நன்மையை நோக்கி உருகுவோருண்டு. இக்காலப் போலி நடிப்பை எடுத்துக்காட்ட நாவலரைப்போல நமக்காளில்லை. - (யாழ் சைவாசிரிய கலாசாலைப் பேராசான், மௌன தவமுனி, திரு.பொ.கைலாசபதி அவர்கள்)

- தமிழ் மக்களின் நன்மையின் பொருட்டுத் தம் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்த பெரியார் ஆறுமுகநாவலர் அவர்கள்.
  - எஸ்.வையாபுரிப்பிள்ளை

- தூரமொழிகளிற் சிறந்து கிடந்த குறியீட்டு இலக்கணத்தையும் அதன் மாத்திரைக் கணக்கினையும் நிருமித்துதவிய நாவலரவர்கள் தமிழுரை நடையின் தாதையர்.
  - (மணி திருநாவுக்கரசு முதலியார்)

- யாழ்ப்பாண நல்லூர் ஆறுமுக நாவலரவர்கள் ஒரு அவதார புருஷர். இடையிருட் கடைக் காலத்தில் விடியுமுன் விசும்பில் விளங்கும் வெள்ளிபோல தமிழகத்தில் தளரும் சைவமும் தமிழுந் தழைய அவ்விரண்டிற்கும் புத்துயிர் வழங்கப் பிறந்த வள்ளலாவார். முன்னே பல காலங்களிலும் தமிழகத்திலிருந்து தான் பெற்ற சிறுசிறு நன்மைகளை வட்டியுடன் பெருக்கி, ஒரு காலத்து ஒரு முகமாகப் பழங் கடனைத் தீர்த்து, என்றும் தீர்க்கொணாவாறு தமிழகத்தை ஈழநாட்டிற்குக் கடமைப்படுத்திய பேருபகாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலரென்றால் அது மிகையாகாது. -
(அண்ணாமலைப்பல்கலைக் கழகப் பேராசிரியர்
திரு.எஸ்.சோமசுந்தர பாரதியார்)

- புன்னெறியதனிற் செல்லும் போக்கினை
  விலக்கிமேலாம்
  நன்னெறி ஒழுகச்செய்து நவையறு காட்சிநல்கி
  என்னையும் அடியனாக்கி இருவினை
  நீக்கியாண்ட
  பன்னிருதடந் தோள்வள்ளல் பாதபங்
  கயங்கள் போற்றி. - கந்தபுராணம்

- உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
  நிலவுலாவிய நீர்மலி வேணியன்
  அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
  மலர்ச்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.
  பெரிய ~~கந்த~~புராணம்

- வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்
  சுரக்க மன்னன்
  கோன்முறை யரசுசெய்க குறைவிலா
  துயிர்கள் வாழ்க
  நான்மறை யறங்களோங்க நற்றவம்
  வேள்வி மல்க
  மேன்மைகொள் சைவநீதி விளங்குக
  வுலகமெல்லாம். - பெரியபுராணம்

- அரியகற்று ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
  இன்மை அரிதே வெளிறு - குறள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 43. இலகிய இரக்கம்

- கலையெலா முணர்ந்தானேனும்
  கரிசறத் தெளிந்தானேனும்
  மலையென உயர்ந்தானேனும்
  மனமயலகன்றா றேனும்
  உலகெலாம் புகழப் பல்லோர்க்கு
  உதவிய கையனேனும்
  **இலகிய இரக்க**மின்றேல்
  எழுநரகடை வனன்றே.
  - (பதி, பசு, பாச விளக்கம் என்ற நூலிலிருந்து)

- கற்பனை கடந்தசோதி கருணையே உருவமாகி
  அற்புதக் கோலநீடி அருமறைச் சிரத்தின்மேலாம்
  சிற்பரவி யோமமாகும் திருச்சிற்றம்
  பலத்துள்நின்று பொற்புடன்
  நடம்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி.
  - பெரியபுராணம்

- கொல்லாமல் கொன்றதைத் தின்னாமற்
  குத்திரம் கோள்களவு
  கல்லாமல் கைதவ ரோடிணங்காமற்
  கனவினும் பொய்
  சொல்லாமற் சொற்களைக் கேளாமற்
  றோகையர் மாயையிலே
  செல்லாமற் செல்வந் தருவாய்
  சிதம்பர தேசிகனே. - பட்டினத்தார்

- தன்னூன் பெருக்கற்குத் தான்பிறது ஊனுண்பான்
  எங்ஙனம் ஆளும் அருள் - குறள்

- செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
  உயிரின் தலைப்பிரிந்த ஊன். - குறள்

- கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
  எல்லா உயிரும் தொழும். - குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
  கொல்லாமை சூழும் நெறி - குறள்

- நிலையஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலையஞ்சிக்
  கொல்லாமை சூழ்வான் தலை

- தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
  இன்னுயிர் நீக்கும் வினை - குறள்

- கங்கையில் படிந்திட்டாலும்
  கடவுளைப் பூசித்தாலும்
  மங்குல்போல் கோடிதானம்
  வள்ளலாய் வழங்கினாலும்
  சங்கையில் லாதஞான
  தத்துவம் உணர்ந்திட்டாலும்
  பொங்குறுபுலால் புசிப்போன்
  போய்நரகடை வானன்றே.
  - (பதி, பசு, பாச விளக்கம்-நூலிலிருந்து)

- அம்மாவென அலற ஆருயிரைக் கொன்றருந்தி
  இம்மானுட ரெல்லாம் இன்புற்றி ருக்கின்றார்
  அம்மாவெனும் சத்தம் கேட்டகன்ற மாதவர்க்கும்
  பொய்மா நிரயம்என்றால் புசித்தவர்க்கென்
  சொல்லுவதே.
  - (பதி, பசு, பாச விளக்கம்- நூலிலிருந்து)

- கொலைகளவு கட்காமம் கோபம் விட்டாலன்றோ
  மலையிலக்கா நின்னருள்தான் வாய்க்கும்
  பராபரமே. - தாயுமானவர்

- கொல்லா விரதங் குவலயமெல்லா மோங்க
  எல்லார்க்கும் சொல்வ தென்னிச்சை பராபரமே.
  - தாயுமானவர்

- எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணியிரங்கவுநின்
  தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே.
  - தாயுமானவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நோன்பென்பது கொன்று தின்னாமை.
  -ஔவையார்

- புலையும் கொலையும் களவும் தவிர்.
  - ஔவையார்

- புலால், கள் ஆகியவை அறிவு விருத்தியைக் கெடுக்குமாகையால் விலக்கப்பட வேண்டியவை.
  - அளவெட்டி மௌன தவமுனி
  பொ.கைலாசபதி

- மன்னுயிரைக் கொன்று
  வதைத்துண் டுழலாமல்
  தன்னுயிர்போல் எண்ணித்
  தவமுடிப்ப தெக்காலம். - பத்திரகிரியார்

- கஞ்சா அபினியுடன் கள்ளுண்டு வாடாமற்
  பஞ்சாமிர் தத்தைப் பருகுவது மெக்காலம்?
  - பத்திரகிரியார்

- பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
  எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்
  செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
  மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பாரே.
  - திருமந்திரம்

- கொலையே களவு கட்காமம் பொய்கூறல்
  மலைவான பாதக மாம். - திருமந்திரம்

- கஞ்சாப் புகை பிடியாதே- வெறி
  காட்டி மயங்கியே கட்குடியாதே
  அஞ்சவுயிர் மடியாதே. - கடுவெளிச் சித்தர்

- அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
  உயிர்செகுத் துண்ணாமை நன்று. - குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 44. அன்னவிசாரம் அதுவே விசாரம்

அன்னவிசாரம் அதுவே விசாரம்
அதுவொழிந்தாற்
சொன்னவிசாரந் தொலையா விசாரநற்
றோகையரைப்
பன்னவிசாரம் பலகால் விசாரமிப்
பாவிநெஞ்சுக்கு
என்னவிசாரம் வைத்தா யிறைவா கச்சிஏகம்பனே.
- பட்டினத்தார்

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட் டைமேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்
றருள்செய்வான் அமரும் கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில் பார்க்கும் திருவையாறே. - சம்பந்தர்

ஐயினால் மிடறடைப்புண்டு ஆக்கைவிட்டு
ஆவியார் போவதுமே அகத்தார்கூடி
மையினாற் கண்ணெழுதி மாலைசூட்டி
மயானத்தில் இடுவதன்முன் மதியஞ்சூடும்
ஐயனார்க் காளாகி அன்புமிக்கு
அகங்குழைந்து மெய்யரும்பி அடிகள் பாதம்
கையினால் தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றார்ப்பூர் நடுதறியைக் காணலாமே.
- அப்பர்

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல. - குறள்

அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை. - குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஐயுந் தொடர்ந்து விழியும்செருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகிவிடுகின்ற போதொன்று
வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றி யூருடையீர்த்
திருநீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி ஐந்தெழுத்தோதவும்
கற்பியுமே. - பட்டினத்தார்

- வேதாகமங்களும் அவற்றின் வழிவந்த நூல்களாகிய புராண இதிகாசங்களும், பன்னிரு திருமுறைகளும், திருக்குறளும், மெய்கண்ட சாத்திரங்களும் வீட்டு நெறிக்கு வழிகாட்டுவன. ஏனைய மேலைநாட்டுக் கீழை தேசத்துச் சிந்தனையாளர்களின் முடிவுகளில் நல்ல கருத்துக்கள் பல உளவேனும் வீட்டு நெறிக்கு வழியாகா. மேலைத்தேச ஞானிகளுள் தலைசிறந்தவர்களான சோக்கிறற்றீஸ், பிளேட்டோ ஆகியவர்களின் முடிவுகள்கூட வேதாகம வழியில் வந்த ஞானிகளின் ஆரம்ப இடத்தைக்கூட எட்டவில்லை.
- அளவெட்டி மௌன தவமுனி பொ.கைலாசபதி

- நுனிக்கொம்பர் ஏறினார் அஃ.திறந் தூக்கின்
உயிர்க் கிறுதியாகி விடும். - குறள்

- "வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்" வேதாகமங்களும் அவற்றின் வழிவந்த நூல்களுமே, "கதிப்பாற் செல்ல ஏது நெறியெனுமவற்கு" வழிகாட்டுவன. "தத்தம் மாற்றங்கள் நிறுவிய சமயிகள் பலரும் கத்து புன்சொலை வினவினர் அவன் செயல் காணார்". "கத்திடும் ஆன்மாக்கள் உரைக்கட்டிற் பட்டோர் கனகவரை குறித்துப் போய் கடற்கே வீழ்வர்."
- இந்திய சைவசித்தாந்த தத்துவ சாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எல்லாமறிந்து படித்தே யிருந்தெமக் குள்ளபடி
வல்லான் அறிந்துளன் என்றுணராது மதிமயங்கிச்
சொல்லால் மலைந்துறு சூழ்விதியின்படி
துக்கித்துப்பின்
எல்லாம் சிவன்செயலே யென்பர்காண்
கச்சிஏகம்பனே. - பட்டினத்தார்

- காடோ செடியோ கடற்புறமோ கனமேமிகுந்த
நாடோ நகரோ நகர்நடுவோ நலமேமிகுந்த
வீடோபுறந் திண்ணையோ தமியேனுடல்
வீழுமிடம்
நீடோய் கழுக்குன்றிலீசா உயிர்த்துணை
நின்பதமே. - பட்டினத்தார்

- ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து - குறள்

- விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர். - குறள்

- சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி
இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும். - குறள்

## 45. சினம் காத்துக் கொள்ளும் குணம்

- உள்ளங் கவர்ந்து எழுந்து ஓங்குசினம் காத்துக்
கொள்ளும் குணமே குணம் என்க - நன்னெறி

- பற்றற்றோம் என்பார் படிற்றொழுக்கம்
எற்றெற்றென்று
ஏதம் பலவும் தரும். - குறள்

- நெஞ்சில் துறவார் துறந்தார்போல வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல். - குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கல்லாப்பிழையுங் கருதாப் பிழையுங்
  கசிந்துருகி
  நில்லாப்பிழையும் நினையாப் பிழையுநின்
  அஞ்செழுத்தை
  சொல்லாப்பிழையுந் துதியாப்பிழையும்
  தொழாப் பிழையும்
  எல்லாப்பிழையும் பொறுத்தருள்
  வாய்கச்சி ஏகம்பனே. - பட்டினத்தார்

- கொன்றேன்அநேகம் உயிரையெல்லாம் பின்பு
  கொன்றுகொன்று தின்றேன் அதன்றியும்
  தீங்குசெய்தேன் அதுதீர்க்கவென்றே நின்றேனின்
  சந்நிதிக்கே யதனாற்குற்றம் நீபொறுப்பாய்
  என்றே உனைநம்பினேன் இறைவா
  கச்சி ஏகம்பனே. - பட்டினத்தார்

- கடுஞ்சொலின் வம்பரை யீனரைக் குண்டரைக்
  காமுகரைக்
  கொடும்பாவமே செயும் நிர்மூடர் தம்மைக்
  குவலயத்துள்
  நெடும்பனைபோல வளர்ந்து நல்லோர்தம்
  நெறியறியா
  இடும்பரை ஏன்வகுத்தாய் இறைவா
  கச்சி ஏகம்பனே. - பட்டினத்தார்

- வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
  ஐந்தும் அகத்தே நகும். - குறள்

- வானுயர் தோற்றம் எவன்செயும் தன்னெஞ்சம்
  தான்அறி குற்றப் படின். - குறள்

- தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
  வேட்டுவன் புள் சிமிழ்த்தற்று. - குறள்

- மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
  பழித்தது ஒழித்து விடின். - குறள்

- கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார்
  சொல்கூற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாத மாந்தர்க்கு அறம்கூற்றம் - மெல்லிய
வாழைக்குத் தான்ஈன்ற காய்கூற்றம் கூற்றமே
இல்லிற்கு இசைந்து ஒழுகாப்பெண்.
- மூதுரை ஔவையார்

- அறிவுடையார் அன்றி அதுபெறார் தம்பால்
செறுபழியை அஞ்சார் சிறிதும். - நன்னெறி

- இன்சொலால் அன்றி இருநீர் வியன் உலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே - நன்னெறி

- சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும் - குறள்

- இன்சொல் இனிதீன்றல் காண்பான்
எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. - குறள்

- எப்போதாயினும் கூற்றுவன் வருவான்
அப்போதந்தக் கூற்றுவன் தன்னைப்
போற்றவும் போகான் பொருளொடும் போகான்
சாற்றவும் போகான் தமரொடும் போகான்
ஏதுக்கழுவீர் ஏழை மாந்தர்காள்.
- கபிலர் அகவல்

- ஆபத்துக் குதவாப் பிள்ளைஅரும்பசிக்கு உதவா
அன்னம் தாபத்தைத் தீர்க்காத் தண்ணீர்
தரித்திரம்அறியாப் பெண்டிர் கோபத்தை
அடக்கா வேந்தன் குருமொழி கொள்ளாச் சீடன்
பாபத்தைத் தீராத் தீர்த்தம் பயனிலை
ஏழும்தானே. - விவேகசிந்தாமணி

- உத்தமர்தாம் ஈயுமிடத் தோங்கு பனைபோல்வரே
மத்திமர்தாந் தெங்குதனை மானுவரே -
முத்தலரும்
ஆங்கமுகு போல்வார் அதம ரவர்களே
தேங்கதலியும் போல்வார் தேர்ந்து.
- நீதிவெண்பா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கமலம் போதலர்ந்த செவ்விபோலும் வதனம்
தங்குமொழி சந்தனம் போலும் - பங்கியெறி
கத்திரியைப் போலுமிளங் காரிகையே
வஞ்சமனம் குத்திரர்பால் மூன்று குணம்
- நீதிவெண்பா

இன்னல்தரும் பொருளை ஈட்டுதலும் துன்பமே
பின்னதனைப் பேணுதலும் துன்பமே - அன்னது
அழித்தலும் துன்பமே அந்தோ பிறர்பால்
இழத்தலும் துன்பமே யாம். - நீதிவெண்பா

## 46. அற்கா இயல்பிற்றுச் செல்வம்

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல். - குறள்

சென்ற இடத்தால் செலவிடாது தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு. - குறள்

பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு
ஊதியம் போக விடல். - குறள்

பேதைமையுள் ளெல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல். - குறள்

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையில் பேதையார் இல். - குறள்

வெண்மை எனப்படுவது யாதெனின் ஒண்மை
உடையம்யாம் என்னும் செருக்கு. - குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
  அணியுமாம் தன்னை வியந்து. - குறள்

- யான்எனது என்னும் செருக்கறுப்பான்
  வானோர்க்கு
  உயர்ந்த உலகம் புகும். - குறள்

- சொல்லாமலே பெரியர் சொல்லிச் செய்வார்
  சிறியர்
  சொல்லியும் செய்யார் கயவரே - நல்ல
  குலாமாலை வேற்கண்ணாய் கூறுவதை நாடின்
  பலா மாவைப் பாதிரியைப் பார். - ஒளவையார்

- சுற்றும் கருங்குளவி சூரைத்தூறு ஆரியப்பேய்
  எற்றம் சுடுகாட்டு இடுகரையில் - புற்றில்
  வளர்ந்த மடற்பனைக்குள் வைத்ததேன் ஒக்குமே
  தளர்ந்தோர்க்கு ஈயார் தனம்.- தனிப்பாடற்றிரட்டு

- கூரம்பாயினும் வீரியம் பேசேல். - ஒளவையார்

- நானார் என்னுள்ளமார் ஞானங்களார்
  என்னையாரறிவார்
  வானார் பிரானென்னை ஆண்டிலனேல்
  மதிமயங்கி
  ஊனாருடை தலையில் உண்பலிதேர்
  அம்பலவன்
  தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ!
  - திருவாசகம்

- செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று
  பத்திசெய் மனப் பாறைகட் கேறுமோ
  அத்தன் என்று அரியொடு பிரமனும்
  துத்தி யஞ்செய நின்ற நற்சோதியே. - அப்பர்

- தந்தையார் தாயார் உடன்பிறந்தார் தாரமார்
  புத்திரரார் தாந்தா மாரே
  வந்தவா றெங்கனே போமா றேதோ
  மாயமாம் இதற்கேது மகிழவேண்டாம்
  சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகழ்மதியும் வாளரவுந் திளைக்கும்சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
என்றெழு வார்க்கிரு விசும்பில் இருக்கலாமே
- அப்பர்

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நானாழி - தோழி
நிதியும் கணவனும் நேர்படினும் தம்தம்
விதியின் பயனே பயன். - மூதுரை, ஔவையார்

நற்றாமரைக் கயத்தில் நல்அன்னம்
சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உவக்கும் பிணம்.
- மூதுரை ஔவையார்

நன்றென்றும் தீதென்றும் நானென்றும்
தானென்றும்
அன்றென்றும் ஆமென்றும் ஆகாதே -
நின்றநிலை
தானதாம் தத்துவமாம் சம்பறுத்தார்
யாக்கைக்குப்
போனவா தேடும் பொருள்.
- நல்வழி, ஔவையார்

பூவாதே காய்க்கும் மரமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாம்உளரே - தூவா
விரைத்தாலும் நன்றாகா வித்தெனவே பேதைக்கு
உரைத்தாலும் தோன்றாது உணர்வு.
- நல்வழி, ஔவையார்

உடலின் சிறுமைகண்டு ஒண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார் - மடவரால்
கண்ணளவாய் நின்றதோ காணும் கதிர்ஒளிதான்
விண்ணளவு வாயிற்றோ விளம்பு. - நன்னெறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் கவர்ந்தெழுந்து ஓங்குசினம் காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க - வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடம்கரை தான்பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு. - நன்னெறி

## 47. ஔவையார், சிவப்பிரகாச சுவாமிகள் பாடல்கள்

### ஔவையாரின் மூதுரையிலிருந்து

அற்றகுளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லலர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறவார் உறவு.

அடக்கம் உடையார் அறிவிலர் என்றுஎண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத்தலையில்
ஓடுமீன் ஓடி உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு.

உற்ற இடத்தில் உயிர்வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ - கற்றூண்
பிளந்துஇறுவது அல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்.

அடுத்து முயன்றாலும் ஆகும் நாளன்றி
எடுத்த கருமங்கள் ஆகா - தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர் மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா.

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்து - தானும்தன்
பொல்லாச் சிறகை விரித்து ஆடினாற்போலுமே
கல்லாதான் கற்ற கவி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி- உடன்பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரும் உண்டு.

## ஔவையாரின் நல்வழியிலிருந்து

- உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பதுகோடி நினைந்து எண்ணுவன -
கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையும் சஞ்சலமே தான்.

- ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்.

- ஈட்டும் பொருள்முயற்சி எண்ணிறந்த ஆயினும்
ஊழ்
கூட்டும்படி அன்றிக் கூடாவாம் - தேட்டம்
மரியாதை காணும் மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணும் தனம்.

- எல்லாப் படியாலும் எண்ணினால் இவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய் புன்குரம்பை - நல்லார்
அறிந்திருப்பர் ஆதலினால் ஆம்கமல நீர்போல்
பிரிந்திருப்பர் பேசார் பிறர்க்கு.

- வருந்தி அழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமின்என்றாற் போகா-
இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம்நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவப்பிரகாச சுவாமிகள் நன்னெறியிலிருந்து

- பொய்ப்புலன்கள் ஐந்தும்நோய் புல்லியர்பா
  லன்றியே
  மெய்ப்புலவர் தம்பால் விளையாவாம் - துப்பின்
  சுழற்றும்கொல் கற்றூணைச் சூறா வளிபோய்
  சுழற்றும் சிறுபுன் துரும்பு.

- இல்லானுக்கு அன்புஇங்கு இடம்பொருள்
  ஏவல்மற்று
  எல்லாம் இருந்தும் அவற்கு என்செய்யும் -
  நல்லாய்
  மொழியிலார்க்கு ஏது மூதுநூல் தெரியும்
  விழியிலார்க்கு ஏது விளக்கு.

- உண்டுகுணம் இங்குஒருவர்க்கு எனினும் கீழ்
  கொண்டு புகல்வது அவர் குற்றமே-
  வண்டுமலர்ச்
  சேக்கைவிரும்பும் செழும்பொழில்வாய்
  வேம்பன்றோ
  காக்கை விரும்பும் கனி.

## 48. நாயக்கமன்னர் கால தனிப் பாடல்களின் தொகுப்பாகிய விவேக சிந்தாமணியிலிருந்து தொகுத்தவை

- வானரம் மழைதனில் நனையத் தூக்கணம்
  தான்ஒரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும்
  ஞானமும் கல்வியும் நிவன்ற நூல்களும்
  ஈனருக்கு உரைத்திடல் இடரதாகுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தண்டாமரையி னுடன்பிறந்தும்
  தண்தேன் நுகரா மண்டூகம்
  வண்டோ கானத் திடையிருந்தும்
  வந்தே கமல மதுவுண்ணும்
  பண்டே பழகியிருந்தாலும்
  அறியார் புல்லர் நல்லோரைக்
  கண்டே களித்தங்கு உறவாடித்
  தம்மில் கலப்பார் கற்றோரே.

- வாழ்வது வந்தபோது மனந்தனில் மகிழவேண்டா
  தாழ்வது வந்ததானால் தளர்வரோ தக்கோர்மிக்க
  ஊழ்வினை வந்ததானால் ஒருவரால்
  விலக்கப்போமோ
  ஏழையாய் இருந்தோர் பல்லக் கேறுதல்
  கண்டிலீரோ.

- செல்வம் வந்துற்றபோது
  தெய்வமும் சிறிது பேணார்
  சொல்வதை அறிந்து சொல்லார்
  சுற்றமும் துணையும் பேணார்
  வெல்வதே கருமம் அல்லால் வெம்பகை
  வலிதென் றெண்ணார்
  வல்வினை விளைவும் பாரார்
  மண்ணின்மேல் வாழும் மாந்தர்.

- தூம்பினில் புதைத்தகல்லும் துகள்இன்றிச்
  சுடர் கொடாது
  பாம்புக்குப்பால் வார்த்து என்றும்
  பழகினும் நன்மை தாரா
  வேம்புக்குத் தேன் வார்த்தாலும் வேம்பினில்
  கசப்பு மாறாது
  ஆம்பல நூல் கற்றாலும்
  துர்ச்சனர் தக்கோர் ஆகார்.

- மெய்யதைச் சொல்வராகில் விளங்கிடும்
  மேலும் நன்மை
  வையகம் அதனைக் கொள்வார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதரில் தேவர் ஆவார்
பொய்யதைச் சொல்வாராகில்
போசனம் அற்பம் ஆகும்
நொய்யவர் இவர்கள் என்று
நோக்கிடார் அற்பம் ஆகும்.

ஆரம்பூண்ட மணிமார்பா
அயோத்திக்கரசே அண்ணாகேள்
ஈரமிருக்க மரமிருக்க இலைகள்
உதிர்ந்தவாறு ஏது
வாரம் கொண்டு வழக்குரைத்து
மண்மேல் நின்று வலிபேசி
ஓரம் சொன்ன குடியதுபோல்
உதிர்ந்து கிடக்கும் தம்பியரே.

பொல்லார்க்குக் கல்வி வரில் கருமம் உண்டாம்
அதனோடு பொருளும் சேர்ந்தால்
சொல்லாதது சொல்லவைக்கும் சொற்சென்றால்
குடிகெடுக்கத் துணிவர் கண்டாய்
நல்லோர்க்கு இம்மூன்று குணம் உண்டாகில்
அருள் அதிக ஞானம் உண்டாம்
எல்லார்க்கும் உபகார ராயிருந்து
பரகதியை எய்துவாரே.

வில்லது வளைந்ததென்றும்
வேழமது உறங்கிற்றென்றும்
வல்லியம் பதுங்கிற்றுஎன்றும்
வளர்கடா பிந்திற்றென்றும்
புல்லவர்தம் சொல்லுக்கஞ்சிப்
பொறுத்தனர் பெரியோர் என்றும்
நல்லதென்றிருக்க வேண்டா
நஞ்செனக் கருதலாமே.

அம்பும் அழலும் அவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறம்சுடும் வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலால் காமம்
அவற்றினும் அஞ்சப் படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வெகுளியே உயிர்க்கெலாம் விளைக்கும்
  தீவினை
  வெகுளியே குணம் தவம் விரதம்
  மாய்க்குமால்
  வெகுளியே அறிவினைச் சிதைக்கும்
  வெம்மைசால்
  வெகுளியில் கொடும்பகை வேறொன்
  றில்லையால்.

- செல்வத்தைப் பெற்றார் சினங்கடிந்து
  செவ்வியராய்ப்
  பல்கிளையும் வாடாமற் பார்த்துண்டு - நல்லன
  தானம் மறவாத தன்மையரேல் அஃதுஎன்பர்
  வானகத்து வைப்பதோர் வைப்பு.

- புலியோடு புல்வாய்தானும்
  பொருந்தியே யுறவானாலும்
  எலியோடு பூனைகூடி இசைந்து
  நன்குறவா னாலும்
  நலம்மிகு சர்ப்பம் தேரை
  நன்றதாய் உறவானாலும்
  மலமில் மேலவரோடு அற்ப
  மதியினர் உறவாகாரே.

- தான்கெடினும் தக்கார்கேடு எண்ணற்க
  தன்னுடம்பின்
  ஊன்கெடினும் உண்ணார்கைத் துண்ணற்க-
  வான்கவிந்த
  வையக மெல்லாம் பெறினும் உரையற்க
  பொய்யோடு இடைமிடைந்த சொல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 49. தீங்கினரிடமிருந்து நீங்குவதே நல்ல நெறி

- கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக்கு ஆயிரந்தான் வேண்டுமே -
வம்புசெறி
தீங்கினர்தம் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி. - நீதிவெண்பா

- தக்கார்க்கே ஈவர் தகார்க்கு அளிப்பார்
இல்என்று
மிக்கார்க்கு உதவார் விழுமியோர் - எக்காலும்
நெல்லுக்கு இறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக்கு இறைப்பரோ போய். - நன்னெறி

- ஈக்குவிடம் தலையில் எய்தும் இருந் தேளுக்கு
வாய்த்த விடம் கொடுக்கில் வாழுமே -
நோக்கரிய
பைங்க ணரவுக்குவிடம் பல்லளவே துர்ச்சனர்க்கு
அங்கமுழுதும் விடமே யாம். - நீதிவெண்பா

- நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையிலும் மாணப் பெரிது. - குறள்

- ஆன்ம ஈடேற்றத்திற்கு (கதிப்பாற் செல்ல) முயல்வதே மனிதப் பிறவியின் குறிக்கோள் என்ற உண்மையை எல்லோரும் உணர வேண்டும். இதற்குரிய வழிகளை வள்ளுவர், திருமூலர், வியாசர் முதலிய மகாஞானிகள் காட்டிச்சென்றனர். ஆத்மஞான வெளிப்புக்கு அடிப்படையான தேகப் புனிதத்தை அடைய புலால், மது முதலில் தவிர்க்கப்பட வேண்டுமென்றும், இன்றேல் ஆத்ம ஞானம் வெளிக்காது என்றும், இம் மகாஞானிகள் கண்டு வலியுறுத்தினர். இவர்கள் புலால்கள் பற்றிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியதை எல்லோரும் நன்கு சிந்திக்கவேண்டும்.
- சைவ நற்சிந்தனை

## விவேக சிந்தாமணியிலிருந்து

- பாலுக்குச் சர்க்கரைஇல்லை யென்பார்க்கும்
  பருக்கையற்ற
  கூழுக்குப்போட உப்பில்லை யென்பார்க்கும்
  குத்தித்தைத்த
  காலுக்கு தோற்செருப்பில்லை யென்பார்க்கும்
  கனகதண்டி
  மேலுக்குப் பஞ்சணைஇல்லை யென்பார்க்கும்
  விசனம் ஒன்றே.

- நிட்டூரமாக நிதி தேடும் மன்னவனும்
  இட்டதனை மெச்சா இரப்போனும் - முட்டவே
  கூசிநிலை நில்லாக் குலக்கொடியும் கூசிய
  வேசியும் கெட்டு விடும்.

- ஒப்புடன் முகமலர்ந்தே உபசரித்து
  உண்மைபேசி
  உப்பில்லாக் கூழிட்டாலும் உண்பதே
  அமிர்தமாகும்
  முப்பழமொடு பாலன்னம் முகங்கடுத்து
  இடுவராயின்
  கப்பிய பசியினோடு கடும்பசி
  ஆகுந்தானே.

- கதிர்பெறு செந்நெல்வாடக் கார்க்குலம்
  கண்டுசென்று
  கொதிதிரைக் கடலில்பெய்யும் கொள்கைபோல்
  குவலயத்தே
  மதிதனம் படைத்தபேர்கள் வாடினோர்
  முகத்தைப்பாரார்
  நிதிமிகப் படைத்தோர்க் கீவார் நிலையிலார்க்கு
  ஈயமாட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைதான் வயதில் மூத்தால் பிதாவின்
சொற்புத்தி கேளான்
கள்ளின்நல் குழலாள் மூத்தால்
கணவனைக் கருதிப் பாராள்
தெள்ளற வித்தைகற்றால் சீடனும்
குருவைத் தேடான்
உள்ளநோய் பிணிகள் தீர்ந்தால் உலகர்
பண்டிதரைத் தேடார்.

தாங்கொணா வறுமைவந்தால்
சபைதனில் செல்ல நாணும்
வேங்கைபோல் வீரம் குன்றும்
விருந்தினர்க் காணநாணும்
பூங்கொடி மனையாட்கு அஞ்சும்
புல்லருக்கு இணங்கச் செய்யும்
ஓங்கிய அறிவுகுன்றும் உலகெலாம்
பழிக்கும்தானே.

நிலைதளர்ந் திட்டபோது நீணிலத்து
உறவு மில்லை
சலமிருந் தகன்றபோது தாமரைக்கு
அருக்கன் கூற்றம்
பலவனம் எரியும்போது பற்றுதீக்கு
உறவாம் காற்று
மெலிவது விளக்கே ஆகில்
மீண்டுமக்காற்றே கூற்றாம்.

அலகிலா மறைவிளங்கும் அந்தணரா
குதிவிளங்கும்
பலகலையாம் தொகைவிளங்கும் பாவலர்தம்
பாவிளங்கும்
மலர்குலாம் திருவிளங்கும் மழைவிளங்கும்
மனுவிளங்கும்
உலகெலா மொளிவிளங்கும் உழவருழும்
உழவாலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கொண்டுவிண் படர்கருடன் வாய்க்கொடு
  வரிநாகம்
  விண்ட நாகத்தின் வாயினில் வெகுண்டரவின்
  தேரை
  மண்டு தேரையின் வாயினில் அகப்படுவண்டு
  பண்டு தேனுகர் இன்பமே மானிடர்இன்பம்.

- கற்பூரப் பாத்திகட்டி கஸ்தூரி எருப்போட்டு
  கமழ்நீர் பாய்ச்சிப்
  பொற்பூர உள்ளியினை விதைத்தாலும்
  அதன்குணத்தைப் பொருந்தக் காட்டும்
  சொற்பேதையருக்கு இங்கு அறிவு இனிதாக
  வருமெனவே சொல்லினாலும்
  நற்போதம் வராதங்கு அவர்குணமே
  மேலாக நடக்குந்தானே.

## 50. தீயவை தீயினும் அஞ்சப் படும்

- தீயவை தீய பயத்தலால் தீயவை
  தீயினும் அஞ்சப் படும். - குறள்

- கெடுவல்யான் என்பது அறிக தன்நெஞ்சம்
  நடுஓரீஇ அல்ல செயின். - குறள்

- மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
  அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு. - குறள்

- வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
  நன்றி பயவா வினை. - குறள்

- வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
  தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது. - குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
  சூழினுந் தான்முந் துறும். - குறள்

- எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
  செல்வர்க்கே செல்வம் தகைத்து. - குறள்

- என்பொருள் என்பொருள் என்றுசீவன் விடுமனமே
  ஒன்று இயம்பக் கேளாய்
  உன்பொருளானால் அதன்மேல் உன்நாமம்
  வரைந்துளதோ உன்றனோடும்
  முன்பிறந்து வளர்ந்துகொல் இனி உனைவிட்டு
  அகலாதோ முதிர்ந்து நீதான்
  பின்பிறக்கும்போது அதுவும் கூடி இறந்
  திடும் கொல்லோ பேசுவாயே.
  - விவேக சிந்தாமணி

- மனத்துக்கண் மாசிலன்ஆதல் அனைத்து அறன்
  ஆகுல நீர பிற. - குறள்

- அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல்
  நான்கும்
  இழுக்கா இயன்ற தறம். - குறள்

- புத்திமான் பலவானாவான் பலமுளான்
  புத்தியற்றால்
  எத்தனை விதத்தினாலும் இடரது
  வந்தே தீரும்
  மற்றொரு சிங்கம்தன்னை வருமுயல்
  கூட்டிச்சென்றே
  உற்றதோர் கிணற்றில்சாயல் காட்டிய
  உவமைபோலே. - விவேக சிந்தாமணி

- தன்னைத்தான் பேணாதாலும் சரீரத்தின்
  தண்டிப்பாலும்
  பின்னுற்ற விசாரத்தாலும் பின்சல
  மலத்தினாலும்
  அன்னத்தை ஒறுப்பதாலும் அரையுடல்
  முழுகலாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மத்தை இகழ்தலாலும் சரீரத்தில் வியாதி
தோன்றும். - விவேக சிந்தாமணி

- புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும். - குறள்

- மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார். - தனிப்பாடற் திரட்டு

- பண்பெனப்படுவது பாடறிந் தொழுகல்

- கற்றதொழுகு கற்றாங் கொழுகுக.

- துர்ப்புத்தி மந்திரியால் அரசுக் கீனம்
சொற்கேளாப் பிள்ளையால் குலத்துக் கீனம்
பழிக்கஞ்சாக் காவலனால் நாட்டுக் கீனம்
பாடறியாப் பாலனால் பாட்டுக்கீனம்.

- பசித்தோர்க் குதவாது பதுக்கிவைத்த
தேட்டங்கள்
பாவியரின் சொத்தாகிப் பஞ்சாய்ப் பறந்திடுமே
ஏழைகட் குதவாது ஈட்டிவைத்த தேட்டங்கள்
ஈனர்தம்வசம் சேர்ந்து எவருக்கும் உதவாதே
- பழைய பாடல்

- எப்போதாகிலும் கூற்றுவன் வருவான்
அப்போதந்தக் கூற்றுவன் தன்னைப்
போற்றவும் போகான் பொருளொடும் போகான்
சாற்றவும் போகான் தமர்பிறர் பாரான்
இளையோர் முதியோர் தக்கோர் தகவிலோர்
அரசன் ஆண்டி அறிஞன் மூடன்
பிணியுற்றோ ரற்றோர் நல்லோர் தீயோர்
வறியோர் செல்வர் என்றின்ன பேதங்கள்
எவையும் பாரான் உடன் கொண்டு செல்வான்
ஏதுக்கழுவீர் ஏழை மாந்தர்காள்!- பழைய பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 51. மக்கட் பண்பு

- நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
  வாளது உணர்வார்ப் பெறின். - குறள்
- நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
  மேற்சென்று செய்யப் படும். - குறள்
- கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
  சொல்லா நலத்தது சால்பு. - குறள்
- நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
  பண்புள பாடறிவார் மாட்டு. - குறள்
- அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்
  மக்கட் பண்பு இல்லாதவர். - குறள்
- ஏதிலார் குற்றம்போல் தன்குற்றம் காண்கிற்பின்
  தீதுண்டோ மன்னும் உயிர்க்கு. - குறள்
- வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
  பிறவுந் தமபோற் செயின். - குறள்
- வீடிருக்கத் தாயிருக்கவேண்டு மனையாளிருக்க
  பீடிருக்க வூணிருக்கப் பிள்ளைகளும் தாமிருக்க
  மாடிருக்கக் கன்றிருக்க வைத்த பொருளிருக்க
  கூடிருக்க நீபோன கோலமென்ன கோலமே.
- கண்ணாரக் காண்பதுவும் பொய் காதாரக்
  கேட்டதும் பொய்; தீர விசாரித்து
  அறிவதே மெய். - தமிழ் முதுமொழி
- நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்
  பண்பறிந் தாற்றாக் கடை. - குறள்
- இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை
  இல்லாளும் இல்லாளே ஆமாயின் - இல்லாள்
  வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்
  புலிகிடந்து தூறாய் விடும்.
  - மூதுரை, ஔவையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பீல்பெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
  சால மிகுத்துப் பெயின். - குறள்

- வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
  கேள்போல் பகைவர் தொடர்பு. - குறள்

- அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
  வியந்தான் விரைந்து கெடும். - குறள்

- ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
  போற்றினும் பொத்துப் படும். - குறள்

- மீதூண் விரும்பேல் - ஆத்திசூடி, ஔவையார்

- நம்பன் அடியார்க்கு நல்காத் திரவியங்கள்
  வம்புக்காம் சூதுக்காம் வஞ்சகர்க்காம் என்றும்
  விலைமகட்காம் வீணர்க்காம் வெந்தீக்காம்
  என்றே கொலைநெடுவேற் கண்ணே குறி.
  - தனிப்பாடல்

- கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
  அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து. - குறள்

- ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
  போஒம் அளவுமோர் நோய். - குறள்

- திருவுறு கின்றுழி மகிழ்ந்துந் தீர்வுழிப்
  பருவர லெய்தியும் பாசந் தன்னிடை
  அரிதுணர் கேள்வியர் அழுங்குவார் கொலோ
  வருவதுவரும் அது மறுக்கலாகுமோ.
  - கந்தபுராணம்

- அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்
  உள்ளழிக்க லாகா அரண். - குறள்

- அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
  அஃதறி கல்லா தவர். - குறள்

- அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது
  அஞ்சல் அறிவார் தொழில். - குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எதிரதாக் காக்கும் அறிவனார்க் கில்லை
  அதிர வருவதோர் நோய். - குறள்
- அறிவுடையார் எல்லாம் உடையர் அறிவிலார்
  என்னுடைய ரேனும் இலர். - குறள்
- ஒன்றொரு பயன்தனை உதவினோர் மனம்
  கன்றிட ஒருவினை கருதிச் செய்வரேல்
  புன்தொழில வர்க்கு முன்புரிந்த நன்றியே
  கொன்றிடுமல்லது கூற்றும் வேண்டுமோ.
  - கந்தபுராணம்

## 52. எண்ணித் துணிக கருமம்

- எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
  எண்ணுவ மென்பது இழுக்கு. - குறள்
- செயத்தக்க அல்ல செயக்கெடும் செயத்தக்க
  செய்யாமை யானும் கெடும். - குறள்
- தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச்
  செய்வார்க்கு
  அரும்பொருள் யாதொன்றும் இல். - குறள்
- உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
  இடைக்கண் முரிந்தார் பலர். - குறள்
- ஆகாறு அளவிட்டிதாயினும் கேடில்லை
  போகாறு அகலாக் கடை. - குறள்
- அருவினை என்ப உளவோ கருவியான்
  கால மறிந்து செயின். - குறள்
- ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
  கருதி இடத்தாற் செயின். - குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எய்தற்கரியது இயைந்தக்கால் அந்நிலையே
  செய்தற் கரிய செயல். - குறள்

- நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
  நீங்கின் அதனைப் பிற. - குறள்

- அஞ்சாமை அல்லால் துணைவேண்டா
  அஞ்சாமை
  எண்ணி இடத்தால் செயின். - குறள்

- காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா
  வேலான் முகத்த களிறு. - குறள்

- தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
  தூங்காது செய்யும் வினை. - குறள்

- முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும்
  படுபயனும் பார்த்துச் செயல். - குறள்

- எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்
  உட்பகை உள்ளதாம் கேடு. - குறள்

- உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கருள்
  பாம்போடு உடனுறைந் தற்று. - குறள்

- அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
  செறுவார்க்கும் செய்தல் அரிது. - குறள்

- எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை
  வீயாது பின்சென்று அடும். - குறள்

- விடங்கொண்ட மீனைப்போலும்
  வெந்தழல் மெழுகுபோலும்
  படங்கொண்ட பாந்தள்வாயிற்
  பற்றிய தேரைபோலும்
  திடங்கொண்ட ராமபாணம்
  செருக்களத் துற்றபோது
  கடன்கொண்டார் நெஞ்சம்போலக்
  கலங்கினான் இலங்கை வேந்தன்.
  - கம்பராமாயணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நெஞ்சினும் நினைப்பரோ நினைந் துளோர்தமை
எஞ்சிய துயரிடை ஈண்டை உய்த்துமேல்
விஞ்சிய பவக்கடல் வீழ்த்து மாதலால்
நஞ்சினும் தீயது நலமில் காமமே.
- கந்தபுராணம்

- சொல்லொணாத் துன்பங்கள், பேராபத்துக்கள் நிறைந்துவரும் கடும் சோதனைக் காலங்களிலே தான் யோகர் சுவாமிகளின் ஆப்த வாக்கியங்களின் இரகசியத்தை உணரலாம். "எப்போதோ முடிந்த காரியம்; முழுவதும் உண்மை; ஒரு பொல்லாப்பும் இல்லை; நாமொன்றும் அறியோம்"
- யோகர் சுவாமிகள் பற்றிய சிந்தனை

- உனது மனதில் பலவிதமான எண்ணங்கள் எப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கும். ஆனால், எல்லா எண்ணங்களுக்கும் சொல் வடிவம் கொடுத்து விடாதே. - அரவிந்தர்

- உள்ளம் பெருங்கோவில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.
- திருமந்திரம்

- உடம்பார் அழியின் உயிரார் அழிவார்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்மை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.
- திருமந்திரம்

- வேதாந்தம் சித்தாந்தத்தின் வேறன்று. "வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம்" என்றார் உமாபதி சிவம். வேதமுடன் ஆகமம், புராணம், இதிகாச முதல் வேறுள கலைகளெல்லாம் கற்றும் அமைதி பெறாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கதிப்பாற் செல்ல ஏதுநெறி யெனுமவற்கு" ஒரு அற்புதமான கதி இருக்கிறதென்பதையும் காட்டி அதை அடையும் வழியையும் காட்டுவது சைவ சித்தாந்தம். - சித்தாந்தத் தெளிவு

# அனுபந்தம்

## 1. திருமூலர் திருமந்திரத் தெள்ளமுதம்

1. உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.

2. பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்பாருமின்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய்
வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசுவைந்தும் பாலாய்ச் சொரியுமே.

3. கண்காணியில் லென்று கள்ளம்பல செய்வார்
கண்காணியில்லா இடமில்லை காணும்கால்
கண்காணியாகக் கலந்தெங்கு நின்றானைக்
கண்காணி கண்டார் களவொழிந்தாரே.

4. உடம்பார் அழியின் உயிரார் அழிவார்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.

5. யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. உள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன்
என்பவர்க்கு
உள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன்
எம்மிறை
உள்ளத்தும் இல்லை புறத்தில்லை
என்பவர்க்கு
உள்ளத்தும் இல்லை புறத்தில்லை தானே.

## 2. மனிதா சிந்திப்பாய்

### கீதையின் உபதேசம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ
அதுவும் நன்றாகவே நடக்கும்.

உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்?
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருக்கிறாய்?
அதை வீணாக்குவதற்கு?

எதை நீ எடுத்துக்கொண்டாயோ அது
இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை நீ கொடுத்தாயோ அது இங்கேயே
கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ அது நாளை
மற்றவனுடையதாகிறது.
மற்றொருநாள் அதுவே
வேறொருவனுடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார்

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து
 பட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டு ஓடியாடி
 முடிந்த பின்
செத்துக் கிடக்கும் பிணத்தருகே இனிச்
 சாம்பிணங் காள்
கத்தும் கணக்கென்ன காண்
 கயிலாயபுரிக் காளத்தியே.

## சம்பந்தர்

தந்தையார் போயினார் தாயாரும் போயினார்
 தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார்
 பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற்கே மனம் வைத்தியால்
 ஏழைநெஞ்சே
அந்தண் ஆரூர்தொழு துய்யலாம்
 மையல்கொண்டு அஞ்சல் நெஞ்சே!

## [redacted] சுந்தரர்

வாழ்வாவது மாயம் இது
 மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல்
 பசிநோய் செய்தபறிதான்
தாழாதறஞ் செய்மின்தடங்
 கண்ணான் மலரோனும்
கீழ்மேலுற நின்றான் திருக்
 கேதாரமெ னீரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. மனமே உனக்கு உபதேசம் இதோ!

## தாயுமானவர்

1. எல்லாம் உன் அடிமையே; எல்லாம் உன் உடைமையே;
எல்லாம் உன்னுடைய செயலே.
எங்கணும் வியாபி நீ என்று சொலும் இயல்பு
என்று இருக்கு, ஆதி வேதமெல்லாம்
சொல்லால் முழக்கியது;
மிக்க உபகாரமாய்ச் சொல் இறந்தவரும்
விண்டு சொன்னவையும் இவை,
நல்ல குருவான பேரும் தொகுத்தநெறி
தானும் இவையே அல்லாமல் இல்லையென
நன்றா அறிந்தேன்;
அறிந்தபடிநின்று சுகம் நான்
ஆகாதவண்ணமே இவ்வண்ணம் ஆயினேன்;
அதுவும் நினது அருள் எனவே
கல்லாத அறிஞனுக்கு உள்ளே
உணர்த்தினை; கதிக்கு வகை ஏது
புகலாய்? கருதரிய சிற்சபையில் ஆனந்த
நிர்த்தமிடு கருணாகரக் கடவுளே!

2. வேதாந்தம் சித்தாந்தம் வேறென்னார் கண்களிக்கும்
நாதாந்த மோன நலமே பராபரமே.

## சித்தர் பாடல்

தூங்கையிலே வாங்குகிற மூச்சு – சற்று
சுழிமாறிப் போகையிலே போனாலும் போச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குறள்

கெடுவல் யானென்பதறிக தன்னெஞ்சம்
நடுவொரீஇ அல்ல செயின்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

மனத்துக்கண் மாசிலன்ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற.

தன்னநெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்.

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்.

சென்ற இடத்தால் செலவிடாது தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு.

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப
கோடியும் அல்ல பல.

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சம்பந்தர்

நீநாளும் நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம்
பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்ப புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே
நல்வினையே.

### அப்பர்

நடலை வாழ்வுகொண் டென்செய்திர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற் பிரமாணமே
கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால்
உடலினார் கிடந் தூர்முனி பண்டமே.

### நாலடியார்

பிறர்மறையின் கண்செவிடாய்த் திறனறிந்து
ஏதிலார் இல்கண் குருடனாய்த் - தீய
புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாதும்
அறங்கூற வேண்டா அவற்கு.

## 4. சிந்தனை செய் மனமே

1. அன்றுகொல் இன்றுகொல் என்றுகொல்
என்னாது
பின்றையே நின்றது கூற்றம் - என்றெண்ணி
ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையால்
மருவுமின் மாண்டார் அறம். - ஔவையார.

2. நம்பன் அடியார்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தைக்காம் -
வம்புக்காம்
கொள்ளைக்காம் கள்ளுக்காம் கோவுக்காம்
சாவுக்காம்
கள்ளர்க்காம் தீயர்க்காம் காண்.- ஔவையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயுமானவர்

ஆசைக்கோர் அளவில்லை அகிலமெலாம்
கட்டி ஆளினும் கடல்மீதிலே
ஆணைசெலவே நினைவர் அளகேசன்
நிகராக அம்பொன் மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக்கு அலைந்திடுவார்
நெடுநாள் இருந்தபேரும்
நிலையாகவே இன்னும் காயகற்பம் தேடி
நெஞ்சுபுண் ஆவர் எல்லாம்
யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்
உறங்குவதும் ஆகமுடியும்;
உள்ளபோதும் நான்நான்எனக் குளறியே
ஒன்றைவிட்டு ஒன்று பற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனது அற்ற
பரிசுத்த நிலையை அருள்வாய்;
பார்க்குமிடமெங்கும் ஒரு நீக்கமற
நிறைகின்ற பரிபூரணா னந்தமே!

## திருக்குறள்

பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

ஒல்லும் பொருளால் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்.

## கந்தபுராணம் (இது பானுகோபன், தந்தை சூரபத்மனுக்குச் சொன்ன புத்திமதி)

நெடிதுபற்பகல் சொல்லினும் நிரம்புவ தொன்றை
இடைவிடாமலே முயன்று பெற்றிடுகின்றது
இயற்கை உடல்வருந்தியும் தங்களால் முடிவுறா
தொன்றை முடியும்ஈதெனக் கொள்வது கயவர்
தம்முறையே.

## முதுமொழி

அற்றது பற்றெனில் உற்றது வீடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவருட்பயன் - உமாபதி சிவாச்சாரியார்

ஆணவம் இருளிலும் கொடியது:

ஒருபொருளும் காட்டாது இருள் உருவம்
காட்டும் இருபொருளும் காட்டாது இது.

## திருமந்திரம்

ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்
ஆசைப் படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே.

பண்டம் பெய்கூரை பழகி விழுந்தக்கால்
உண்ட அப்பெண்டிரும் மக்களும்
பின்செலார்கொண்ட விரதமும் ஞானமும்
அல்லது மண்டி அவருடன் வழிநடவாதே.

கண்காணி யில்லென்று கள்ளம் பலசெய்வார்
கண்காணி யில்லா இடமில்லை காணும்கால்
கண்காணி யாகக் கலந்தெங்கும் நின்றானைக்
கண்காணி கண்டார் களவொழிந் தாரே.

உள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் என்பார்க்கு
உள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் எம்மிறை
உள்ளத்தும் இல்லை புறத்தில்லை என்பார்க்கு
உள்ளத்தும் இல்லை புறத்தில்லை தானே.

உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை
உள்ளம் விட்டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறி யாதே.


மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராமசாமி கிருஷ்ணபிள்ளை அவர்கள் யாழ்ப்பாணம் ஸ்ரான்லிக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

கனடாவுக்குப் புலம்பெயர்ந்து வாழும் காலத்தில் அவர் வாசித்துக் குறிப்பெடுத்த விடயங்களைச் சேகரித்து வைத்திருந்தார். அவரின் அறிவுத் தேட்டங்கள் வீணே எறியப்பட்டுவிடக் கூடாது என்பதற்காகவும், திரு.கிருஷ்ணபிள்ளை அவர்களால் ஆன்மீக உணர்வின் அடிப்படையில் சேர்த்து வைக்கப்பட்ட விடயங்கள் ஏனையோருக்கும் பயன்பட வேண்டும் என்ற நல்ல நோக்கம் கருதியும், இதனை புத்தகமாக்க வேண்டுமென முன்னாள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தமிழ்ப் பிரிவு அத்தியட்சகர் திரு.C.V.இராஜசுந்தரம் அவர்கள் விரும்பியதன் காரணமாக அவரது நோக்கம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

திருவாளர் கிருஷ்ணபிள்ளை அவர்கள் ஒரு ஆன்மீகவாதி. அவரது சிந்தனை அமுதத் துளிகள் என்ற இந்தத் தொகுப்பு, ஆன்மீக சிந்தனைகளையும் அறவழிச் செயற்பாட்டுக் குறிப்புக்களையும் உள்ளடக்கமாகக் கொண்டிருக்கிறது.

நல்லறிஞர்கள் பிறந்து வளர்ந்த யாழ்ப்பாணம் நல்லூரில் வாழ்ந்த இவரது வாழ்க்கைக் காலத்தின் நற்பணிகளில், இறையின்பமும் பேரறிஞர் சகவாசமும் அவரது சிந்தனையிலும் செயலிலும் தெளிவு ஏற்படுத்தி இருந்ததனை இத் தொகுப்பின்வழி உணர்ந்து கொள்ள முடிகிறது. இப்புத்தகத்தில் அவர் சேகரித்துள்ள ஒவ்வொரு தேன்துளியும் எல்லோருக்கும் சுவையூட்டும் வண்ணம் அமையப் பெற்றுள்ளன.

அப்புக்குட்டி கணபதிப்பிள்ளை
முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org